
# இந்து தருமம் 2005



## இந்து மாணவர் சங்கம்
## 2005-2006
## குறிஞ்சிக் குமரன் கோவில்
## பேராதனைப் பல்கலைக்கழகம்

230.6
இந்து
SL/PR



உ

சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

# இந்து தருமம் 2005

இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

# Hindu Dharmam 2005

Hindu Students' Union
2005
University of Peradeniya,
Peradeniya.

| | | |
|---|---|---|
| நூல் | : | இந்து தருமம் - 2005 |
| இதழாசிரியர்கள் | : | வி. மன்மதராஜன் (பொறியியற் பீடம்)<br>கு. சாந்தகுமாரன் (கலைப் பீடம்) |
| வெளியீடு | : | இந்து மாணவர் சங்கம்,<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| பிரதிகள் | : | 500 |
| அட்டைப்படம் | : | செல்வன் பா.சங்கர் |
| அச்சுப்பதிப்பு | : | வினோ அச்சகம் |
| Title | : | Hindu Dharmam - 2005 |
| Editors | : | V.Manmatharajan<br>(Faculty of Engineering)<br>K.Shanthakumaran<br>(Faculty of Arts) |
| Published By | : | Hindu Students' Union<br>University of Peradeniya,<br>Peradeniya. |
| Copies | : | 500 |
| Cover Design | : | Mr. B.Shangar |
| Printed By | : | Vino Printers |

# காப்பு

கலைமாதும் திருமாதும் கனிந்தே வாழும்
கவின் பேராதனை நகரிற் கோயில் கொண்டு
நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே யருளுஞ் சேந்தன்
தலையான தண்டமிழின் ஊஞ்சலேறித்
தமிழ் குறிஞ்சிக் குமரனவன் கனிந்தே அருள
மலைமீதில் பாரத்தை எழுதும் ஞான
மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே

# இதழாசிரியரின் எண்ணத்திலிருந்து
# இந்து தருமத்தின் வண்ணங்கள்...

**சரவண பவனுக் குயர் துணைவனை மனதிலே இருத்தி...**

உலக வரை படத்தில் உற்று நோக்க வேண்டிய உன்னத தீவிலே உயர்ந்து நிற்கும் மலையகத்திலே இயற்கை சூழல்கள் இரசிக்க வைக்க, மகாவலி கங்கை சலசலத்திட காலநிலை கூட கண்ணியமாய் இருக்க, சுற்றாடலில் இவை அனைத்தையும் கொண்டு பழமையுடன் பெருமையையும் கொண்டு விளங்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இந்து சமயத்தை வளர்க்க அமைக்கப்பட்டதே இந்து மாணவர் சங்கம்.

ஆன்மீக வளர்ச்சிக்கும், கலை கலாசார உயர்ச்சிக்கும் இந்து மாணவர் சங்கத்தினரால் அமைக்கப்பட்டதுதான், சரசரவென வளர்ந்து நிற்கும் சவுக்கு மரங்களுக்கும், நறுமணம் வீசும் சந்தன மரங்களுக்கும் நடுவிலே எழிலுடன் நிமிர்ந்து நிற்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயம்.

ஆலயத்தை ஆதாரமாக கொண்டு ஆண்டுதோறும் இந்து மாணவர் சங்கத்தினரால் மொட்டவிழ்க்கப்படுவதே இந்து தருமம் எனும் மலர். உங்களின் கையிலே சத்தமின்றி தவழ்ந்து கொண்டிருக்கின்ற புதிய இந்து தருமமானது ஆறு இயல்களை இதழ்களாக கொண்டு மலர்கின்றது.

அரிதான மானிடப் பிறவி எடுத்த மனிதன் வாழ்வாங்கு வாழ வாழ்வியல், ஆன்மீக வாழ்வில் வழிவகுக்கும், ஒழுங்கு சட்டம் போன்றவை சமூகவியலிலும், ஆராயப்பட்டவை, ஆய்வியலிலும், மாணவர்களின் பொதுவான சில படைப்புக்கள் படைப்பியலிலும், ஆலயம் சம்பந்தமான பதிவுகள் பதிவியலிலும், வாழ்த்தியலுமாக ஆறு இதழ்களாக ஆறுமுகப் பெருமானுக்கு படைக்கின்றோம் இவ்விதழை.

மன்னித்தருளும் ஆண்டவன் இவ்விதழில் அடியேன் அறியாது ஏதும் தவறுகள் விட்டு இருப்பின் மன்னிப்பான் என்ற அன்பான துணிவோடும், நீங்களும் அவற்றை ஏற்பீர்கள் எனற துணிவோடும் இப்படையலை அர்ப்பணிக்கின்றோம்.

அழகான ஆறு இதழ்களை வடிவமைக்க உதவி செய்த பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

**இதழாசிரியர்,**
**வி. மன்மதராஜன் (பொறியியற்பீடம்)**

# இந்து தருமம் மலரின் இதழ்களில் வடிவமைக்கப்பட்டவை


**1. வாழ்த்தியல்**

1. ஆலயப்பிரதமகுரு ஆசி வழங்குகின்றார்.
2. நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரை
3. இராமகிருஷ்ண முதல்வரின் வாழ்த்துரை
4. துர்க்கா துரந்தரியின் அருளாசி
5. Message form Vice Chancellor
6. ஆறு திருமுருகனின் ஆசியுரை
7. இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர் வாழ்த்துகிறார்
8. இந்து மாணவர் சங்கப் பெரும் பொருளாளர் வாழ்த்துகிறார்
9. இந்து மாணவர் சங்க கௌரவ கணக்காளர் வாழ்த்துகிறார்
10. பொறுப்பாண்மைக் குழு தலைவர் வாழ்த்துகிறார்
11. இந்துப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் வாழ்த்துகிறார்
12. இந்து மாணவர் சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து

**2. வாழ்வியல்**

1. நம் உடம்பே ஆலயம்
2. சௌரவ வழிபாடு
3. ஆன்மீக வாழ்வு
4. காயமே கோயிலாக
5. சைவத்தமிழர் வாழ்வியலில் தாய்மை
6. கிராமிய வழிபாட்டில் கண்ணகி
7. திருவாசகமென்னுந்தேன்

**3. சமூகவியல்**

1. இந்து மதமும் இந்து மானுடமும்
2. தமிழ் இலக்கியத்தில் மடலேறுதல்
3. புதைந்து கொண்டிருக்கும் எமது கலாசாரம் கட்டியெழுப்பப்படுவது எப்போது
4. சட்டமும், சமூகமும்
5. நமது கலை, கலாசாரம் எங்கே போகின்றன

**4. ஆய்வியல்**

1. இந்து மதம் கூறும் அரசியல் சிந்தனைகள்
2. திருவாசகம், கிறிஸ்தவம், மேலைத்தேசம் ஒரு பண்பாட்டுக் கலப்புப் பார்வை
3. மகாகவி பாரதியும், ஆத்மீக அடித்தளமும்
4. பொலநறுவைக் கால வெண்கலப் படிமங்கள்

**5. படைப்பியல்**

1. குன்றத்து வேலனே குறிஞ்சிக்குமரா
2. குறிஞ்சிக் கோலங்கள்
3. அருள் புரிவாய் கதிர்வேலா
4. நாம் ஏன் விளக்கு ஏற்றுகின்றோம்
5. மன்னிக்க வேண்டுகின்றோம்
6. அன்பின் நிலையது உயர்வு


**6. பதிவியல்**

1. ஆண்டறிக்கை

***இவற்றுடன்***

# குறிஞ்சிச் சாரல் பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி

தொகுப்பு : வி. மன்மதராஜன்



# அட்டைப்படக் கவிதை

## 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

ஆண்டவனின் அருள் சுரக்கும் இடமும் ஆலயமே
ஆயிரம் அடியார்கள் நாடுகின்றனர் தினமும் அதையே

மனதிற்கு அமைதியான இடமும் இதுவே
சனத்திற்கு குறையாத இடமும் இதுவே

தமிழ்க் கலாசாரம் பேணப்படுவதும் இங்கேதான்
தமிழ்ப் பாரம்பரியம் வளர்க்கப்படுவதும் இங்கேதான்

*ஆனால் - இப்போது*

வேட்டி மறந்து ஜீன்ஸுடன் வருகின்றனர் - ஆண்கள்
சேலை மறந்து சட்டையுடன் வருகின்றனர் - பெண்கள்

கலாச்சாரங்களை மறக்கின்றார்கள்
பாரம்பரியங்களைத் தவிர்க்கின்றார்கள்

மறுப்போம், தவிர்ப்போம், இவற்றை
வளர்ப்போம், பேணுவோம் இவற்றை

அருள் படைத்த ஆண்டவனைத் தினம் நாடி
அறியாத பிழைகளைத் தீர்த்திட வேண்டி
கலை கலாச்சாரங்களை பேணி
அமைதி கொள்வோம் வாழ்க்கையில் ஆனந்தமாக........

வி. மன்மதராஜன்
(துன்னையூர் ராஜன்)
*மூன்றாம் வருடம் - பொறியியற் பீடம்*

# வாழ்த்தியல்

முந்து தமிழ் மாலை முத்தார வழகுடன்
சிந்தும் அருள்நிறையும் சிரிப்பழகு தவழ
வந்து அமர்ந்துகலை வளங்களும் தந்தருளுங்
கந்தனே கடம்பனே கார்த்தி கேயனே அருள்

- ந. வீரமணி ஐயர் -

# ஆலய பிரதம குரு ஆசி வழங்குகின்றார்

"ஓம் ஸ்ரீ கணேசாயநமஹ
ஓம் ஸாம் ஸகந்தாய கார்த்திகேயாய
பார்வதீ நந்தனாயச மகாதேவ குமாராய
குறிஞ்சிக் குமராயதே நமஹ"

இறைவன் திருவருளால் 1952 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேராதனைப் பலகலைக்கழக இந்து மாணவர் சங்கம், ஆன்மீக ஈடுபாடு செயற்பாடுகளை வளர்த்து, மனித நல்வாழ்வுக்கு சிறந்த பலமாகக்கருதப்படும் ஆத்ம பலத்தை விருத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றது.

புற அழுத்தங்களில் இருந்து விடுபடுதல், பலவீனங்கள் பதற்றங்களைப் போக்குதல், ஒற்றுமையை ஏற்படுத்தல், உள்ளத்தை தூய்மையாக்குதல், ஆக்கத்திறனை வளர்த்தல், நல்லொழுக்கம் பேணல் போன்ற நற்பண்புகளை வளர்த்து, இந்துக்களின் பாரம்பரிய கலை கலாசாரங்களை தொடர்ந்து முன்னெடுப்பதில் இந்து மாணவர் சங்கம் செயற்படுகின்றது.

இவர்களின் ஆன்மீக செயற்பாடுளின் உறைவிடமாக விளங்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் சரியை, கிரியை தொண்டுகள் புரிவதுடன், கல்வி கற்கும் காலத்தில் இறை அர்ப்பணமாக கடமைகளை செய்ய முனைவதால் கர்மயோகத்தின் பாலும் ஓரளவேனும் ஈடுபடுகின்றனர். அறிவு சார்ந்த நூல் வெளியீடு செய்வதன் மூலம் ஞான மார்க்கத்திலும் ஈடுபடுகின்றனர்.

புதிது புதிதாக வருகின்ற மாணவர்களிடம் தமது செயற்பாடுகளை கையளித்து புதிய தலைமுறையினருக்கு வழிகாட்டிகளாக விளங்குவதுடன், தாம் செல்லுமிடங்களில் இங்கு பழகிய ஆன்மீக செயற்பாடுகளை பல்வேறு இடங்களிலும் பல்வேறு நாடுகளிலும் வேரூன்றச் செய்கின்றனர்.

இவர்களால் வெளியிடப்பட்டுவரும் இந்து தருமம் நூலானது ஆன்மீக ஆக்கத்திறனை வெளிப்படுத்த பெரும் வாய்ப்பளிக்கும் ஒரு நூலாகும்.

பாரம்பரியங்களை பாதுகாப்பதுடன் நின்று விடாது, நவீன தொழில் நுட்ப உலகமயமாக்கலுக்கு ஏற்ப எமது ஆன்மீக கருத்துக்கள் வெளிப்பட்டு செயல்வடிவம் பெற்று உலகில் நல்வாழ்வும், மனித மேம்பாடும் தழைத்தோங்க எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருள் புரிவாராக எனப் பிரார்த்திக்கின்றேன்.

**சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம்**
**கல்வி மனப்பழக்கம்**
**நல்லநடத்தையும் நடைப்பழக்கம்**

சுபமஸ்து.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம்"**

குறிஞ்சிக்குமர சேவா சிரோன்மணி
சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள்
(பிரதம குரு)
குறிஞ்சிக்குமரன் கோயில்
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

# நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி...

அன்புசார் உள்ளங்களுக்கு,

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினரால் வெளியிடப்படும் 'இந்து தருமம்' எனும் சஞ்சிகை இவ்வருடமும் வெளியிடப்படுவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிதிலும் அரிதான மானிடப்பிறவிக்கு அடித்தளமாக அமைவது ஆன்மீகம். ஆன்மீகத்தை வளர்த்து விடுவது சமயமாகும். சமயம் ஒவ்வொன்றும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டியாக உள்ளது. அந்த வகையில் சமய, கலை கலாசாரங்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு இளந்தலைமுறையினடரிமே உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை மையமாகக் கொண்டு பல சமய நிகழ்ச்சிகளையும், வெள்ளிக்கிழமைதோறும் பஜனைகளையும் நடாத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே வருடாந்தம் வெளியிடப்படும் இந்து தருமம் நூல் அமைந்துள்ளது. பல அறிவு, சிந்தனைகளை தூண்டும் ஆன்மீக கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் தாங்கி வருவது யாவரும் அறிந்ததே. எனவே இந்த நூலை வெளியிட்டு வைக்கும் இந்து மாணவர் சங்கத்தினருக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் சஞ்சிகை சிறப்பாக வெளிவருவதற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**"என்றும் இறவாத அன்பு வேண்டும்"**

சுபமஸ்து.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்
2 வது குருமஹா சந்நிதானம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# இராமகிருஷ்ண மிஷன் முதல்வரின் வாழ்த்துரை

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வெளியிடும் 'இந்து தருமம்' - 2005ம் ஆண்டு மலருக்கு எங்கள் இனிய நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் இச்சங்கம், சிந்தனையைத் தூண்டும் பல நல்ல கட்டுரைகளை உள்ளடக்கியதாக இம்மலரை வெளியிட்டு வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்து சமயம் இன்று எதிர்நோக்கும் சவால்களைக் குறித்தும், இந்து சமய மக்களது இன்றைய தேவைகளைக் குறித்தும், மாணவர்கள் ஆழமாக சிந்திக்கிறார்கள் என்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் அந்த சிந்தனைகள் செயலாக மலர வேண்டியது இன்றைய அவசிய தேவை.

ஏழ்மையிலும், அறியாமையிலும் மூழ்கி நலிவுற்றிருக்கும் மக்களுக்கு சேவை செய்ய இளைஞர்கள் முன் வரவேண்டும்

இந்து தருமம்' இதழுக்கு ஆக்கங்களை அளித்த மாணவர்களுக்கும், மலர்க் குழுவினருக்கும் எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுவாமி ஆத்மகணானந்தா,<br>
இராமகிருஸ்ண மிஷன்,<br>
கொழும்பு.

# துர்க்கா துரந்தரியின்
# அருளாசி

தொல்காப்பியர் காலந்தொட்டு இன்று வரை இலக்கியங்களையும், புராணங்களையும் எடுத்துப் பார்ப்போமானால் அங்கு முருக வழிபாடு ஓங்கி நிற்பதைக் காணலாம். 'முன்னியது முடித்தலின் முருகொத்தீயே' என்பது பழந்தமிழ்ப் பாடல். 'முருகா என்று ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்' என்பது அருளாளரின் நம்பிக்கை.

பெருமான் இலக்கிய நாயகனாகவும், புராண நாயகனாகவும், பிள்ளைத் தமிழ் நாயகனாகவும், காவிய நாயகனாகவும் விளங்கி தமிழ் மக்களின் உள்ளங்களில் இடம் பெற்றுள்ளான். ஐவகை நிலங்களில் இவனுக்குரிய நிலம் குறிஞ்சியே. தொல்காப்பியம் முதல் இன்றுவரை எம்மவர் ஏற்றுக்கொண்டமை கண்கூடு. நிலங்களில் உயர்ந்த நிலத்தை தனது இருப்பிடமாகக் கொண்டவன் இவன். பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் ஆற்றி வருகின்ற சமயப்பணி மிகவும் பாராட்டுக்குரியது. ஆண்டு தோறும் மலர் வெளியிட்டு வாசிப்போர் உள்ளங்களில் ஒளி ஏற்றுகிறார்கள் இவர்கள்.

இந்தப் பணி காலந்தோறும் ஓங்கி உயர வேண்டும் என்று மனமாரப் போற்றுகிறேன். எங்கள் வாழ்வும், வளமும் சமயப் பாதையை நோக்கி நகரும் போது தான் அமைதியும், ஆனந்தமும் அடையலாம்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# Message from Vice Chancellor

It is with great pleasure that I send this message to the Hindu Students' Union of University of Peradeniya on the release of Annual Bulletin of HINDU DHARMAM - 2005.

The Hindu Students' Union has conducted many Cultural activities in support of its members and all those interested to exchange views and opinions on matters of mutual interest lending to the fostering of amity and understanding. I believe that creative writings and articles published in this magazine by Tamil speaking staff and students will help to broaden their vision of life and society and contributed considerably to the Tamil literary and cultural development in our country.

While congratulating the members of the Hindu Students' Union for their efforts and achievements I wish them every success in their future endeavours.

**Prof. Kapila G.A.Goonasekere**
Vice-chancellor,
University of Peradeniya,
Peradeniya.

# செஞ்சொற் செல்வரின்
# ஆசியுரை

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மன்றம் ஆண்டுதோறும் வெளியிடும் இந்து தருமம் நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கிறேன். கல்வியோடு கருணை வளர வேண்டும். கருணை வளர்ப்பதற்கு இத்தகைய ஆன்மீகப் பணிகளில் மாணவர்கள் இணைந்து பணியாற்றுவது போற்றுதலுக்குரியது.

ஒரு மதத்தின் சிறப்பினை அளக்கும் அளவீடுகளில் அம்மதத்தில் தோன்றிய சான்றோர்களின் எண்ணிக்கையும் முக்கியமானது. அவ்வகையில் எதிர்காலத்தில் எமது சமயத்தின் சான்றோர்களாக மிளிரப்போகும் பல்கலைக்கழக மாணவர்களின் ஒப்பற்ற, உன்னதமான இப்பணியை வாழ்த்துகிறேன். குறிஞ்சிக் குமரனின் திருக்கோயில் பணியோடு வரலாற்றுப் பதிவாக மன்றம் வெளியிடும் இந்து தருமம் மிகச் சிறந்த ஆவணமாக மதிக்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில் இவ்வாண்டு மலரும் மகிமை நிறைந்த மலராக இம் மலர் மலர வாழ்த்துவதோடு, இறையருளால் மன்றப்பணிகள் மேன்மையுற நல்லாசி கூறி அமைகிறேன்.

செஞ்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# இந்து தருமம் – 2005

# பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்தில் முருக வழிபாட்டில் மிகவும் சிறப்பான ஆலயமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் குன்றில் குடியிருக்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயம் விளங்கி வருகின்றமை யாவரும் அறிந்த உண்மை. இவ் ஆலயத்தை இந்து மாணவர் சங்கத்தினர் தாமே முற்றுமுழுதாக சைவநெறி முறை தவறாது சிறப்பாக நடாத்தி வருவது எமது இந்து சமயப் பண்பாடு நிலைத்து நிற்கும் என்பதற்குச் சான்று பகர்கின்றது.

எவ்வித தடைகள் வந்தாலும் இந்து மாணவர் சங்கத்தினர் முருகன் மீது தாம் கொண்ட பக்தியால் பல நற்பணிகளை ஆற்றி வருகின்றனர். முக்கியமாக நிதி நெருக்கடிகளுக்கு உள்ளான மாணவர்களுக்கு ஒரு நிதியத்தை கடந்த எட்டு ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். இதற்காக இவ்வருடம் இந்து மாணவர்கள் கால நெருக்கடி இடர்பாடுகளின் மத்தியில் மற்றைய சங்கங்களின் துணையுடன் கொழும்பு நகரில் சிறப்பாக குறிஞ்சிச்சாரல் என்ற நிதி திரட்டும் பணியை நடத்தி இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி வருகின்றமை பாராட்டிற்கும் மேலான செயலாகும்.

மேலும் தமது சமய கடமைகளில் ஒன்றாக வருடம் தோறும் இந்து தருமம் என்ற நூலை வெளிக்கொண்டு வருகின்றனர். இவ் ஆண்டு மாணவர்களின் இம் முயற்சியில் வெற்றி கண்ட இவ்மலரின் ஆசிரியருக்கும், ஆக்கங்களை அளித்தவர்களுக்கும், எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிஞ்சிக்குமரனின் புகழ், இவ்வையகத்தில் பரவி எமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் இந்து மதம் மங்காது துலங்க வேண்டும் என குறிஞ்சிக்குமரனின் அடியைத் தொழுது அவனின் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்"

கலாநிதி செ. திருச்செல்வம்,
பெருந்தலைவர் - இந்து மாணவர் சங்கம்.

# பெரும் பொருளாளர் வாழ்த்துகிறார்

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான இந்து தருமம் இம் முறையும் வெளிவருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்கலைக்கழகம் ஒன்றில் மாணவர்களது இருப்பு (Curriculam) என்பது வெறுமனே கலைத்திட்டங்களுடன் மட்டுப்படுத்தப்படுவதல்ல. அந்த எல்லைகளையும் மீறி அவர்கள் தம்மை செயற்பாட்டாளர்களாக இனங்காட்டுகிறபோதே அவர்களது ஆளுமை வெளிப்பாடு பூரணத்துவம் அடையும். அந்த செயற்பாடு என்பது கலை, பண்பாடு மற்றும் எதனிலும் அது பிரதிபலிக்கலாம். இந்த வகையில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் குழாம் தம்மை பண்பாட்டுப் பற்றாளர்களாகவும், கட்டியெழுப்புவதில் முன்னிற்கிறார்கள் என்பதையே இந்த செயற்பாடு கோடிட்டுக் காட்டுகிறது. சஞ்சிகை வெளியீடு மட்டுமல்ல குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் உள்ளகக் கட்டமைப்பிலும் அதன் இயங்கு நேர்த்தியிலும் அவர்கள் தீவிரமான உழைப்பாளர்களாகவும், தம்மை இனங்காட்டி வருகின்றனர். இன்றைய உலகமயமாதல் சூழலில் தம்மை போலிகளாக இனங்காட்டாமல், நாமும் நமக்கென்றோர் பண்பாட்டையுடையோம் என்ற ஆத்மநேயத்துடன் அவர்கள் தொழிற்படுவதும் அந்தப் பாரம்பரியத்தை தொடர்ந்து வரும் தலைமுறைக்குக் கையளிப்பதுமான இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் பேராதனைப் பல்கலைக்கழகத்து இந்து மாணவர் சமூகத்தில் பேணப்பட வேண்டும் என்பதே எனது அவா. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் நிலைபெற குறிஞ்சிக்குமரன் அருள் வேண்டி நிறைவு செய்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

செ. சிவராஜசிங்கம்,
பெரும் பொருளாளர் - இந்து மாணவர் சங்கம்,
சிரேஷ்ட விரிவுரையாளர், (பொருளியற்துறை)
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# கௌரவ கணக்காளரின்

# ஆசியுரை

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி"

தென்னகத்தில் தோன்றிய இந்து சமயமானது இன்று உலகம் பூராகவும் "ஆல் போல் தளிர்த்து அறுகுபோல் வேரூன்றி" இருக்கின்றது என்பது மிகையல்ல. உலகத்தின் எந்த ஒரு பாகத்திற்கு சென்றாலும் அங்கே இந்துக்கள் மட்டுமன்றி அவர்களால் கோயில்கள் அமைக்கப்பட்டு இந்துக்கலாசாரம் பேணப்படுகின்றது என்பது பெருமைக்கூடிய ஒன்று. இவ்வாறு இந்து கலாசார விழுமியங்களை பாதுகாப்பதற்கு இந்து சமய நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகின்றது. அந்த வகையில் இந்நிறுவனங்களால் கோயில்கள் நிர்வகிப்பது அங்கு நடைபெறும் பூஜைகள், திருவிழாக்கள், விஷேட தினங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தல் இந்துக்களின் கலாசார தினங்களில் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி என்பவற்றை கொண்டாடுதல் போன்ற பல பணிகள் ஆற்றப்படுகின்றது.

அந்த வகையில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமானது பல்கலைக்கழக மாணவர்களிற்கு மட்டுமன்றி கோயில் சுற்றாடலில் உள்ள மக்களிற்கு பல பணியாற்றுகின்றது. குறிஞ்சிக்குமரன் ஆலயமானது பல்கலைக்கழக இந்து மாணவர்களால் நிர்வகிக்கப்படுவது மட்டுமன்றி அங்கு நடைபெறும் சமய சம்பந்தமான கலாசார நிகழ்வுகளும் அவர்களால் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருவது பெருமைப்படக்கூடிய ஒன்று. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் செயற்பாடும், அவர்கள் இந்து கலாசாரத்தை பேணுகின்ற தன்மையும் இச்சங்கத்தினால் இந்து சமய விஷேட தினங்களின் போது நடாத்தப்படும் கலாசார நிகழ்வுகள் மூலம் நாட்டிலுள்ள இந்துக்கள் அனைவருக்கும் ஓர் ஊக்கத்தினை கொடுத்துள்ளது என்பது மிகையாகாது. இச்சங்கத்தின் பணிகள் மென்மேலும் வளர எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் அருள் புரிவாராக.

கலாநிதி வே. சிவகுமார்,
பௌதீகவியற்றுறை,
விஞ்ஞானபீடம்.

# பொறுப்பாண்மைக் குழு தலைவரின்
# ஆசியுரை

பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோயில் வளர்ச்சிக்கு பொறுப்பாண்மைக் குழுவுடன் இணைந்து பணியாற்றி வரும் இந்து மாணவர் சங்கத்தினரின் மற்றுமோர் செயற்பாடான 'இந்து தருமம்' இவ்வருடம் வெளிவருவதினையிட்டு பொறுப்பாண்மைக் குழு தலைவர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் குறிஞ்சிக்குமரன் கோயிலுக்கு இடைவிடாது அயராது ஆற்றிவரும் தொண்டுகள் அளப்பரியன. குமரனின் திருக்கோயில் நித்திய, நைமித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெறுவதற்கும், சமய சம்பந்தமான விழாக்கள், சமய நிகழ்ச்சிகள் என்பவற்றை செவ்வனே நடத்துவதற்கும் முன்னின்று சேவையாற்றி வருகின்றனர்.

அத்துடன், இந்து மாணவர் சங்கம் ஆலயம் சார்ந்த சமயப்பணிகளுடன் தனது சேவையினை முடித்துக்கொள்ளாமல் சமூக நலனிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

மேலும், பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் தடங்கலின்றி கல்வி கற்று வித்தகர்களாக வெளியேற வேண்டுமெனும் பேரவாவில் புலமைப்பரிசில்களையும் வழங்கி வருகின்றமை பராட்டப்பட வேண்டிய உன்னத செயலாகும்.

இந்நிலையில் இந்து மாணவர் சங்கத்தின் 'இந்து தருமம்' மலர் புதுமெருகும், புதுப்பொலிவும் பெற்று விளங்கவும், சங்கத்தின் சமய, சமூகச் சேவைகள் மேலும் சிறப்புற்று விளங்கவும் குறிஞ்சிக்குமரன் அருள் புரிவாராக.

பேராசிரியர் சே. சிவயோகநாதன்,
தலைவர் - பொறுப்பாண்மைக் குழு.

# இந்துப்பட்டதாரிகள் மன்றத் தலைவரிடமிருந்து

# ஆசிச்செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் செயற்படுகின்ற பொறுப்பாண்மைக்குழு, இந்துப்பட்டதாரிகள் மன்றம், இந்து மாணவர் சங்கம் ஆகிய மன்றங்களுக்குள் இந்து மாணவர் சங்கம் மிகவும் முக்கியமானதொன்றாகும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அனைத்து மாணவர்களும் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் என்பதோடு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிர்வாக மன்றமே கோயிலின் அன்றாட பணிகள் தொடக்கம் விஷேட உற்சவங்கள் வரைக்குமான எல்லாப் பணிகளையும் ஆற்றி வருகின்றது. ஊர்களில் அமைந்துள்ள ஆலயங்கள் ஊர் மக்களின் முழுமையான ஈடுபாட்டோடு சிறப்பாக திருவிழாக்களை நடத்துவது போல தமது கல்விக் கடமைகளோடு கோவிற் கடமைகளையும் சளைக்காது உற்சாகத்துடன் இந்து மாணவர் சங்கம் நடத்தி வருவது போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

அதுமட்டுமன்றி ஒரு வருடத்தில் வருகின்ற எல்லாத் தெய்வங்களுக்கும் உரிய விஷேட பூஜைகளும் நடத்தப்படுவதும் ஒரு சிறப்பம்சமாகும். இந்து மாணவர் சங்கத்தின் இச் செயற்பாடுகள் காரணமாக குறிஞ்சிக்குமரன் புகழ் உலகமெல்லாம் பரவியுள்ளது. இம் மாணவ சங்கத்தினர் முருகனுக்குரிய தொண்டர்களுக்கும் தொண்டர்களாக இருந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்களுடைய இத்தொண்டு தொடர எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் அருளும், ஆசியும் அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

வேலுப்பிள்ளை சிவயோகலிங்கம்,
தலைவர் - இந்துப்பட்டதாரிகள் மன்றம்.

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து...

"என் கடன்பணி செய்து கிடப்பதே"

பேராதனைப் பதியிலே என்றும் பசுமை குன்றாது ஓம் என்று ஓங்கார ஒலி எழுப்பிக்கொண்டிருக்கும் சவுக்கு மரங்களுக்கு மத்தியில் உயர்ந்து நிற்கும் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் வீற்றிருந்து அருள் புரியும் குறிஞ்சிக் குமரனின் அளவற்ற அன்பினாலும், அருளினாலும் இந்து மாணவர் சங்கமானது தமது செயற்பாடுகளில் பெரும்பகுதியையும் ஆலயத் திருப்பணிக்கும் நித்திய, நைமித்திய பூசை ஒழுங்குகளுக்கும் அர்ப்பணிப்பதை இட்டு புளகாங்கிதம்அடைகின்றது. மேலும் தருமப் பணியாக "இந்து தருமம்" என்னும் ஆன்மீக அறிவியல் நூலை வெளியிடுவதன் மூலம் ஆன்மீக உணர்வுகளையும், எழுத்து வன்மைகளையும் அதிகரிக்கின்றது என்றால் மிகையாகாது.

மிக முக்கியமாக 2005ம் ஆண்டு தீபாவளித் திருநாளிலே கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடாத்தப்பட்ட "குறிஞ்சிச் சாரல்" பல்சுவை கதம்ப நிகழ்ச்சியானது முக்கியமாக கஷ்டப்படும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்காக நடாத்தப்பட்டது. அதனுடன் எமது பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது தலைநகர மக்களுக்கும் வெளிச்சம் போட்டுக்காட்ட பெரியதொரு வாய்ப்பு மேடையாக அது இருந்தது.

எமது வெற்றிக்கான எல்லா செயற்பாடுகளையும் செய்வதற்கு உதவி புரிந்த ஆலயப் பிரதம குரு, பெருந்தலைவர், பெரும் பொருளாளர், பொறுப்பாண்மைக் குழு, இந்துப் பட்டதாரிகள் சங்கம் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன், எல்லா வெற்றிக்கும் தோளோடு தோள் நின்ற எமது செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி.

தெ. நந்தகுமார்,
தலைவர்,
(பொறியியற் பீடம்)

# வாழ்வியல்

பேராதனைப் பதிச் சீரான கலைக் கோயில்
பேராதரித் தடியார் பேரின்ப வீட்டு வாயில்
வேலாயு தனேசக்தி, பாலா சண் முகநாதா
பாலாபி ஷேகஞ் செய்வோம் பக்தியா யுனைப்பணிந்து

- ந. வீரமணி ஐயர் -

# நம் உடம்பே ஆலயம்

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள் எம்முடைய உடம்பிற்குள்ளேயே கோயில் கொண்டிருக்கின்றான். இதனை நன்கு அனுபவித்து உணர்ந்தவர்கள் சித்தர்கள் நம்முள்ளே உள்ள சிற்சபையில் இறைவன் நடராசமூர்த்தியாக நடனமாடி ஒலி செய்து கொண்டிருக்கின்றான். ஆலயமும் எம் உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிர்ந்தார்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே"

**– திருமந்திரம் –**

அண்ட சராசரங்களில் எல்லாம் நிறைந்த எல்லையற்ற பரம் பொருளாகவும், அணுவுக்குள்ளும் அணுவாகவும் மறைந்துள்ள அந்த மேலான சக்தியை எமது இயத்தில் இருப்பதனை நாம் உணர்ந்து அனுபவிக்க முடியும். அவ்வண்ணம் இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காமல் இருக்கிறான் இறைவன்.

இதனையே திருநாவுக்கரசரும் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக..." எனத் தேவாரத்தில் பாடுகின்றார். கடி மனம் அடிமையாக்கப்பட்டால் மட்டுமே எமது காயம் கோயில் என்பதனை நாம் உணரலாம். சதா காலமும் உலக விடயங்களிலும் புலனுகர்ச்சியிலும் அலைந்து கொண்டிருக்கும் மனத்தால் எமது உள்ளத்தில் நிறைந்துள்ள இறைவனை எவ்வாறு உணர முடியும். இதன்னயே மணிவாசகப் பெருமானும் நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே என சிவபுராணத்தில் குறிப்பிடுகிறார்.

இறைவன் ஒரு அறிவுப்பொருள் அல்ல. எமது புலன்களாலும் அலையும் மனத்தினாலும் இறைவனை நாம் அறிய முடியாது. ஆனால் அவனை எம்முள்ளே உணர முடியும். எனவே இறைவன் ஒரு உணர்வுப் பொருள். வெளியே செல்கின்ற எமது புலன்களை எம்முள்ளே திருப்பினால் எமது உள்ளத்தில் வீற்றிருக்கின்ற எம் உயிர்க்கு உயிரான இறைவனை நாம் தெளிவாக உணர்ந்து அனுபவிக்க முடியும்.

"நட்டகல்லைத் தெய்வம் என்று நால புஷ்பம் சாத்தியே
சுற்றி வந்து மொண மொணன்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"

**– சிவவாக்கியர் –**

நாதனாகிய இறைவன் தம் உள்ளே இமைப் பொழுதும் நீங்காமல் இருப்பதை உணராத மாந்தர் இறைவனைத்தேடி கோயில் கோயிலாகச் சென்று அலைகின்றனர். சிதம்பரத்திலும் திருவண்ணமலையிலும் இறைவனைத்தேடி புனித யாத்திரை செய்து திரும்புகின்றனர். புனிய யாத்திரையை எம்முள்ளே செய்தால் இறைவனை நாம் காணலாம்.

"உடம்பினைப் பெற்ற பயன் ஆவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காணல்"

**- ஔவைக்குறள் -**

அண்டத்தில் உள்ளது போலவே எமது உடலாகிய பிண்டத்திலும் ஒரு பெரு வெளியுள்ளது. இவ்வெளியில் நின்றொளிரும் சிவத்தினை உணர்ந்துகொள்ளல் முடியும். சிவப்பரம் பொருளாகிய அந்தம் செம்பொருளை தம் உள்ளே கண்டு அனுபவித்தவர்களே சித்தர்கள். தாமே சிவமாகி, மலம் மூன்றையும் வென்றவர்கள். பேரறிவுப் பொருளாகிய சிவத்தை தானே அது எனக் கண்டு அதுவாகவே ஆகியவர்கள் சித்தர்களே. சித்தர்கள் சிவலோகத்தை இங்கே தரிசித்தோர் என்கிறார் திருமூலர். சிவலோகம் வேறு எங்கேயோ உள்ள உலகம் அல்ல அது எம்முள்ளேயே உள்ள ஓர் உலகமே.

இறைவன் உருவம், அரு உருவம், அருவம் என மூன்று திருமேனிகளையும் எடுக்கிறார். உருவத்திருமேனி கொண்டு சிவன், விஷ்ணு, விநாயகன், முருகன் ஆகவும் அருவுருவத் திருமேனி கொண்டு சிவலிங்கப் பெருமானாகவும் நாதம், விந்து ஆகிய அருவத்திருமேனிகளையும் எடுக்கிறார். உருவத் திருமேனியையும், அருஉருவத் திருமேனியையும் எமது ஊனக்கண்களால் காணலாம். ஆனால் அருவத் திருமேனியை எம்முள்ளேயே ஞானக் கண்ணால் கண்டு உணர்ந்து அனுபவிக்கலாம்.

பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய நீர் உறைந்துள்ள போது பனிக் கட்டியாக கண்களுக்குப் புலனாகிறது. வெவ்வேறு உருவங்களையும் கொண்டிருக்கின்றது. தண்ணீராக உள்ளபோதும் கண்களுக்கு புலனாகிறது. உருவம் கிடையாது எனினும் கொண்டுள்ள பாத்திரத்தின் வடிவத்தையே பெறுகிறது. ஆனால் நீர் ஆவியாகும் போது கண்களுக்குப் புலனாவதில்லை. நீர் ஆவியை நாம் உணர முடியும். இவ்வாறே இறைவனும் உருவமாக, அரு உருவமாக, அருவமாக வடிவங்களைத் தாங்குகிறான்.

இத்தகைய மேலான சக்திக்கு, எப்பெயரை வேண்டுமானாலும் நாம் இட்டு அழைக்கலாம். ஆனால் அப்பொருள் ஒன்றே. சிவன் எனலாம். விஷ்ணு என்றழைக்கலாம். அல்ஹா என்று இஸ்லாமிய மதம் இயம்புகின்றது. பரலோகத்தில் உள்ள பிதா என்று கிறிஸ்தவ மதம் பகர்கின்றது. ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு தனித் தெய்வம் என்றில்லை. பொருள் ஒன்று அதற்கு பெயர்கள் பல. "ஒரு நாமம் ஒருருவம், ஒன்றுமில்லார்க்கு, ஆயிரம், திருநாமம் பாடி" என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடுகின்றார்.

இதனையே திருமூல நாயனாரும் தனது திருமந்திரத்தில்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணமே
சென்றே புகுங்கதி இல்லை நம் சித்தர்வ
நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே"

என்று விளம்புகிறார்.

சுவாமி விவேகானந்தரும் தனது இளமைப் பிராயத்தில் கடவுளைக் காண வேண்டும் என்று பேரவாக் கொண்டார். கடவுளைக் காணாவிடில் ஆண்டவனைப் பற்றிக் கற்பதாலும், பேசுவதாலும் என்ன பயன் என்று எண்ணினார். தான் சந்தித்த ஒவ்வொரு பெரியாரிடத்தும் இதே கேள்விகளையே கேட்டு வந்தார். விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமகம்சரிடமும் சென்று இதே கேள்வியைக் கேட்டார். அதற்கு இராமகிருஷ்ணர் கூறிய பதில் விவேகானந்தரை மிகவும் கவர்ந்தது. "நான் இறைவனை இடையறாது கண்டு களிப்படைகிறேன். ஊணக் கண்ணால் நான் உன்னைக் காண்பதைவிட பன்மடங்கு தெளிவாக அகக்கண்ணால் அவனை நான் காண்கிறேன். வேண்டுமானால் அவனை நான் உனக்கும் காட்டுகிறேன்" என்றார் சுவாமி. இராமகிருஷ்ண பரமகம்சர் இராமகிருஷ்ணர் தமது வலக்கரத்தை விவேகானந்தரின் நெஞ்சில் பதித்து ஞானத்தை அளித்தார். அதனைப் பெற்ற விவேகானந்தர் பரவசம் அடைந்து இறையுணர்வைப் பெற்று இன்புற்றார்.

நாம் எல்லோரும் இறைவனை அனுபவிக்க முடியும். சித்தர்கள் மட்டும் தான் இறைவனை அனுபவிக்க முடியும் என்பதல்ல. எம் எல்லோருக்கும் அகக் கண் உண்டு. ஆனால் அகக்கண்ணைத் திறந்து எமக்கு இறைவனைக் காட்டித்தர சக்திமிக்க குரு ஒருவர் தேவை. எமக்கும் இறைவனைக் காணவேண்டும் என்ற தாகமும் இருக்க வேண்டும்.

நாமும் சித்தர்கள் கண்ட அப்பரம்பொருளை எம்முள்ளே காணலாம். கடவுளைக் காண வேண்டும் என்ற பேரவா எம்முள்ளே தோன்ற வேண்டும்.

அதற்காக நீ,

பொறுமையாய் இரு. ஆனால் சோம்பலாய் இருக்காதே.
சுறுசுறுப்பாய் இரு, ஆனால் படபடப்பாய் இராதே.
சிக்கனமாய் இரு, ஆனால் கருமியாய் இராதே.
இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே.
அன்பாய் இரு, ஆனால் அடிமையாய் இராதே.

கொடையாளியாய் இரு ஆனால் ஓட்டாண்டியாய் விடாதே
இல்லறத்தானாய் இரு ஆனால் காமவெறியனாகாதே
பற்றற்றிரு ஆனால் காட்டுக்குப் போய்விடாதே
நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே
எந்தப்பொறுப்பையும் ஏற்று பந்தத்தை ஏற்படுத்தாதே
பணிவாகப் பேசு, பிறர் மனம் நோகப் பேசாதே.

எமது மனத்தை மாசுகளில்லாமல் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் அலையும், மனத்தை நாம் எமது கட்டப்பாட்டில் வைத்திருக்க பயிற்சி தேவை. தியானம் செய்வதால் மனம் ஒரு நிலைப்படும். இப்போது வாழ்ந்துக்கொண்டிருக்கும் சற்குரு ஒருவர் மூலம் ஞானவழிமுறையைப் பெற்று தியானப் பயிற்சியைச் செய்து வந்தால் எம்மைப் படைத்தவனை எம்முள்ளேயே கண்டு ஆனந்தமடையலாம்.

குரு மகராஜ்ஜி தற்போது உலக நாடுகள் பலவற்றிலும் தனது ஞான வழிமுறையைப் பரப்பி வருகின்றார். எம்முள்ளேயே நாம் அந்தப் பரம்பொருளை உணர்ந்து அனுபவித்து ஆனந்தமாகவும் அமைதியுடனும் வாழலாம். இதனை பல்லாயிரக்கணக்கான மக்களும் பெற்று பயிற்சி செய்து தம்முள்ளே ஆனந்த உணர்வை பெற்று வாழ்கின்றனர்.

உலகம் என்ற பாலைவனத்தில் அமைதி என்ற தண்ணீரைத் தேடி பலர் அலைகிறார்கள். ஆண்டவனைத்தேடி கோயில் கோயிலாக அலைகின்றனர் இன்னும் பலர்.

இறைவனைத் தம்முள்ளே கண்டு அனுபவித்த மகான்கள், சமய குரவர்கள், முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள் போன்றோர்களின் அனுபவங்களை நாம் வாசித்து அறிகின்றோம். ஆனால் அவர்கள் பெற்ற இறை உணர்வை அமைதியை, ஆனந்தத்தை, பேரின்பத்தை நாம் ஒவ்வொருவரும் எம்முள்ளேயே இந்த ஆலயமாகிய ஊன் வடிவிலேயே அனுபவித்து பிறவிப்பயனைப் பெற்றுய்வோமாக

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

வைத்திய கலாநிதி. **தி. ஆனந்தமூர்த்தி**

# சௌர வழிபாடு

சூரியனை வழிபடு தெய்வமாகக் கொள்ளும் மரபு மிகப் பழங் காலந்தொட்டே உலகம் முழுவதும் நிலவி வந்துள்ளது. எனினும் இன்று பெரும்பாலும் இந்துக்கள் மத்தியில் மாத்திரமே இவ்வழிபாடு வழக்கிலுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக எகிப்து, மெக்சிக்கோ, கிரீஸ் போன்ற நாட்டினரிடையே இவ்வழிபாடு நிலவியமைக்குச் சான்றுகள் உள. எகிப்தியர்கள் சூரியனை 'ரா' (Ra) அல்லது 'ஆதன்' (Aton) எனும் பெயர் கொண்டும், கிரீஸ் நாட்டினர் 'அப்போலோ' (Apollo) எனும் பெயர் கொண்டும் வழிபட்டுள்ளனர். மெக்சிக்கோ நாட்டுப் பழங்குடியினரான மாயர்கள் (Mayans) சூரியனுக்கு நரபலி கொடுத்து வழிபட்டதாகவும் வரலாறுகள் கூறும். இன்று கூட ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் சிதைந்த, சூரியன் கோயில்கள் பல காணக்கிடப்பதாக அறிய முடிகிறது.

தமிழக வரலாற்றை நோக்கின், சூரிய வழிபாடானது, தனித்துவமான முறையில் நிலவியமைக்குச் சான்றுகள் எதுவும் கிடைக்கப்பெற்றில என நூல்கள் பலவும் அறியத் தருகின்றன. எனினும், புராண இதிகாசங்களிலிருந்தும், பண்டையத் தமிழ் நூல்கள் வாயிலாகவும் சூரிய வழிபாட்டின் தொன்மையையும், சிறப்பினையும் ஓரளவுக்கு அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இவ்வகையில், இந்து சமயத்தின் தொன்மையை உணர்த்த உதவும் சிந்துவெளி அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பல சூரிய வழிபாட்டின் பழமையை உணர்த்துவனவாயுள்ளன என ஆய்வாளர் கருதுவர்.

சிந்துவெளி காலப்பகுதியைத் தொடர்ந்து இடம்பெற்ற வேத காலத்தை நோக்கின், இக்காலப்பகுதியில் இடம்பெற்ற சூரிய வழிபாட்டின் அம்சங்களைத் தெளிவாகக் காணலாம். குறிப்பாக, வேதங்களின் பல இடங்களிலும் சூரியனைப் பற்றிய குறிப்புக்கள் விரவி வருவதனைக் காணலாம்.எடுத்துக்காட்டாக, இருக்கு வேதம் மூன்று வித அக்கினிகளுள் ஒன்றாகச் சூரியனை சிறப்பிப்பதும், சூரிய வழிபாட்டிற்கேயுரியதான காயத்திரி மந்திரத்தைக் குறிப்பிடுவதையும் காணலாம். யசுர் வேதத்தில் இடம்பெறும் 'நீ வெற்றியுடையாய்; எல்லாவற்றையும் காண்பவன்; சோதியை ஆக்குபவன்; எவ்வுலகையும் ஒளிரச் செய்கிறவன்" போன்ற குறிப்புக்களும், சாம வேதத்தில் இடம்பெறும் 'சூரியனே! நீ நோய்களைப் போக்குபவன், எல்லா ஒளி உலகத்தையும் ஒளிரச் செய்து, எழில் கனிந்த பொருள் அனைத்தையும் விளக்கம் அடையச் செய்கிறாய், அமரரும் ஞானியரும் மக்களும் எங்கும் பரவும் சோதியைக் காணும் வண்ணம் நீ உதயமாகிறாய்" எனும் குறிப்புக்களும் சூரிய வழிபாட்டின் தொன்மையை உணர்த்துவன.

பண்டையத் தமிழ் நூலான தொல்காப்பியத்தில் இடம்பெறும்,

அண்டங்கள் பலபயந்த அன்முதலாம் இமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை ஆகலின்
ஓங்குயர் பருதியஞ் செல்வ! நின்
நீங்கா உள்ளம் நீங்கன்மார் எமக்கே"

எனும் செய்யுளும்,

"கனைகதிர்க் கனலியைக் காமுறல்
வளிதரும் செல்வனை வாழ்த்தவும்"

எனும் கலித்தொகைப் பாடலடிகளும், சிலப்பதிகாரத்தின் கடவுள் வாழ்த்தில் இளங்கோவடிகள்,

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரி பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்"

என இயற்கை வழிபாட்டுக் கூறுகளுள் ஒன்றாகச் சூரியனை வைத்துப் பாடியிருக்கின்றமையும், திருமுருகாற்றுப்படையில் முருகக் கடவுள் சூரியனாக உருவகிக்கப்பட்டுள்ளமையும் பண்டைத் தமிழரிடையே காணப்பட்ட சூரிய வணக்கத்தின் தொன்மையை அறியத் தருகின்றன. தவிர, நக்கீரர், "புகழ் ஞாயிறு" எனப் பாடியிருக்கின்றமையும் கம்பர் தன்னை 'ஆதித்தன் குல முதல்வன்" எனப் பெருமைப்படுத்திக்கொள்கின்ற தன்மையும், சூரிய வழிபாட்டின் பெருமையையும், சிறப்பையும் உணர்த்துவன. இதிகாச புராணங்களிலும் சூரிய வழிபாடு குறித்த விரிவான செய்திகளைக் காணலாம். மார்க்கண்டேய புராணம், பிரம்ம புராணம் போன்றன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

சூரியனின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில், விஸ்வரூபியாகிய விராட் புருஷனுடைய கண்களிலிருந்து உற்பத்தியானவனே சூரியன் எனப்படுகிறான். இந்து மத நம்பிக்கையின் அடிப்படையில் இருள் நீக்கி ஒளி தந்து உயிர்கள் வாழ அருள் புரியவே சூரியன் அவதாரம் எடுத்ததாகப் புராணங்கள் கூறும். மார்க்கண்டேய புராணத்தில் இருள் மயமான அண்டத்தை பிரம்மன் பிளந்தபோது ஓம் என்ற ஒலி உண்டானதாகவும் அந்த ஒலியிலிருந்து பிறந்தவனே சூரியன் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இந்துக்கள் சூரியனை, அர்க்கன், ஆதித்யன், சுமிர்தம், ஜகதேகசக்ஷீஸ், ஜகதாத்மன், மித்திரன், தபன், காலகாரணன், திவாகரன், பாஸ்கரன், ககன், ரவி, ஹம்ஸம், பூஷ்ணன், ஜ்யோதிஸ், ஹிரண்ய கர்ப்பன், விச்வ ஜீவன், ஸஹஸ்ரபானு, மரீசி, ஸவித்ரு, பிரத்யக்ஷதேவன், தசதிக் ஸம்ப்ரகாசன், கர்மஸாக்ஷி, அம்சுமாவின், ப்ரபாகரன், சூரிய நாராயணன் என பல திருநாமங்கள் கொண்டு அர்ச்சிப்பது வழக்கம்.

இவரது தந்தை காஸ்யபர். தாய் அருந்ததி, உஷா பிரத்யுஷா (சாயாதேவி) இவரது மனைவியராவர். கருடன், அருணன் இரவது சகோதரர்கள். யமன், சனீஸ்வரன், அஸ்வினி, தேவர்கள், கர்ணன், சுக்ரீவன் இவரது புதல்வர்கள். யமுனை, பத்திரை இவரது புத்திரிகள். அனுமான் இவரது ஒரே சீடன் எனப் புராண வரலாறுகள் கூறும்.

சூரிய பகவானைப் பற்றி மேலும் குறிப்பிடுகையில், இவர் ஒரு சக்கரமும் ஏழு குதிரைகள் கொண்டதுமான ஒரு தேரில் பயணிப்பதாகக் கூறப்படுகின்றார். இந்த ரதத்தை ஓட்டுபவனுக்கு பூஷன் அல்லது அருணசாரதி என்று பெயர். இவ்வேழு குதிரைகள் குறித்த சிந்தனையே நோக்கின் சூரியனிலிருந்து வெளிப்படும் ஏழு நிறங்களாகக் கொண்ட ஏழு கிரணங்களே இவ்வாறு ஏழு குதிரைகளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன என்பது அறிஞர் கருத்து. சிலர் இவ்வேழு குதிரைகளை அல்லது கிரணங்களை ஏழு வித ஞான நிலைகளாகக்

கூட உருவகப்படுத்துவதுண்டு. சூரியனிலிருந்து வெளிப்படும் இவ்வேழு கிரணங்களுள் ஒரு கிரணம் மட்டும் நிலையாயிருக்க மற்றைய ஆறும் மாறி மாறி வருவதனால் கோடை முதல் வசந்தம் வரையிலான ஆறு பருவங்களும் தோன்றுகின்றன என்பது இந்துக்களின் நம்பிக்கை.

சூரிய பகவான் கிழக்கிலிருந்து மேற்காகப் பயணம் செய்பவராகக் கூறப்படுகின்றார். சூரியனது இப்பயணம் அல்லது அதன் நகர்வு தட்சிணாயணம், உத்திராயணம் என இரு வகைப்படும். உத்தராயண காலத்தில் வட திசைப் பாதையிலும் தட்சிணாயன காலத்தில் தென்திசைப் பாதையிலும் சூரியனின் நகர்வு இடம்பெறுகிறது. இவற்றுள், தட்சிணாயணம் எனும் தென் திசைப் பயணத்தை மாற்றிக் கொண்டு உத்தராயணம் எனும் வடதிசைப் பாதையில் தை மாதம் முதல் நாளில் தன் பயணத்தைத் தொடங்கும் சூரியனின் நகர்வு சிறப்புக்குரியதொன்றாகும். உத்தராயண காலம் மிக உயர்ந்த புண்ணிய காலமாகவும், தேவர்களின் பகல் பொழுதாகவும் கருதப்படுகின்றது. அதனாலேயே உத்தராயண காலத்தில் முதல் நாளான தை மாதம் முதல் நாளில் தேவர்களின் உயர்ந்தவனும் பூவுலகில் பகல்பொழுது தோன்றக் காரணமாக இருப்பவனுமான சூரியனுக்குப் பொங்கல் வைத்து வழிபடும் வழக்கத்தை ஏற்படுத்தினர் நம் முன்னோர்.

சூரிய பகவானுடைய கரங்களில் நாம் காணும் சங்கு சக்கரங்கள் தத்துவார்ந்த உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணம் சூரியனே என்பதைச் சுட்டுவதாய் சங்கும், அவனது ஆணையாலேயே இப்பிரபஞ்சம் ஒழுங்குக்கட்டுப்பாட்டுடன் இயங்குகின்றது என்பதைச் சுட்டுவதாய் சக்கரமும் அமைந்துள்ளது.

நமஸ்காரப் பிரியனாகக் கருதப்படும் சூரிய பகவான் சிவனின் அட்ட மூர்த்தங்களுள் ஒருவராகவும், முப்பெரும் சுடர்களுள் ஒருவராகவும் வைத்து எண்ணப்படுகிறார். பரிவாரத் தெய்வமாக ஆலயங்களில் கிழக்குத்திசை நோக்கி இவரை அமைப்பது வழக்கம். நவக்கிரகங்களுள் நடுநாயமாக விளங்கும் இவர் சிவ பூஜைகளில் சிறப்பிடம் பெறுகிறார்.

விஷ்ணு புராணம், நவக்கிரக ஆராதனம் எனும் வடமொழி நூல் போன்றன சூரியனைக் குறித்து வர்ணனைகளை விரிவாகக் கூறுகின்றன. அவ்வகையில் இவர் சிவந்த நிறமுடையவர் என்றும் செம்மலரைச் சூடியிருப்பாரென்றும், தாமரை மலரை ஏந்தியிருப்பானென்றும், இடக்கையை ஏவலாளன் மேலும், வலக்கையைப் பிங்களன் என்பவன் மேலும் வைத்திருப்பானென்றும் வர்ணித்துச் செல்கின்றன. இவருக்கு உசிதமான நிறம் சிவப்பு எனவும் அர்ச்சிக்கப்பட வேண்டிய மலர் செந்தாமரை எனவும் புராணங்கள் கூறும். இவரின் பார்வைபட்டால் கல்வி, செல்வம் முதலியன பெருகும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

இந்து மதத்தில் சூரியனுக்கென தனித்துவமான வழிபாட்டு முறைமைகள் பண்டைக் காலத்தில் நிலவவில்லையாயினும் சூரிய பகவானை வழிபடும் வழக்கம் புராண காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக இராவணனுடன் யுத்தம் புரிந்து கொண்டிருந்த ராமருக்கு அகத்தியர் வெற்றிக்கான யுக்தியாய் ஆதித்ய ஹ்ருதயத்தை சொல்லிக் கொடுத்தாரென்றும், ராமர் அவ்வாறே ஆதித்ய ஹ்ருதயத்தை உச்சரித்து சூரிய பகவானை வழிபட்டு இராவணனை வெற்றி கொண்டதாகவும் புராணங்கள் கூறும்.

ஆகியவற்றைப்படைத்தும் சூரியனை வழிபடுவதுண்டு. இதே நாளன்று இந்திய நாட்டின் பல்வேறு மாநிலத்தார் மகர சங்கராந்தி எனும் பெயரில் பூஜைகள் செய்து சூரிய பகவானை வழிபடுவர். இம்மகர சங்கராந்தி நாளில் சூரியனை மட்டுமே தனியாக வழிபடுவது சிறப்பம்சமாகும்.

இவ்வாறு மிகப் பழங்காலந்தொட்டு இன்று வரையிலும் சூரிய வழிபாடு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுத் திகழ்வது அவ்வழிபாட்டினது சிறப்புத்தன்மையையே உணர்த்துகிறது எனலாம். இச்சூரிய வழிபாட்டின் சிறப்பினையும், பெருமையினையும் மற்றுமொரு வகையில் உணர்த்தி நிற்பன சூரியனுக்கென தனித்துவமாகக் கட்டப்பட்ட ஆலயங்களாகும். இன்றும் கூட ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளில் சிதைவுற்ற சூரியன் கோயில்கள் காணப்படுகின்றன. இச்சூரியனார் கோயில்களுல் எட்டாம் நூற்றாண்டில் காஷ்மீரில் கட்டப்பட்ட மார்த்தாண்டர் கோயிலும், பதினோராம் நூற்றாண்டில் பரோடாவில் ஜோதிபுரிக்கு அருகில் ஒசியா (Ossia) எனுமிடத்தில் கட்டப்பட்ட கோயிலும், ஒரிசாவில் பூமிக்கு அருகில் கோனார்க்கா எனுமிடத்தில் கட்டப்பட்ட கோயிலும் சூரியன் ஆலயங்களுள் பிரசித்தி பெற்றவை.

இவை தவிர, குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரிலிருந்து நூற்று இருபது மைல் தொலைவில் உள்ள மொதேராவில் அமைந்துள்ள ஆதவன் ஆலயம் இன்றும் வழிபாட்டு ஸ்தலமாக விளங்கி வருகின்றது. இவ்வாலயம் பதினோராம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த ஸோலங்கி வம்ச மன்னனான ஸோலங்கி மன்னன் முதலாம் பீம தேவனால் கட்டுவிக்கப்பட்டதாகும்.

இன்றும் பிரசித்தி பெற்று விளங்கும் மற்றுமொரு சூரியன் கோயில், இந்தியாவில் திருவிடை மருதூர் வட்டத்தில், கஞ்சனூருக்கு மேற்கே மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ள சூரியனார் கோயிலாகும். இக்கோயிலின் வடபுறம், ‘சூரிய புஷ்கரணி’ எனும் தீர்த்தம் அமைந்துள்ளதாகக் குறிக்கப்பெறுகிறது. இவ்வாலயத்தில் அமைந்திருக்கும் இந்நவ தீர்த்தங்களில் நவக்கிரக நாயகர்கள் நீராடி பிரம்ம தேவனது சாபம் நீங்கப்பெற்றார்கள் என வரலாறுகள் கூறும்.

இவ்வாலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் இங்கு பன்னிரெண்டு ஞாயிற்றுக் கிழமைகள் தங்கியிருந்து, இந்நவதீர்த்தங்களில் நீராடி எருக்கிலையில் தயிர் சாதம் மட்டும் வைத்து உண்டு வந்தால் களத்ர தோஷம், புத்திர பிரதிபந்த தோஷம் உத்தியோக பிரதிபந்த தோஷம் போன்றன நீங்கும் என இதன் தல வரலாறு கூறுவதாக அறியக்கூடியதாகவுள்ளது.

ஈழநாட்டைப் பொறுத்தவரையில் ஈழத்தில் சூரிய பகவானுக்கெனத் தனிப்பட்ட ஆலயங்கள் இல்லாவிடினும் பெரும்பாலான ஆலயங்களில் பரிவாரத் தெய்வங்களுள் ஒருவராகவும் நவக்கிரக நாயகர்களுள் முதன்மையானவராகவும் வைத்து வழிபடப்படுவதைக் காணலாம்.

இச்சூரிய வழிபாடு, இன்று இந்துக்கள் மத்தியிலே செல்வாக்கு பெற்று விளங்கினும் பல நூற்றாண்டுகளுக்கு முன் பல்லின மக்களிடையேயும் சிறப்புற்று விளங்கிற்று என்பதை வரலாறுகளும் அங்கு காணும் சிதைந்த சூரியன் கோயில்களும் அறியத்தரும். இன்று ஏனைய நாட்டினரிடையே அருகிவிட்ட சூரிய வழிபாடு தமிழரிடையே மட்டும் இன்றும் தனித்துவம் மிக்கதொரு வழிபாடாக நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நாராயணன் மல்லிகா**
உதவி விரிவுரையாளர், (தமிழ்த்துறை)
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# ஆன்மீக வாழ்வு

ஸஈஸ்வர: அதிர் வசனீயப் பிரேம ஸ்வரூப; இதன் பொருள் ''இறைவன் சொல்லினுக்கடங்காத, பகரவொண்ணாத அன்பு வடிவினன்'' என்பது கடவுள் அன்பே உருவானவர் அவர் எம்மீது கொண்டிருக்கும் அன்பு எல்லையற்றது. ஒரு தாய் தனது பிள்ளை மீதும் ஒரு மனைவி, கணவன் மீதும் கொண்டுள்ள அன்பைக் காட்டிலும் மிக மிகப் பெரியது இறைவன் எம் ஒவ்வொருவர் மீதும் கொண்டுள்ள அன்பு. இந்தப் பேருண்மையையே அனைத்து வேதங்கள், சாஸ்திரங்கள் அனைத்திலும் கூறப்பட்டுள்ளது.

இந்த அன்பை பிரேமையை நாம் இறைவனிடமும் மற்றும் உலகில் உள்ள அனைத்து உயிர்களிடமும் காட்ட வேண்டும். ஒவ்வொரு உயிரும் இறைவனே எம்முள் உறையும் அதே ஆத்மாவே உலகின் அனைத்து உயிரினங்களின் உள்ளும் உறைகிறது என்ற யதார்த்தத்தை நாம் புரிந்தகொண்டால் எம்முள் இந்த விஸ்வப் பிரேமை உண்டாகும். நாம் எம்மை நேசிப்பது போன்றே சமமாக அனைவரையும் நேசிப்போம். பகவான் புத்தர், இராமகிருஷ்ணர். இயேசுகிறிஸ்து, ஸ்ரீ ரமணமகரிஷி, ஸ்ரீ சுவாமி சிவானந்தர், சுவாமி விவேகானந்தர் போன்ற மகா ஞானிகள் இவ் உண்மையை உணர்ந்து கொண்டதால் அவர்கள் உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் சமமாக நேசித்தார்கள். அவர்கள் தமது நலன்களில் எந்த அக்கறையும் கொள்ளாது உயிர்களின் மீது மிகுந்த அன்பைக் கொண்டிருந்தார்கள். இயேசு மக்களது பாவங்களைத் தான் சுமந்தது அவர் பிற உயிர்களின் மீது வைத்திருந்த பேரன்பிற்கு எடுத்துக் காட்டாகும். இத்தகைய தெய்வீக அன்பின் மூலமே நாமும் தெய்வ நிலைக்கு உயர வேண்டும்.

அன்பில்லாத வாழ்வு பயனற்றது. எவருக்கும் மகிழ்வளிக்காதது. சரியான அன்பைக் கொண்டிராத காரணத்தால் நாம் பாவங்களைச் செய்கின்றோம். பிறருக்குத் தீங்கு செய்கின்றோம். மற்றவருக்கு நாம் எதைச் செய்தாலும் நாம் அதை எமக்கே செய்து கொள்கிறோம். இயற்கையின் விதிப்படி நாம் பிறருக்குச் செய்யும் நன்மை, தீமைகளின் பயனை நாம் அனுபவித்தே ஆக வேண்டும். நாம் ஒரு உழைப்பில்லாது தேடும் பணம், சொத்துகக்ள் என்பன அவை வந்த வழியிலேயே செல்லும். அடுத்த பிறவிகளிலேயே கூடுதலாக அவை செல்லும். ஒருவனுக்கு அடிக்கும்போது இந்த அடி என்றாவது எனக்கு வேறு ஒருவனால் விழுந்தேயாகும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் அது இப்பிறவியிலோ அல்லது வேறொரு பிறவியிலோ இடம் பெறலாம். ஒரு ஜீவன் தனது முதற் பிறவியில் ஆற்றிய கர்மங்களிற்கு ஏற்றவாறே அதன் அடுத்த பிறவி நிச்சயிக்கப்படுகிறது. ஒன்றுமறியாத குழந்தை ஏன் ஒரு அநாதையாகவும், இன்னொன்று அரச குடும்பத்திலும் பிறந்துள்ளது என்பதற்கும் நேர்மையாக தேடிய பணம் திருட்டு போவதற்கும் இதுவே பதிலாகும். நாம் விதைத்ததையே நாம் அறுவடை செய்ய முடியும். பாவ காரியங்களைச் செய்து விட்டு அதன் பிரதிபலனாக நன்மையைப் பெற முடியாது. அது என்றாவது எம்மைத் திரும்பத் தாக்குவது உறுதி. எமது நல்வினை, தீவினை ஆகிய இரண்டும் நீங்கும்போது அதாவது எமது அனைத்துக் கர்மங்களில் இருந்தும் நாம் விடும்படும் போது நாம் விடுதலை (முக்தி) அடைகிறோம். இப்பிறப்பு, இறப்பு சூழலில் இருந்து விடுபடுகிறோம்.

எமது எண்ணங்களே எமது செயல்களைத் தீர்மானிக்கின்றன. எமது எண்ணங்கள் எமது பூர்வ சம்ஸ்காரங்களின் அடிப்படையில் எழுகின்றன. எண்ணங்களுக்கு மாபெரும் சக்தி உண்டு. அவை எமது தலைவிதியையே மாற்றியமைக்கக்கூடிய சக்தியுடையவை. நாம் தீய எண்ணங்களையே கொண்டிருக்கும் போது எண்ணத்தின் சூட்சும சக்தியின் காரணமாக எமது எதிர்காலமும் அதற்கேற்றவாறு நிர்ணயிக்கப்படுகிறது. நல்லவற்றையே எண்ணும்போது அதன் சக்தி எமக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைத் தருகிறது. ஆகவே, நாம் மனத்தாலும், எண்ணத்தாலும் நல்லதையே எண்ண, செய்ய வேண்டும். இறைபக்தி, அன்பு, கருணை, மகிழ்ச்சி போன்ற நல்ல நேர்மையான எண்ணங்களால் எமது மனோவலிமை எண்ண ஆற்றல் என்பன அதிகரிக்கிறது. இதன் விளைவாக திடமான, மகிழ்வான மனநிலையும் சிறந்த நல்ல வாழ்க்கையும் அமைகிறது. அத்தோடு இறைவனின் அருளும் எம்மீது பொழியப்படுகிறது. கோபம், பயம், பொறாமை, காமம், குரோதம் போன்ற எதிர் மறையான எண்ணங்களால் எமது மனோவலிமை, எண்ண ஆற்றல் என்பன சிதைவடைந்து ஒரு உறுதியற்ற தெளிவற்ற மனநிலையும், அமைதியற்ற வாழ்க்கையும் அமைவதோடு, பாவமும் விளைகிறது. எமது முன்னைய பெரும் ஞானிகளின் ஆராய்ச்சிப்படி தீய எண்ணங்களை நேரடியாக அழிப்பது கடினம். அவற்றை அடக்க முற்படின் பல மடங்கு பலத்துடன் மீண்டும் எம்மைத்தாக்கும். ஆகவே இவற்றுடன் போராடுவதற்குப் பதில் நல்ல எண்ணங்களை எமது மனங்களில் விதைப்பதன் மூலம் தீய குணங்களை வெற்றி கொள்ளலாம். உதாரணமாக அன்பு என்ற நல்ல குணத்தை வளர்ப்பதன்மூலம்வெறுப்பு, கோபம் முதலிய தீய குணங்கள் படிப்படியாக அகற்றப்படுகின்றன. ஆகவே, எம் மனதை நிரப்ப வேண்டும்

"மனம்போல வாழ்வு" என்பது பழமொழி.

இறை வழிபாடு, பிரார்த்தனை, மந்திர ஜெபம், நாமஸ்மரணம் ஆகியவற்றை நாம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இறைவனிடம் நாம் பரிபூரண நம்பிக்கையுடனும், தகுதியுடனும் ஒன்றைக் கேட்டால் அவன் அதை நிச்சயமாகக் கொடுப்பான். இறைவனின் நாமத்தைப் பாடுதல் பஜனை என்பவை மிக மிக சக்தி வாய்ந்த சாதனமாகும். வெறுமனே பக்தியும், இனிமையுமின்றி நிகழ்த்தப்படும் வறட்டுப் பிரார்த்தனைகளால் எவ்வித பலனும் கிட்டாது. இதய சுத்தியுடனும், அன்போடும் இனிமையாக மனதை உருக்கிப் பாடப்படும் பஜனையின், பிரார்த்தனையின் போது இறைவன் அங்கே பிரசன்னமாகிறான். தனது அருளைப் பொழிகிறான். இத்தகைய பிரார்த்தனையின் சக்தியால் இயற்கையையே மாற்றலாம். நாமும் எமது மன மாசுக்கள் அனைத்தும் நீங்கித் தூயவர்களாகிறோம். பகவான் கிருஷ்ணர் கீதையில் கூறுகிறார்.

"எங்கெங்கு எனது நாமத்தை அன்போடு பாடுகிறார்களோ அங்கு நான் பிரசன்னமாவேன்"

இத்தகைய தெய்வீக பிரார்த்தனைகளில் நாம் எம்மை ஈடுபடுத்தி எம்மையும் இந்த சூழலையும் புனிதப்படுத்த வேண்டும்.

மந்திரங்கள் அபரிதமான சக்திகளைத் தம்வசம் கொண்டுள்ளன. ஒவ்வொரு மந்திரமும் அதற்குரிய சரியான உச்சரிப்புடன் பொருள் உணர்ந்து இடம், காலம் என்பவற்றிற்கேற்ப ஓதப்படும்போது அதற்குரிய மகா சக்தி வெளிப்படுகிறது. எமது முன்னோர்களாகிய ரிஷிகள்

தமது அதி ஆழ்ந்த தியான நிலையில் சக்தி வாய்ந்த அதிர்வலைகளையுடைய பொருளுள்ள சொற்கட்டுக்களைக் கிரகித்தனர் இவைகளே மந்திரங்களாகும். மந்திரத்தின் சரியான உச்சாடனத்தால் எழும் சக்தி வாய்ந்த அதிர்வலைகள் இயற்கையின் சக்திகளைத் தூண்டி மாபெரும் விளைவுகளை உருவாக்குகின்றன. ஒரு மந்திரத்தைத் தீவிரமாக உச்சரிக்கும்போது அதற்குரிய பலன்கள் ஏற்படுவது மட்டுமல்லாது அந்த மந்திரத்திற்குரிய இறை உருவத்தின் தரிசனமும் கிட்டுகிறது. மிகுந்த சக்தி வாய்ந்த மந்திரமாகிய காயத்ரீ மந்திரத்தின் மூலம் விஸ்வாமித்திரர். இப்பிரபஞ்சத்தின் பிறிதொரு தோற்றத்தையே உருவாக்கினார். ஆகவே, மந்திரங்களின் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இறைவனது நாமத்தை, மந்திரத்தை இடைவிடாது எமது மனதுக்குள் நாம் சொல்லிக் கொண்டுவரும்போது அவை படிப்படியாக எம்மைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துகின்றன. நாம் எப்போதும், எவ்வேளையிலும் இறைவனது நாமத்தை மனதில் நினைத்துக் கொண்டிருந்தால் அது எமது தீவினைகளிலிருந்தும், தீய எண்ணங்களிலிருந்தும் எம்மை விடுவித்து எம்மைப் பாதுகாக்கும் சக்தியாகவும் விளங்குகின்றது. எந்த ஒரு கூரிய வாழிலிருந்தும் பேரழிவிலிருந்தும் எம்மைக் காக்கும் சக்தி இறைநாமத்திற்கு உண்டு. இறைவனது திருநாமம் என்னும் அக்னியில் அனைத்துக் கர்மங்களும் தீய குணங்களும், அகங்காரமும் பொசுக்கப்படும். இறைநாமத்தை என்றும் மனதில் அசைபோட்டு அதன் விளைவாக மகிழ்வான நிறைவான வாழ்வையும் இறுதியில் பரமார்த்திகப் பேறையும் பெறுவோமாக.

நல்லதையே எண்ணுவோம், செய்வோம். எவரையும் எவ்விதத்திலும் புண்படுத்தாது வாழ்வோம், இயன்றவரை பிறருக்கு உதவுவோம். இறைவனை என்றும் மறவாதிருப்போம் மனித வாழ்வின் இலட்சியத்தை அடைவோம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**ஜெ. நிவேதன்**
பொறியிற் பீடம் - முதலாம் வருடம்
போராதனைப் பல்கலைக்கழகம்.

# காயமே கோயிலாக

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

அண்டமெங்கணும் பரந்திருக்கும் ஆண்டவனைப் பிண்டமாகிய நமது உடலிலே கண்டுணர்ந்து ஆனந்தம் கொள்வது ஞானிகள் இயல்பு.

நமது உடம்பிற்கும், ஆலயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இறைவனை வழிபடுவதற்குரிய இடங்களாக கோயில், சிவஞானிகள். இருதயம் என்பன சுட்டப்படுகின்றன. இவற்றிலே சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது அரிது. இருதய வழிபாட்டிலே ஈடுபடுதலும், மிகக் கடினமானதே. மனதை அடக்க வல்லார்க்கே அது இயலுமானது. மற்றவர்க்கு மிகுந்த அருமையானது. எனவே, எங்களுக்கெல்லாம் பொருத்தமானது கோயில் வழிபாடே. விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் நிறைந்திருக்கும் இறைவன் ஞானிகள் உள்ளத்திலும், கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். இதனையே "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" என்று மணிவாசகர் சுட்டுவார். அதோடு சொருப இலக்கணத்தினின்றும் இறங்கி தடத்த இலக்கணங்களுக்கு வந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமும் கோயிலே ஆகும்.

எல்லா ஆய்வு முயற்சிகளையும் எல்லா இடத்திலும் ஆற்ற முடியாது. அவ்வாறு ஆற்றினாலும் அதன் முழுமையான பயனை அடைய முடியாது. அவ்வாறே இறைவனுடைய பரிபூரணமான அருளைப் பெறுவதற்கு எல்லோர்க்கும் பொதுவான இடம் கோயிலே ஆகும்.

இதனாலேயே,

"திருக்கோயிலில்லாத திருவிலூருந்
திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
பருக்கோடிக் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல வடவிகாடே"

என்று ஓதப்படுகிறது.

அத்தகைய ஆலயத்திற்கும் மனிதனிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குறிப்பாக ஆகம முறையில் அமைந்த கோயிலுக்கும் மனித உடம்பிற்குமே இத்தகைய தொடர்பு உண்டு. புறத்தே நோக்கின் ஆலயத்தின் அமைப்புக்களான கருப்பக்கிருகம் உடலின் மூலாதாரத்திற்கும் (மூலம்), அர்த்த மண்டபம் சுவாதிட்டானத்திற்கும் (தொப்பூழ்), மகா மண்டபம் மணிபூரகத்திற்கும் (மேல் வயிறு), ஸ்தான மண்டபம் அனாகதத்திற்கும் (நெஞ்சம்), அலங்கார மண்டபம் விசுத்திக்கும் (மிடறு), சபா மண்டபம் ஆக்ஞைக்கும் (புருவ நடு) ஒப்பாகக் காணப்படுகின்றன.

சுருங்கக் கூறின் ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயம் அமைகிறது. மூலஸ்தானம் சிரசினையும், அர்த்த மண்டபம் கழுத்தினையும், மஹா மண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜ கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன. குறிப்பாக மனித உடலின் பாதங்களுக்கு ஒப்பான கோபுரமானது பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகின்றது. இராசகோபுரத்திலே உலகில் உள்ள எல்லாக் பொருள்களின் உருவங்களையும் காணலாம். இறைவனின் திருவிளையாடல்களைக் காட்டுகின்ற உருவங்களையும், இறைவனைத் தொழும் தேவர்களின் உருவங்களும், பிறவும் கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவை இறைவனின் முழுமுதற் தன்மையை உணர்ந்து, அவரின் மேல் அன்பு செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுகின்றன. கோபுரத்தின் வாயில்கள் ஒன்றன் மேல் ஒன்றாக ஒற்றைப்பட அமைந்திருக்கும். வாயில்கள் மூன்றாக இருந்தால் நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தை நிலைகளையும், ஐந்தாக அமைந்தால் ஐம்பொறிகளையும், ஏழாக அமைந்தால் ஐம்பொறிகளோடு மனம், புத்தி ஆகிய ஏழையும் குறிக்கின்றன என்பர். கோபுரமானது எத்தனை வாயில்களைக் கொண்டிருந்தாலும் நிலமட்டத்திலுள்ள வாயிலின் வழியாகவே உட்செல்ல முடியும். அவ்வாறே இறைவனின் மேல் நாட்டம் செல்லும்போது மனம் ஒன்றே பயன்படும் என்பர்.

கோபுரத்தினைக் கடந்து உள்ளே சென்றதும் நாம் அவதானிப்பது பத்திரலிங்கமாகிய பலிபீடம். துள்ளும் மறியாகிய எமது மனம் பலி கொள்வதற்குக் காத்திருக்கின்ற பத்திரலிங்கத்தை வீழ்ந்து வணங்கும் பாவனையாக வணங்குதல் வேண்டும். அங்ஙனம் வணங்குவதனால் மனத்தின் கண் உள்ள காமம், வெகுளி, மயக்கம் முதலிய மயக்கங்களை பலிகொடுத்துவிட்டு, இறைவன்பாற் செலுத்தும் மேலான அன்பையே மனத்தில் வைத்துக் கொள்கிறோம் என்பது கருத்தாகும்.

பலி பீடத்தினைச் சார்ந்து கொடியேற்றக் காலத்திலே கொடி மரம் காணப்படுகின்றது. கொடி மரத்தில் ஓர் ஆடை சுற்றப்பட்டிருப்பதையும், அந்த ஆடையுடன் ஒரு தருப்பைக் கயிறு இணைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். கொடி மரமானது சிவத்தையும், ஆடையானது ஆன்மாவையும் தருப்பைக் கயிறானது ஆன்மாவைப் பீடித்த நிற்கும் பாசத்தினையும் குறிக்கின்றன. அதாவது சிவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா நிற்பது போல, கொடிமரத்தை ஆதாரமாகக் கொண்டு ஆடை நிற்கிறது. கொடி மரம் ஆடை ஆகிய இரண்டு பொருட்களும் ஒன்றாக மதிக்கப்படுதல் போல முத்தி நிலையில் ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலந்து அத்துவிதமாய்

புலனாகின்றது. சிவம் ஆன்மாவுடன் சேர்ந்து நின்றாலும் பாசம் சிவத்தைச் சாராமல் ஆன்மாவையே சாரும் என்பதனையே தருப்பைக் கயிறு உணர்த்துகிறது.

கொடிமரத்துக்கு அடுத்துள்ளது கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்துக்குரிய வாகனம். இது நந்தி எனவும் அழைக்கப்படும். ஆன்மாவைக் குறித்து நிற்கும் இவ் வாகனமானது உள் முகமாக இறைவனை நோக்குகின்றது. அதாவது இறைவனை அடைதலே ஆன்மாவின் நோக்கம் என்பதனையே இவ் வாகனம் சுட்டுகின்றது.

கோயிலின் கரும்பக்கிரகமானது திரைச்சிலையாலே மறைக்கப்பட்டிருக்கும் ஆன்மாவை, மாயையாகிய திரைச்சீலை இறைவனை அறிய முடியாத வண்ணம் மறைத்து நிற்கின்றது. ஞான ஒளி வரும் வரை அடியவனாகிய ஆன்மா பொறுத்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு உடலிற்கும், ஆன்மாவிற்கும், கோயிலிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளந் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே

என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க ஆலயத்திற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பினை உணர்ந்து கொள்ளலாம்.

“உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகழியாக
மடம்படு முணர் நெய்யட்டி உயிரெனும் திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரி கொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை காதை கழலடி காணலாமே”

எனவே, எல்லோர்க்கும் ஏற்றதும், எளிமையானதுமான இறைவனை வழிபடுவதற்கு உகந்த இடமாகிய கோயிலின் தன்மைகளை, அமைப்புகளை உள்ளார்ந்த தத்துவ அடிப்படையில் சிந்தித்து இறை வழிபாடு இயற்றி பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக.

**ந. பாலமுரளி,**
உதவி விரிவுரையாளர்,
பொருளியற்துறை.

# சைவத்தமிழர் வாழ்வியலில் தாய்மை

மனித மன உணர்வுகளை உடல் இச்சைகளைக் கட்டுப்படுத்தி மனிதனுக்கு சாந்தியையும், சமாதானத்தையும், அமைதியையும் அளித்து அவனை ஆனந்தப் பெருவாழ்விற்கு இட்டுச் செல்வனவே மதங்கள். எல்லா மதங்களும் இந்த மகத்தான உண்மையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற நதிகள் தான்; ஆனால் இவற்றிலே சிறப்பு வாய்ந்தது இந்து மதமே! எல்லா மதங்களும் நதிகள் தான் எல்லா நதிகளிளும் வெள்ளம் ஓடுகிறது தான் ஆனால் இவற்றிலே இந்து மதம் ஓர் சமுத்திரம். இத்தகைய சமுத்திரமாம் இந்து மதத்தில் கலக்கும் நதியாம் சைசசமயம் மிகவும் தொன்மையானது. ஆண், பெண் என்ற இயற்கையான படைப்பில் பெண்ணே எல்லா வகையான இயக்கங்களிற்கும் அடிப்படையாக அமையும் சக்தியாகும். இத்தகைய மேன்மை கருதி சைவத் தமிழர் வாழ்வியலில் தாய்மை என்பதை நாம் சற்று நோக்கிக்கொள்வது சிறப்பிற்குரியது எனலாம்.

இந்து சமயம் ஒரு வாழ்க்கை நெறி, வாழ்க்கையை ஆன்ம ஈடேற்றத்திற்கான சாதனமாகக் கொள்வது எமது சைவம். இயற்கையின் படைப்பில் எல்லா இயக்கங்களிற்கும் அடிப்படையாக அமைபவள் பெண் என்ற வகையில் குடும்பத்தின் துடுப்புகளாக இருப்பதுடன் குடும்பத்தின் மேன்மைக்காக, நலத்திற்காக தம்மை அர்ப்பணிப்பவர்கள். எனவே தான் தாயன்பிலும் மேலானது வேறொன்றுமில்லை என்பர். இதன் காரணமாகவே எமது சமயம் "தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" எனக் கூறுகிறது.

நிலத்தைத் தாய்த் தெய்வமாகக் கொள்ளும் வழக்கம் பல பண்பாட்டினரிடையே காணப்படுகிறது. மரம், செடி, கொடி, விலங்கு, மக்கள் என எல்லா உயிர்களிற்கும் வாழ்வு கொடுக்கும் நிலமகளை வழிபட்டமை சைவத்தமிழர் வாழ்வியலில் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு வித்தினை நிலத்தில் புதைத்தால் புதிய துளிருடன் ஓர் ஆக்கம் நடைபெறுகிறது. இதே போன்று பெண்ணும் கருவில் உயிரைச் சுமக்கிறாள். எனவே தான் நிலம் பெண்ணாக உருவகிக்கப்பட்டது மல்லாமல் தெய்வ நிலையிலும் வணங்கப்படுகிறது.

தாயே வழிபடப்படவேண்டியவள் அன்பு, பொறுமை, இரக்கம், தொண்டு, தூய்மை என்பவற்றின் உருவமாகவே தாய் விளங்குகிறாள். தாய் கருவைச் சுமக்கும் சமயத்தில் அவளிடமிருக்கும் ஒழுங்கும் தூய்மையும் அவள் சிசுவை குடும்பத்திலும், சமூகத்திலும் சிறந்த மனிதனாக இந்நிலவுலகிலே வாழ வைக்கிறது. குடும்பத்தை கோயிலாக கொண்டு செயற்படுபவள் தாய்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே" என்பது திருமந்திரம்.

இது தாய்மையின் பண்புக்கு உதாரணம் ஆகலாம். உள்ளத்தை தூய்மையாக்கி கோயிலாகவும், ஊனுடம்பைப் புனிதமாக வைத்திருப்பதாகவும் வாயினாலே அன்பு கனிந்த ஆதரவான வாழ்க்கைக்குத் தேவையானவற்றை சொல்லுவதாகவும், கண்டிப்பும். அன்பும் இணைந்த அற்புதமான தாயின் வாய்ச்சொல் குழந்தையின் வாழ்வைக் கோபுரமாக்குகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்களும் பரிசுத்தமான தொண்டிலே ஈடுபடுவதாலே அவை எல்லாம் ஒளி பெறுகின்றன. "இருளில் இருந்து ஒளிக்கும் சாவினின்று சாவாமைக்கும் இட்டுச் செல்வது உண்மை அன்பு, இந்த அன்பைத்தான் வாழ்வாய் அதாவது நடத்தையாய்க் கொண்டவளே சைவத்தமிழர் கூறும் தாய். எனவே தாயே முதற்குரு. தந்தையைக் குழந்தைக்குக் காட்டி வைக்கும் குரு தாயே!

மகளிர் வாழ்வில் பல பருவ நிலைகளிலும் முக்கியத்துவப் படுத்தப்படுகிறார்கள். பெண்களைக் குழந்தை, குமரி, மனைவி, தாய், முதியோர் என்ற வகையில் ஒவ்வொரு பருவ நிலையிலும் அவர்களின் வழிப்படுத்தல்களை அறியலாம். இங்கு பண்பாட்டின் குறிகாட்டி, வழிபாட்டின் அச்சாணி பெண்கள் என்பது தெட்டத்தெளிவாகிறது.

குடும்பம் என்பது இந்துவைப் பொறுத்த மட்டில் சத்திய நிறுவனம். இந்த நிறுவனத்தை இயக்கும் இயக்கம் தாயே! வீட்டில் நடைபெறும் வழிபாடாக இருந்தாலென்ன சமூக நிலையில் நடைபெறும் வழிபாடாக இருந்தாலென்ன அனைத்தையும் ஆற்றுபடுத்துபவள் தாயே! வாழ்வினை வாழ்வின் மூலம் காட்டி நடத்துபவளே தாய் என்ற நடமாடும் கோயில். குடும்பத்தைக் கோயிலாக்கி இயற்கையின் உதவியையும், அதன் மூலமான வாழ்வையும், எடுத்துக்கூறி அவற்றைப் போற்றிப் பேண ஆற்றுப்படுத்துபவள் தாய். "அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை;அவள் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை" அடி தொழுதல் என்பது அவள் அடி, பாதை பற்றிக் கூறுதலன்றோ? குடும்பத்தைக் கோயிலாகக் கொண்டு செயற்படும் தாயே மனைவி. இல்லத்தின் வாழ்விற்குச் சக்தியாக இருப்பவள் இல்லக்கிழத்தி. மனைவியை 'சகதர்மினி" என வடநூல்களும் 'வாழ்க்கைத்துணை' என வள்ளுவர் குறளும் குறிப்பிடுகின்றன. மனைவியின் ஆக்கம் அதன் சிறப்பு அனைத்துக்கும் அவளே மூலக்காரணி. இந்துக்களின் திருமண வாழ்வில் இடம் பெறும் அனைத்து வழிபாட்டு முறைகளையும் எடுத்துக் கொண்டால் பெண்ணே வழிபாட்டின் மூலவேர் என்பது விளங்கும் எனலாம்.

ஒழுங்கின் மூலம் பிரபஞ்ச ஒழுங்கை அடையும் வழியே சைவத்தமிழர் கூறும் வழிபாடு. பெண் தன் ஒழுங்கால் குடும்பத்தை ஒழுங்குபடுத்தும் நிலையே பெண்ணின் தர்மம். எனவே தான் அவள் கிருகலட்சுமி, மகாலட்சுமி என்று சொல்லப்படுகிறாள். சுவாமி விவேகானந்தர்"ஒழுக்கமுள்ள பெண்களாலேயே உலகம் வளம் பெற முடியும்" என்று குறிப்பிடுவதும் நோக்கற்பாலது. சத்தியத்தையும், தொண்டையும், தூய்மையையும் பேணும் இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை.

நாள்தோறும் வீட்டில் உணவைப் பரிமாறும் தாய் கிருகநாச்சியார். அடுப்பு நாச்சியாரை அக்கினியை வழிபட்டு அதனுடைய அருளாய்ப் பெற்ற உணவை மனத்தூய்மையுடன் பரிமாறும்

போது அது அமிர்தம் ஆகின்றது. பால் நினைந்து ஊட்டும்தாய் தன் பண்பால்குடும்பத்தில் கணவன், பிள்ளைகள், மாமன், மாமி என்று அனைவருக்கும் நோய் ஏற்பட்டால் குல தெய்வத்திற்கு நேர்த்தி வைத்து பிணி நீக்கம் செய்யும் குடும்ப வைத்தியர் அவளே! "வைத்தியம் என்பதே வழிபாடு" எனபதைக் காட்டுபவளே முதியவள். குடும்பம் என்னும் நடைமுறை அமைப்பு சமநிலை இழக்காது தொடர்ந்து நடைபெறுவதற்கு பெண்ணே அடித்தளமாகிறாள் எனக் கூறுவர்.

சைவத்தமிழரிடையே பேணப்படும் பூப்புனித நீராட்டு விழா அவள் தாய்மை என்ற நலத்தைக் கொண்டவள். சமூக வளத்திற்கும் நலத்திற்கும் அவள் இன்றியமையாதவள் என்பதைக் காட்டும் வகையிலமைவன ஆகும்.

'குமரி' என்ற நிலையில் அவள் தனியாக ஆலயத்திற்கு வழிபாட்டிற்குச் செல்லச்கூடாது என்பதை பாவை பாடிய ஆண்டாளே எடுத்தக் கூறியிருக்கிறாள். கூட்டு வழிப்பாட்டைக் கற்றுக்கொடுக்கும் நடைமுறைப்படுத்தும் தாய், பருவமடைந்த பெண்ணின் வாழ்வில் செய்யப்படவேண்டிய வழிபாடுகளை எல்லாம் நாளாந்த வாழ்க்கையில் கற்றுத் தருகிறாள். மாதவிலக்கு ஏற்படும் சமயம் வழிபாட்டில் தடையையும், தாயே சொல்லி அதிலிருந்து விலக்கி வைக்கிறாள். தாய் வயதில் முதிரும் போது முதியவளாகிப் பண்பாட்டின் காவல் தெய்வமாகக விளங்குகின்றாள்.

ஒரு சமுதாயம் பெண்ணினத்திற்கு அளிக்கும் உரிமை பெருமைகளை உரைக்கல்லாக கொண்டு அச்சமுதாயத்தின் பண்பாட்டை மதிப்பிடுவர் சான்றோர். வாழ்வுக்குத் தேவையான கலைகளின் அதிதேவதையாகவும், வெற்றிக்கு அதிதேவதையாகவும் பொருட் செல்வத்திற்கு அதிதேவைதையாகவும் என பெண்மையை போற்றுவது சைவத்தமிழர் மரபாகும். இன்றைய உலகிற்கு இந்து தர்மம் கூறும் சிந்தனை யாதெனில் "தாய்" வழிபடப்படவேண்டியவள் என்பதேயாகும்.

**செல்வி மகியினி பாலச்சந்திரன்**

# கிராமிய வழிபாட்டில் கண்ணகி

சமயம் என்பது புனிதமான ஒன்றைப்பற்றிய நம்பிக்கைகளையும், செயன்முறைகளையும் கொண்ட ஒரு துறையாகும். இது மனிதனின் வாழ்க்கையில் இன்றியமையாத அங்கமாகக்காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு எங்கெல்லாம் மனித சமுதாயமானது வாழந்து வந்துள்ளதோ அங்கெல்லாம் அவ்வச்சமயநெறியானது அம்மனிதர்களின் வாழ்வோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. சமகாலப்பண்பாடுகளில் நிலவும் சமய நம்பிக்கைகள் சமயம் என்ற தலைப்பின் கீழ் பேசப்படுகின்றன. சமயத்தோடு தொடர்புடைய வழிபாடும் அதனோடு தொடர்புடைய பண்பாடும் ஒன்றெனக் கொள்ளப்படுகின்றன. ஆயினும் வழிபாடானது சமயத்தினதும் பண்பாட்டினதும் இரண்டு பக்கங்கள் என்று கூறிக்கொள்ளலாம்.

இந்த வகையில் சைவத்தமிழ் மக்களின் வழிபாட்டை நாம் இரண்டு வகையில் வகுத்து நோக்கலாம்.

1. ஆகம சிற்ப விதிமுறைகளுக்கு உட்பட்ட வழிபாடு
2. ஆகம சிற்ப விதிமுறைகளுக்கு உட்படாத வழிபாடு

ஆகம சிற்ப விதிமுறைகளுக்கு உட்பட்ட தெய்வங்களை பெருந் தெய்வம் என்றும் விதிமுறைக்கு உட்படாத வழிபாட்டு நெறியினை கிராமியச் சமய நெறி என்பர். இதனை சிறுதெய்வ வழிபாடு என்றும் கூறுவர். இக்கிராமிய வழிபாட்டு நெறியானது நாட்டுப்புற மக்களின் பண்பாடு, சாதிநிலைப்பாடு, பொருளாதார நிலை, சமூக அந்தஸ்து போன்றவற்றை வெளிப்படுத்திக்காட்டும் சாதனமாக அமைவதுடன் இவ்வழிபாடு பண்டையக்காலம் தொட்டு இன்றுவரை வழிபடப்பட்டு வருகின்றன.

இக்கிராமிய வழிபாட்டுத் தெய்வங்கள் தமக்கெனச் சில பொதுத்தன்மைகளைக் கொண்டுள்ளன. பொதுவாக கிராமங்களின் மத்தி, எல்லை, காடு, குளம், மலைப்புறம் போன்ற இடங்களெல்லாம் இவற்றின் வழிபாட்டிடங்களாகக் கொள்ளப்படுகின்றன. பெருமளவில் பிராமணர் அல்லாதோரே பூசாரிகளாகவும் காணப்படுவர். கட்டுச்சொல், குறிசொல் போன்ற விடயங்கள் இவற்றின் வழிபாட்டிடங்களில் இடம் பெறுவதடன் உயிர்ப்பலியை ஏற்பவையாகவும், பொதுமக்களால் உருவாக்கப்பட்டவையாகவும் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவையாகும். நித்திய வழிபாடு அற்றவையாகவும் இவை காணப்படுகின்றன. இவற்றின் வழிபாட்டு ஸ்தலங்கள் பெரும்பாலும் கற்கள், மரங்கள், புற்றுக்கள் என்பவற்றில் அமைக்கப்பட்டிருக்கும். குறிப்பாக இவை சிறப்பான ஆலய அமைப்பைக் கொண்டு காணப்படமாட்டாது.

பொதுவாக இவ்வழிபாடானது தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழநாட்டிலும் சிறப்பிடம் பெற்றுக்காணப்படுகின்றது. இத்தெய்வங்களின் தோற்றத்தை நாம் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றவை.
2. இனக்குழு அமைப்பில் வாழ்ந்து மடிந்தவர்களின் மரபுக்கதைகளை அடிப்படையாகக் கொண்டவை.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு கண்ணகி வழிபாடு பற்றி நாம் சுருக்கமாக நோக்கும்போது கிராமியப் பெண் தெய்வங்களில் ஒன்றாக கண்ணகி போற்றப்படுகின்றாள். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் சாதாரண ஒரு வணிகப் பெண்ணான கண்ணகியே தெய்வத்தன்மை பெற்று இன்று சிறுதெய்வமாக வழிபடப்படுகிறாள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்ததன் மூலம் தொடக்கி வைக்கப்பட்டது என்பதை வரலாறுகள் அறியத்தரும். கஜபாகு என்ற மன்னன் இத்தெய்வ வழிப்பாட்டைச் சிறப்பிக்கும் வகையில் ஆடிமாதம் தோறும் இத்தெய்வத்திற்குப் பெருவிழா எடுத்து வந்துள்ளான். இன்றும் கூட இவ்வழிபாடு சிங்கள் மக்களிடையே முக்கியம் பெற்றுக் காணப்படுவதை அவதானிக்கலாம். தொன்றுதொட்டு இவ்வழிபாடு நிலவியதற்கு கண்டெடுக்கப்பட்ட உருவங்கள் சான்றாக அமைகின்றன என ஹென்றிபார்க் கூறுகிறார். கஜபாகு மன்னன் ஈழம் திரும்பியபோது சம்புத்துறை வழியாக வந்து கந்தரோடை அங்கணாமைக் கடவையில் கண்ணகிக்கு கோவில் ஒன்றை அமைத்து பின் இவ்வழிபாடை நாடெங்கும் பரப்பும்படி கட்டளை இட்டான் எனவும் இதனை ஒட்டியே சிநோதைய சிங்கை சூரியனின் காலத்தில் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் கூட ஆலயங்கள் அமைக்கப்பட்டன என வரலாறுகள் அறியத்தருகின்றன.

இவ்வகையில் இன்று ஈழநாட்டின் பல பகுதிகளிலும் கண்ணகி அம்மனுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்க ஆலயங்களாக நாம் பின்வருவனவற்றை வரையறை செய்யலாம். யாழ்ப்பாணம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், மந்திகை கண்ணகி அம்மன் கோவில், செட்டிப் பாளையம் கண்ணகி அம்மன் கோவில், விடத்திலப்பளை கண்ணகி அம்மன், வந்தாறுமூலை கண்ணகி அம்மன், கொக்கட்டிச்சோலை கண்ணகி அம்மன், களுவாஞ்சிக்குடி கண்ணகி அம்மன், காரைதீவு கண்ணகி அம்மன், மண்டூர் கண்ணகி அம்மன், துறைநீலாவணை கண்ணகி அம்மன் போன்றன. இவ் ஆலயங்களின் வழிபாட்டு முறைகள் சடங்குகளோடு கூடிய வேறுபட்ட வழிபாட்டு முறைகளாகக் காணப்படுகின்றன.

கண்ணகி அம்மனுக்கு நிகழ்த்தப்படும் வழிபாட்டு முறைகள் குறித்து நோக்குகையில் ஆகமம் சார்ந்த முறையிலும், சாரா முறையிலும் இவ்வழிபாடானது நிகழ்த்தப்பட்டு வருகின்றமையைக் காணலாம். குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பொங்கல், காவடி, பாற்செம்பு, நீர்க்கஞ்சி வார்த்தல், குளிர்த்திப்பாடல், இசைத்தல் என்ற வகையில் ஆகமம் சாரா முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. மட்டக்களப்பு திருமலை போன்ற பிரதேசங்களில் சற்று வித்தியாசமான முறையில் வழிபடப்படுகின்றது. மட்டக்களப்பில் கண்ணகியை "கண்ணகை" என்று அழைப்பது சிறப்பம்சமாகும். கண்ணகி என்றால் கண்ணகிக்கு ஒளியைக் கொடுப்பவர் என்பது பொருளாகும். மேலும், இப்பிரதேசங்களில் ஊர்க்காவல் பண்ணல், கதவு திறத்தல், கல்யாணக்கால் வெட்டுதல், கும்பம் வைத்தல், ஏடுபடித்தல், மடிப்பிச்சை எடுத்தல், விநாயகப்பானை ஏற்றல், குளிர்த்திபாடல் என்பவற்றுடன் காவடி எடுத்தல், அங்கப்பிரதட்சணம், போர்த்தேங்காய் அடித்தல், பிள்ளைவிற்றல், கும்மி. கூத்து, கரகம் போன்ற அம்சங்கள் முக்கிய இடம் பெறும். வழிபாட்டின் போது பறை, உடுக்கு போன்ற கருவிகள் வாசிக்கப்படுவதும் இதன் சிறப்பம்சமாகும்.

நோய்களில் இருந்து விடுதலை வேண்டியும், மழைவளம் வேண்டியும் வழிபடப்படும். இதுதவிர குக்கல், அம்மை, சின்னம்மை, வயிற்றுக்கடுப்பு முதலிய நோய்களுக்கு ஆளாக வேண்டிவரும் என அஞ்சும் மக்கள் இந்நோய்களில் இருந்து விலக்கித் தருமாறும் கண்ணகியை வேண்டி நின்றனர். இவ்வகையில்,

"நாடு செழித்து நன்மழைபெய்து
செந்நெல் விளைந்து தேசம் தழைத்து...."

என்ற பாடல் இவ்வழிபாட்டின் சிறப்பை உணர்த்தி நிற்கும்.

கண்ணகி வழிபாட்டுச் சடங்குகளில் கல்யாணச்சடங்கும், குளிர்ச்சியுமே விசேடமானவை. அதாவது கண்ணகிக்கும், கோவலனுக்கும் திருமணம் நடப்பது போல் பாவனை செய்து, செய்யும் சடங்கே கல்யாணச்சடங்காகும். இச்சடங்கு அன்று பகல் கல்யாணக்கால் வெட்டுவதற்கு கட்டாடியாரும், ஊர் மக்களும் சென்று பொருத்தமான தடி ஒன்றை வெட்டி உரித்து மஞ்சள் நீரில் கழுவி திருநீறு பூசி மாலையணிவித்துக் கோயிலுக்கு கொண்டு வருவதற்கு கல்யாணப் பெண் போல் அலங்கரித்து சடங்கு நடைபெறும். இந்நிகழ்வின் போது கண்ணகியின் திருமணம் நடந்ததைப் பாடலாக அந்தந்த ஊர்மக்களுக்கு உரித்தான மெட்டுடன் பாடுவார்கள். இதனை "கல்யாணப்படிப்பு" என்பர். இச்சடங்கின் போது மக்கள் கூறைச்சேலையில் தாலி, மோதிரம், பலகாரம், பூசைப்பொருட்கள் என்பவற்றைக் கொண்டு வந்து கொடுப்பர். பூசை முடிந்ததும் கல்யாணப்பலகாரம் பரிமாறப்படும். இத்தினம் இவ்வாலயமானதும் திருமண வீடு போல் அலங்கரிக்கப்படுவதுடன் வழிபாட்டம்சங்களுடன் கூடிய இந்நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெறும்.

இன்று கண்ணகி வழிபாடானது ஆகமம் சார்ந்த வழிபாட்டு நெறியில் சென்று கொண்டிருக்கின்றமையை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக காரைதீவு அம்மன் ஆலயத்தின் மூலஸ்தனத்தில் கண்ணகி விக்கிரகமானது வைக்கப்பட்டு பிரதம குருக்களால் பூசைகள் நிறைவேற்றப்படுகின்றன. கொடியேற்றத் திருவிழாவும் கூட இடம் பெறுகின்றது. கண்ணகி ஆகம வழிபாட்டிற்குரியவள். இல்லாதுவிடினதும் இன்று மேல்நிலையாக்கப்பட்டுள்ளாள் .ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இன்று கண்ணகிக்கு ஆலயங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் யாழ்ப்பாண பிரதேசத்தில் காணப்படுகின்ற மட்டுவில் கண்ணகி அம்மன் ஆலயம் குறிப்பிடத்தக்கது. இது யாழ்ப்பாணம் சாவகச்சேரியிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள மட்டுவில் என்ற கிராமத்தில் உள்ளது. இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் வருகின்ற ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொங்கல் இடம்பெறும். சிறிய கட்டிடத்தோடு கூடிய இவ்வாலயம் சுமார் 150 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். நீர்க்கஞ்சி வார்த்தல், காவடி எடுத்தல், பாற்செம்பு எடுத்தல் போன்றன நேர்த்திக்கடன்களாக இவ்வாலயத்தில் நிறைவேற்றப்படுகின்றன. பங்குனி மாதம் தவிர்ந்த ஏனைய நாட்களில் நித்திய பூசைகள் இடம் பெறுகின்றன. பிராமணக் குருக்கள் மாரே இங்கு பூசைகள் நிகழ்த்துகின்றனர்.

மேலே கூறப்பட்டுள்ள ஆலயத்தைப்போல முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் வரலாற்றுப் பெருமை கொண்ட மற்றுமொரு கண்ணகி அம்மன் ஆலயமாகும். ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தை அடுத்துவரும் திங்கட்கிழமைகளில் இங்கு பொங்கல் இடம்பெறும்.

சிறுகட்டிடத்தோடு காணப்படும் இவ்வாலயம் வன்னிப்பிரதேசத்தின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. பொங்கல் தினத்தன்று அருகிலுள்ள நந்திக்கடலில் நீர் எடுத்து விளக்கேற்றுவது இன்றும் வழமையாக உள்ளது. அடுத்து மட்டக்களப்பில் .இருந்து பதினாறு மைல் தொலைவிலுள்ள களுவாஞ்சிக்குடி எனும் இடத்திலுள்ள கண்ணகி அம்மன் ஆலயம் இருநூறு வருடங்கள் பழமைவாய்ந்த மற்றுமொரு புகழ்பூத்த கண்ணகி அம்மன் ஆலயமாகும். வைகாசிப் பூரணையில் உற்சவம் இடம் பெறும். உற்சவகாலங்களில் உடுக்குத்தாளத்தோடு ஊர் சுற்றும் காவியங்கள், குறத்திப்பாடல்கள், போன்றன பாடப்படுவது வழக்கம். இங்கு நித்திய பூசை நடைபெறுவதில்லை. எனினும் கற்பக்கிரக கதவு திறக்காமல் பூசை நடைபெறும்.

இவ்வாறாக கண்ணகி அம்மனுக்கு பல்வேறுபட்ட இடங்களில் ஆலயங்கள் அமைத்து வழிபட்டு வருகின்றமை மட்டுமல்லாமல் வேற்று மதத்தவர்களும் கூட வழிபடுகின்றனர். அந்த வகையில் சிங்கள மக்களை எடுத்துக்கொண்டால் இவர்கள் கண்ணகியை பத்தினிதெய்யோ என்று அழைத்து வழிபட்டு வருகின்றனர். சிங்கள் மக்கள் வழிபடுவதற்கு ஆதாரங்களாக பத்தினிவரல்ல, பத்திரி கத்தாவ, கஜபாகத்தாவ என்ற நூல்கள் அமைந்துள்ளன. அதேவேளை இத்தெய்வத்திற்குரிய ஆலயங்கள் நடுவப்பிட்டிய, குருநாகல், கட்டுக்கம்பளை போன்ற இடங்களில் இருப்பதைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம். இந்தவகையில் கண்ணகியானவள் வேற்றுமதங்களிலும் செல்வாக்குப் பெற்றுள்ளாள் என்பதை அவதானிக்கலாம்.

பொதுவாக கிராமிய வழிபாட்டின் இன்றைய நிலையை நோக்குகையில் இன்று இவ்வழிபாட்டை பின்பற்றுபவர்களின் தொகை குறைவு என்றே கூறலாம். நவீன வசதிகள். கல்வியறிவு இளைஞர்களிடையே நம்பிக்கையின்மை போன்றன இதற்குரிய காரணங்களாகும். கல்வியறிவு விருத்தியும் இவ்வழிபாட்டிற்கு முக்கிய தடையாகும். சில மக்கள் இவ்வழிபாட்டை எள்ளி நகையாடுகின்ற நிலையும் இன்று காணப்படுகின்றது. குறிப்பாக இளைஞர்களிடையே இப்போக்கு மிகுதியாக உள்ளது. இத்தகைய பல்வேறு காரணங்கள் இருப்பினும் இவ்வழிப்பாடானது முற்றுமுழுதாக அழிந்துவிடவில்லை எனலாம். இன்றும் இவை நிலைத்திருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. குலமரபு பேணுதல், பயம், நம்பிக்கை, தீராத நோய்களைத் தீர்த்தல், சமரச மனப்பான்மை போன்றனவே இன்றும் இத்தகைய கிராமிய வழிபாடுகள் நிலைத்து நிற்கக் காரணங்களாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**திரவியநாதன் தீலிபன்,**

மெய்யியற்துறை - இரண்டாம் வருடம்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.

# திருவாசகமென்னுந்தேன்

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

உலகமெல்லாம் போற்றி வணங்குகின்ற சிறப்புமிக்க சமயங்கள் பலவுண்டு. அவற்றுள் தொன்மைச் சிறப்பும், ஆழ்ந்த தத்துவத்தையும் கொண்டு விளங்கும் சமயம் இந்து சமயம் என்றால் மிகையாகாது. இந்து சமயத்தின் இத்தகைய சிறப்பிற்கும், அதன் வலிமைக்கும், சமயம் கூறும் அழிக்கமுடியாத உண்மைகள் தான் காரணமாகின்றன. இவ்வுண்மைகளை இந்து சமயத்திற்கே உரித்தான பல நூல்கள் எடுத்தியம்புகின்றன. அந்த வகையில் திருவாசகம் தித்திக்கும் தேன் சுவையுடன் இந்து சமயத்தின் சிறப்பினை எடுத்தியம்புவதோடு அழியாத வரலாற்றில் நிலையாகியும் உள்ளது.

இந்து சமயத்தின் கண்கள் என்ற பெருமையுடன் மதிக்கப்படுபவை தேவாரமும், திருவாசகமும் தான். ஒரு மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு தேவையான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருடார்த்தங்களை விளக்கி, இந்து மதத்தவர் மட்டுமன்றி ஏனைய சமயத்தவரையும் தன்பால் இழுத்து வைத்திருக்கும் பெருமை திருவாசகத்திற்கே உரியது.

"திருவாசகம் இங்கு ஒரு கால் ஓதின்
கருங்கல் மனதும் கரைந்துருகும்"

என்று கூறும் சிவப்பிரகாச அடிகளின் கூற்று இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும். இரண்டே வரிகளில் திருவாசகத்தின் இனிமையை அழகுற எடுத்துக் கூறியுள்ளார். திருவாசகம், சிவபிரானைப் போற்றிப் பணியும் பக்திப் பாடல்களாக உள்ளன. 'சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்த தெய்வச்சாவியாக..." அவதரித்த மணிவாசகரால் மனம் உருகி உருகிப் பாடப்பெற்றது திருவாசகம். மணிவாசகர் பாட பரமசிவனே இதனை எழுதினார் என்பதுவரலாறு. இறைவனது பெருமையையும் அவன் காட்டிய கருணையையும் நினைத்து நினைத்து.... உருகி உருகி ... பாடப் பெற்றமையால் இன்று இதனை படிப்போரை மட்டுமல்ல கேட்போரையும் மனம் நெகிழச் செய்கின்றது. இதனால் தான் "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்று ஆன்றோர் குறிப்பிடுகின்றனர் போலும்.

உயிர்கள் தம்முடைய மாயப் பிறவிகளை அறுத்து இறைவனை அடைவதற்குரிய வழிகளை திருவாசகம் கூறுகின்றது. ஆணவம், கன்மம் மாயை என்ற மும்மலங்களில் இருந்து விடுபட்டு உயிர்கள் இறைவனை அடைதல் தான் அவற்றின் பேறு. அதற்கு அந்த முத்தியின்பத்தை அடைவதற்கு பக்தியும், மன அமைதியும் அவசியமாகின்றது. இதனைத் தருவது திருவாசகமே என்றால் மிகையாகாது. மும்மலங்களை நீக்கி முத்தியின்பத்தை தரும் மந்திரமாகவும் திருவாசகம் விளங்குகின்றது.

"வான் கலந்த மணிவாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால் கலந்து செழுங்கனி தீஞ்சுவை கலந்து-என்
ஊன் கலந்து உயிர் கலந்து தெவிட்டாமல் இனிப்பதுவே"

என்று இதன் சிறப்பை போற்றிகிறார் வள்ளலார்.

திருவாசகம் ஐம்பத்தியொரு பதிகங்களை கொண்டுள்ளது. சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் வரை இவை அடங்கும். முதலாவதும் தலையாயதுமாக விளங்கும் சிவபுராணம் சிவனின் பெருமை கூறும் ஒரு நூலாக விளங்குகின்றது. 95 அடிகளுடன், கலிப்பாவால் ஆக்கப்பெற்று இந்நூல் சிறந்த பல உண்மைகளை எடுத்தியம்புகின்றது. ஆன்மாக்கள் கன்மங்கள் செய்கின்றன. கன்மங்களுக்கு ஏற்றவகையில் பிறப்புக்கள் நிகழ்கின்றன. ஒரு மனிதனுக்கு ஏழு பிறவிகள் என்பது பொதுவாக இந்துக்களின் நம்பிக்கை. அதனை மணிவாசகர்,

'புல்லாகிப், பூடாய் புழுவாய் மரம் ஆகி
பல்மிருகமாகி பறவையாய் பாம்பாகி
கல்லாய், மனிதராய், பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய் தேவராய்...
செல்லா நின்ற இத்தாவார சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்...."

என்றார். இந்தப் பிறவியாகி பெருங்கடலை கடப்பவனே முத்தியின்பத்தை அடைவான். அந்த முத்தி இன்பத்தை அடைவதற்கு பிறவியை இல்லாது ஒழிக்க அந்த இறைவனாலயே தான் முடியும் என்பதை..."மாயப் பிறப்பறுக்கும் மன்னன்..." என்று கூறியிருப்பதும் நோக்கத்தக்கது. மேலும் இறைவனது பாதங்களை சரணடைந்து அவனருளாலேதான் வீடுபேறு அடைய இயலும் என்பதை தன்னுடைய அனுபவத்தின் வாயிலாக எடுத்துரைப்பதை காணலாம்.

"மெய்யே உன் பொன்னடிகள்
கண்டு இன்று வீடு உற்றேன்"

என்று கூறுவதனூடாக இறைவனது பொன்னடிகளை கண்டபின்பே விடுதலை பெற்றேன் என்று கூறுகின்றார். 'மனம் கரைந்து மலம் கெடுக்கும் வாசகம் திருவாசகம், அந்தளவிற்கு இனிமையும், செழுமையும் நிறைந்தது. உண்மையிலேயே பக்தி இல்லாதவர்கள் கூட திருவாசகத்தை படித்தால் உள்ளம் உருகுவர். திருவாசகத்து மாணிக்க வாசகர் சிவபெருமானிடம் ஆழ்ந்த அன்பு உள்ளவர். கணவரிடம் மாறாத காதலை கொண்ட கற்புள்ள மங்கை போன்றவர். கற்புள்ள மங்கை தன் காதலனிடம் கொண்டுள்ள அன்பையும், மதிப்பையும் போலவே மாணிக்கவாசகரும் சிவபெருமானிடம் ஆழ்ந்த அன்பை கொண்டிருந்தார். அவ்வாறே ஏனையோரையும் அவன்பால் வழிப்படுத்துவதையும் காண முடிகின்றது. இறை பக்தனது மனமானது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

"தழுவது கண்ட மெழுகது போலத்
தொழுதுளமுருகி யழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொறுனும் பேதையுங் கொண்டதுவிடாதெனும்
படியே யாகிறல் விடையள அன்பிற்
பசுமரத்தாணி யறைந்தாற்போல..."

என்று அழகுற எடுத்துக்காட்டுகின்றார்.

திருவாசகமும் ஒவ்வொரு மனிதனதும் நம்பிக்கைக்கு வலுச் சேர்க்கின்றது. ஒருவனுக்கு உலகிலுள்ள எல்லாத்துணைகளையும் விட நம்பிக்கைதான் மிகச் சிறந்த துணை என்பதை இது அழகுற எடுத்தியம்புகின்றது. மாணிக்கவாசகர் இறைவன் மீது அபார நம்பிக்கை கொண்டவர் இறைவன் தன்னை ஆட்கொள்வான் என்ற உறுதியும், நம்பிக்கையும் தான் அவரது சிறப்பிற்கு காரணம். கடவுளுக்கு தான் ஆட்பட்ட காரணத்தால் தான் அடைந்த இன்ப நிலையை பாடுகிறார். ஏனையோரும் கடவுளை நம்பிக்கையோடு வணங்க இறைவனுக்கு ஆட்பட வேண்டும் என்று கூறுகின்றார். விதையொன்று இல்லாமலே நினைத்த மாத்திரத்திலேயே எல்லாவற்றையும் உண்டாக்கிவிடும் வல்லமையுடையவன் இறைவன்.

வானுலகம், மண்ணுலகம் ஏனைய உலகங்கள் யாவற்றையும் படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனும் அவனே. தன்னை வணங்காதவர்களுக்கு கூட அவன் தீமை இழைக்க மாட்டான் என்பதை,

"விச்சு அது இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுவதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்! வஞ்சகப்பெரும்
புலையனேனை உன், கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பர்க்கு
உரியன் ஆக்கினாய்; தாம் வளர்த்தது ஓர்
நச்சுமரம் ஆயினும், கொலார்;
நானும் அங்ஙனே; உடைய நாதனே!"

என்ற திருவாசகப்பாடல் கடவுளின் இயல்பை புரியவைக்கின்றது. இதில் மாணிக்கவாசகர். நச்சுமரம் ஆனாலும் அதனை வளர்த்தவர்களுக்கு வெட்ட மனம் வராது அவ்வாறே நான் கெட்டவனாக இருந்தாலும் உன்னால் வளர்க்கப்பட்டவன் இதை உணர்ந்து கொள்ளவேண்டும் என்று இறைவனுக்கு விண்ணப்பம் இடுவதை காணமுடிகின்றது.

அறம், பொருள், இன்பம், வீடு போன்ற வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த புருடாந்தங்களை அழகுற விளக்கும் திருவாசகத்தில் குறிக்கப்படாத வாசகங்களே இல்லையெனலாம். திருவாசகம் தான் திருமுறைகளின் முடி என்று கூட வர்ணிக்கப்படுகின்றது. இதனால் தான் ஔவையாரும்,

"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென்றுணர்"

என்று கூறியிருக்கின்றார் போலும். அறக்கருத்துகள், தத்துவக் கருத்துகள் போன்றன திருவாசகத்தில் கூறப்பட்டுள்ளன. பேதி மருந்திற்கு சக்கரை கொடுப்பது போல... தத்துவங்கள் இனிமையாக விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் இறைவனை தாயாக ஒப்பிட்டு பாடியிருக்கின்ற தன்மையையும் திருவாசகத்தில் காணலாம். "பால் நினைந்தூட்டும் தாயிலும் சாலப்.." என்று வருகின்ற அடி இறைவனின் பெருமையை அழகுற எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய இறைவனை நான் சிக்கெனப் பிடித்துவிட்டேன் இனி எங்கெழுந்தருளுவது... என்று பாடி பக்திப் பரவசமாகின்றார். இறைவன் ஆதி அந்தம் இல்லாதவன் அவனுக்கு தோற்றமும் இல்லை மறைவும் இல்லை. பழமையானவனும் அவன் தான் புதுமையானவனும் அவன்தான். இவ் உண்மையை, "ஆதியும், அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி..." என்று குறிப்பிடுவதோடு,

"முன்னைப்பழம் பொருட்டும்
முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும்
போர்த்தும் அப்பெற்றியனே!

என்றும் குறிப்பிடுகின்றார். இறைவன் மீது அவர் கொண்ட காதலே திருவாசகப் பாடல்களாக விளங்குகின்றன. இது சிறந்த அகத்திணை இலக்கியமாகவும் கொள்ளப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அன்பும், ஆண்டவனும் வேறல்ல அன்னை தந்தைக்கு ஒப்பானவன் என்ற உண்மையே,

"அம்மையே! அப்பா! ஒப்பிலாமணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!

என்று உள்ளமுருகிப் பாடுகிறார். எத்தனை தடவை கேட்டாலும் தெவிட்டாத தித்திப்பை உடைய திருவாசகப்பாடல் இது.

இறைவனின் பெருமைகளை எடுத்துக்கூறும் திருவாசக பாடல்கள் இயற்கை காட்சியில் கூட எம்மை இலயிக்க வைத்து விடுகின்றது. இயற்கையை இயற்கையாகவே சித்தரித்து பக்திப் பரவசத்தை ஏற்படுத்துகின்றது. திருவாசகத்திலே திருப்பள்ளி எழுச்சி கூறும் பத்து பாடல்கள் பக்தி ரசம் சொட்டுவதோடு இயற்கைத் தேனும் வடிகின்றது.

"கூவின கோழி கூவின சேவல்
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்..."

என வருகின்ற திருப்பள்ளி எழுச்சி காலைக்காட்சியை அழகுறச் சித்தரிக்கின்றமை குறிப்பிடக்கூடியது. இவரது பாடல்களின் இனிமையை,

"திருவார் பெருந்துறை செழுமலர் குருந்தின்
நிழல்வா யுண்ட நிகரிலானந்தத்
தேன் தெக் கெறியுஞ் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்"

என சிவப்பிரகாசர் குறிப்பிட்டிருப்பது சிறப்புக்குரியதாகும்.

இத்தகைய சிறப்புகள் பொருந்திய திருவாசகத்தின் பெருமையை எல்லோரும் உணர வேண்டும். இதனால்தான் என்னவோ இந்தியாவில் புதுவருடத் தினத்தன்று இளையராஜாவின் இசையமைப்பில் 'திருவாசகம்' இசை அல்பம் கூட வெளியிடப்பட்டது. திருவாசகத்தின் சிறப்புகளை உலகம் அறிய வேண்டும். குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு அதனைத் தெரியப்படுத்த வேண்டும் என்று இளையராஜா கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பிடித்த திருவாசகம், ஒவ்வொரு இந்துவினதும் மனதிலும் வலுவுடன் இருத்தல் வேண்டும். அப்போது திருவாசகம் மேலும் பெருமை அடையும்.

"தொல்லை யிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத்தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவுரெங்கோன்
திருவாசக மென்னுந்தேன்"

**க. தர்சினி,**
புவியியல் துறை,
மூன்றாம் வருடம்.

# இந்து மதமும் இந்து மானுடமும்

மதம் என்பது தனிப்பட்ட ஒருவரது நம்பிக்கையாகவும் அவரது நன்னடத்தைக்கு வழிகாட்டியாகவும் அவரது மனத் தடுமாற்றங்களின் போது ஒரு பற்றுக்கோடாகவும் உள்ளளவும் அது பிரச்சினைக்குரியதல்ல. அந்தளவில், சமூகப்பயனுள்ள முறையில் அது பங்களிக்கவும் இடமுண்டு. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் அது குறுக்கிடும் போது, அது தனிமனித நம்பிக்கை என்ற எல்லையை மீறுகிறது. நிறுவனமாக்கப்பட்ட மதங்களும் நிறுவனங்களாற் பேணப்படும் மதங்களும் அரசியல் அதிகாரத்தின் கருவிகளாகின்றன. தமது இருப்பை உறுதி செய்ய வேண்டி அதிகார பீடங்களுடனும் சமூகத்தைச் சுரண்டிக் கொழுத்தவர்களுடனும் மத பீடங்கள் செய்த சமரசங்களின் கதைகள் உலகின் முக்கியமான மதங்களின் வரலாற்றின் கறைபடிந்த பல பக்கங்களை நிரப்புகின்றன. ஒவ்வொரு மதத்தின் தலைமையும் தனது வெற்றி பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளுகிற வரலாற்று நிகழ்வுகளின் கூறப்பட்ட விடயங்களிலும் கூறப்படாத விடயங்களிலும் அவை வெட்கப்பட வேண்டிய பகுதிகள் மிகுதி. எனவேதான் மதங்கள் எவ்வளவு உயர்வான விடயங்களைப் பற்றிப் பேசுவதாகக் கூறப்பட்டாலும் மதங்களின் நடைமுறை பல அந்த வேளைகளில் உயர்ந்த விடயங்களை மீறுகிற விதமாகவே அமைந்து வந்திருக்கிறது. இந்த விதமான குற்றங்களின் எதிர் வினையாகவே மதங்களுள்ளிருந்து சீர்திருத்தவாதிகளும், கிளர்ச்சியாளர்களும் தோன்றியுள்ளனர். எனினும், ஊழல் மிக்க ஒரு அரசியல் நிறுவனம் போன்று, மிகத் தந்திரமாக, மத நிறுவனங்கள் அந்தச் சீர்திருத்தவாதிகளின் பங்களிப்புக்களையும் கிளர்ச்சியாளர்களது எதிர்ப்புக் குரல்களையும் தங்களுக்கு வசதியானபடி மாற்றிக் கொள்ளுகின்றன.

விலக்கின்றி, ஒவ்வொரு பெரிய மதமும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்த உதவியுள்ளது. ஆணுக்குப் பெண் தாழ்வானவர் என்ற கருத்து ஒவ்வொரு மதத்திலும் வற்புறுத்தப்படுகிறது. அவ்வாறே, பிற சமூக ஏற்றத் தாழ்வுகளும் பலவாறாக நியாயப்படுத்தப்படுகின்றன. முழுமையான மனித சமத்துவம் எந்த மதத்திற்கும் நடைமுறையில் உடன்பாடானதாக இருந்ததில்லை. இந்து மதம் என்று அடையாளப்படுத்தப்படும் பல்வேறு இந்தியத் துணைக்கண்ட மதங்கள், வெவ்வேறு கால கட்டங்களில், மனித அசமத்துவத்தின் முக்கிய அடையாளங்களுள் ஒன்றான சாதி முறையைத் தமதாக்கிக் கொண்டுள்ளன. சாதி முறையை எதிர்த்து உருவான லிங்காயத்துக்கள் கூட ஒரு சாதி அடையாளத்துக்குள் தம்மைச் சிறைப்படுத்திக் கொண்டுள்ளனர். எனவே, சமூக அநீதிகளைக் களைய விரும்புகிற ஒரு இந்துவின் முன்னால் பால் அடிப்படையிலான அடக்குமுறையும் அதிகாரமும் சார்ந்த முரண்பாடும் உழைப்போர் - உழைப்பை உறிஞ்சி வாழ்வோர் என்ற முரண்பாடும் சாதி முரண்பாடும் முக்கியமான சவால்களாக உள்ளன. இவற்றுள் மூன்றாவது முரண்பாடு இந்துக்கள் எனப்படுவோரின் தனித்துவமான சுமை. நாகரீக உலகில் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வெளியில் உள்ள எவருமே நம்பக் கடினமான ஒரு ஒடுக்கு முறையாகச் சாதி ஒடுக்குமுறை உள்ளது. அது போலவே பழமைவாத இந்துக்களிடையே மிகக் கொடுமையான ஆணாதிக்கம் செயற்படுகிறது. படித்த, நவீன வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட இந்துக்கள் பலரும் இன்னமும் இந்த மனநிலையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள இயலாமல் உள்ளனர். ஏனெனில் மத நம்பிக்கையோடு சேர்ந்து ஒரு குழப்பமான சிந்தனை முறையும் அவர்கள் மனதில் வேரூன்றியுள்ளது.

மத நம்பிக்கைகள் பலவும் புனைவுகளை ஆதாரமாகக் கொண்டவை. கடவுளர் நிகழ்த்திக் காட்டிய 'அற்புதங்கள்' எனப்படுவன. முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை. அவையாவும் கடவுளின் 'சர்வ வல்லமை' என்ற கருத்தை மறுப்பன. ஏனெனில் இயற்கையும் அதன் விதிகளும் கடவுளின் ஆக்கங்களென்றால் இயற்கையின் விதிகளைக் கடவுளே மீறும் போது செல்லாமற் போவன கடவுளின் விதிகளே. தான் இருப்பதைத் தன்னாற் படைக்கப்பட்ட ஒரு அற்பப் பிறவிக்கு உணர்த்தத் தனது சர்வவியாபகமான விதிகளை மீறுகிற ஒரு தடுமாற்றமானவராகவோ தன்னம்பிக்கையற்றவராகவோ, தாழ்வு மனநிலை கொண்டவராகவோ தான் இருக்க இயலும். எனவே அற்புதங்கள் பற்றிய புனைவுகள் யாவும் மதங்கள் உரிமைகோரும் உண்மைத் தன்மையை மறுதலிப்பவை.

மூட நம்பிக்கைகள் பல சமுதாயங்களிலும் உள்ளன. அவற்றை ஒரு மதம் நியாயப்படுத்துகிறபோது அம் மதம் சமூக முன்னேற்றத்துக்குத் தடையாகிறது. சோதிடம், பில்லி, சூனியம், மாய மந்திரங்கள் போன்ற பல பித்தலாட்டகளும் அவற்றோடொட்டி உலாவுகிற மூட நம்பிக்கைகளும் இந்து மதத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டுள்ளன. எல்லா வித இந்து மதங்களும் ஒரே விதமான நடைமுறைகளைக் கொண்டவையல்ல. எனினும் ஒன்றுக்கொன்று முரணான நம்பிகைகள் கூட ஒரே மதத்தின் பேரால் நியாயப்படுத்தப்படுகின்றன. மத நம்பிக்கையையும் மூட நம்பிக்கையையும் வலியுறுத்தவும் கோயில்களதும் சடங்குகளதும் மதத்தினதும் தொன்மையை நிலை நிறுத்தவுமான பல்வேறு புனைவுகளும் தலபுராணங்களும் வரலாறு போன்ற போர்கொண்ட கட்டுக்கதைகளாக நம்மிடையே உலாவுகின்றன. இவை உருவாக்கப்பட்டுப் பரவலாவதற்கு இன்று ஊடகங்களும் துணையாக உள்ளன. அதைவிட இவ்வாறான மனமறிந்த பொய்களைக் கேள்விகளுக்குட்படுத்த இயலாத விதமாகப் பலவாறான மிரட்டல் உபாயங்களும் சூழ்ச்சிகளும் பயன்படுகின்றன.

இன்று தமிழரிடையே தன்னம்பிக்கையும் சமூக நம்பிக்கையும் நலிந்துள்ளன. இதன் விளைவாகச் சுயமுயற்சியையோ கூட்டு முயற்சியையோ விட அதிர்ஷ்டம், வழிபாட்டு வேண்டுதல்கள், நேர்த்திக்கடன், பலவகையான சோதிட முறைகள் என்பன மீதான நம்பிக்கை அதிகமாக உள்ளது. சில சமயம், விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் கூடத் தமது ஏமாற்று வேலைகட்கு உடந்தையாக இந்த விதமான மாயமந்திர வேலையில் ஈடுபடுவோர் பயன்படுத்தினாலும் மத நம்பிக்கையும் மூட நம்பிக்கைகளின் அடிப்படையிலான அம்சங்களுமே இவ்வகையான ஏமாற்று வேலைகட்கு மிகவும் உதவியாக உள்ளன.

புத்த, இந்து சமய மதத்தலைமைகள் கட்டுக்கோப்பான சமூக அமைப்புக்கலல்ல. மத பீடங்களும், சந்நிதானங்களும் இருக்கின்ற போதும் அவை பெருமளவு சுயநலமிகளின் கட்டுப்பாட்டிலுள்ளன. பல வெறும் வணிக நிறுவனங்களாகி விட்டன. இந்தச் சூழ்நிலையில் தான் தோன்றித்தனமான முறையில் தம்மை அவதாரங்களாகவும், சித்தர்களாகவும், தெய்வ அருள் பெற்றோராகவும் பிரகடனஞ் செய்துகொண்டு ஊரை ஏய்க்கின்றவர்களின் தொகையும் பெருகி வருகிறது. இவர்களிற் சிலர் தம்மை நிறுவனங்களாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்டவர்களின் பிரசார வலையமைப்புக்களும் ஊடகத் தொடர்புகளும் மக்கள் நடுவே இந்த "மகான்களின்" மேன்மைகள் பற்றிய பொய்களைப் பரப்புகின்றன.

இந்து மதம் என்ற பேரில் கடைப்பிடிக்கப்படும் சமய நடைறையிலிருந்து கழித்து விட வேண்டிய சில விடயங்கள் அடிப்படையான சீர்த்திருத்தங்களையும், மதத்தின் அடிப்படையான நம்பிக்கைகளைக் களைவதையும் வேண்டி நிற்கின்றன. இவை சாதியமைப்பும், பெண்ணடிமைக் கோட்பாடுகளும் சார்ந்தவை. தலைவிதி, மறுபிறவி போன்ற நம்பிக்கைகள், விஞ்ஞான முறையிலான ஆய்வுகட்கு உட்படுத்தப்பட வேண்டியவை. நேர்மையான சிந்தனையுடன் இவ்விடய்ங்களை ஆராய்வோமானால் இவை அடிப்படையான சமய நம்பிக்கைக்கும் சரியான நடத்தைக்கும் தேவையற்ற புனைவுகள் என விளங்கும். இவற்றுக்கும் அப்பால் மதத்தின் பேரால் நடக்கிற ஆடம்பரமான சடங்கு சம்பிரதாயங்களும் மூட நம்பிக்கைகளின் மீது கட்டியெழுப்பப்பட்ட சோதிடம், மாந்திரீகம் போன்றவை சமூகத்திற்குக் கேடானவை என்பதை நாம் உணர வேண்டும்.

இன்று நடைமுறையிலுள்ள எந்த இந்து மதமும் இன்று உள்ளவாறே சில நூற்றாண்டுகள் முன்பு கூடக் கடைப்பிடிக்கப்படவுமில்லை. நிச்சயமாக இரண்டாயிரம், நாலாயிரம் என்று வயதுக் கணக்குக் கூறப்படும் இந்து மதம் எதுவும் இன்றைய இந்து மதமுமில்லை, இன்றைய மனிதருடைய வாழ்விற்குப் பொருந்தி வரக் கூடியதுமல்ல.

நம்மைச் சமூகத்திற்குப் பயனுள்ள, சக மனிதர் மீது அக்கறையுள்ள ஏற்றத்தாழ்வு பாராட்டாத சிந்தனையை நம் ஒவ்வொருவருக்குள்ளும் உருவாக்க உதவாத எந்த மதமும் மனிதரைக் கீழ்மைப்படுத்துவதேயாகும். இந்து மதம் இந்துக்கள் எனப்படுவோரைக் கீழ்மைப்படுத்தக் கூடாது என்பது என் விருப்பம். அப்படியானால் இந்து மதத்தின் பேரால் நடைமுறையிலுள்ள சமூகக் கேடான விடயங்களை தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு இந்துவும் கைவிட வேண்டும். ஒரு சமூகமாக இந்துக்கள் எனப்படுவோர் தமது சமய நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் மனித குலத்தின் மேம்பாட்டின் நோக்கில் நேர்மையாகவும், நியாய உணர்வுடனும் மீளாய்வு செய்ய வேண்டும். பொறுப்புள்ள குடிமக்கள் என்ற வகையில் நாம் ஒவ்வொருவரும், எந்த மத நம்பிக்கையுடையோராயிருந்தாலும் மத நம்பிக்கை இல்லாதோராயிருந்தாலும் நாம் சொல்லுவன நம்பகமானவையா? என்றும் பகுத்தறிவுக்குப் பொருந்துவனவா? என்றும் கவனிப்பது நல்லது. பிறர் சொல்வது எதையும் ஏற்று அதை மீளக் கூறுவதற்கு முன் வள்ளுவர் சொன்ன,

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்னும் ஆலோசனை வழி நடப்போமாயின் நமது சமுதாயம் மேன்மையுற நாம் உதவுவோமாக.

**சி. சிவசேகரம்**

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# சமூகவியல்

சரவண மலரைச் சரணடைபவர்
சண்முக னின் அருள் திண்ணியமாய்ப் பெறுவர்
தரணி தனில்பே ராதனைப் பதியில்
அமரும் முருகா அபய வரந்தா

- ந. வீரமணி ஐயர் -

# புதைந்து கொண்டிருக்கும் எமது கலாசாரம் கட்டியெழுப்பப்படுவது எப்போது...

ஆயிரமாயிரம் ஆண்டின் முன்னே இவ் அவனியில் ஆரம்பமாகியது மனித இனம். அன்று தொட்டு இன்றுவரை அது பல்வேறு பண்புகளில் பல்கிப்பெருகி வளர்ந்துள்ளது. ஒவ்வொரு இனமும், மதமும், மொழியும், பிரதேசமும், தேசமும் தத்தனக்கேயுரிய தனித்துவமான பண்புகளையும், விழுமியங்களையும் வளர்த்துக் கொண்டுள்ளது. இந்த ஒவ்வொரு மக்கள் தொகுதியினதும் மூத்த பிரஜைகள் தமது இளைய சந்ததிக்கு கையளிக்க விரும்பும் சகல பண்புகளும் அம் மக்கள் தொகுதியின் கலாசாரம் எனப்படும். கலாசாரமானது ஒரு குறிப்பிட்ட இனத்திற்கென்று குறிக்கப்பட்ட விதிகள், கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைகள் என்பவற்றை கொண்டு காணப்படும்.

இவற்றில் தனித்துவமான தன்மை கொண்ட தமிழினத்தின் கலாசாரமானது உலக இனங்களில் உள்ள கலாசாரப் பண்பாடுகளைவிட தொன்மையானது, தனித்துவமானது. இங்கு பலவகையான பல முறையான சம்பிரதாயங்கள் காலங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களினதும் இந்துக்கள் மந்திரமுச்சரித்து, தெய்வ சாட்சியாக அக்கினி வார்த்து, மங்கள நாண் பூட்டி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்த ஆற்றும் திருமணக் கிரியையானது மணமகள் வீட்டிலேயேதான் நடைபெற வேண்டும் எனபது சாத்திரம். ஆனால் இன்று காலத்திற்கேற்ப கோலமாய் மண்டபங்களிலும், விடுதிச்சாலைகளிலும் நடைபெறும் நிலைக்கு வந்துள்ளது. நாட்டின் யுத்த நிலைமை மக்களை அவசர நிலைக்கும், அவல நிலைக்கும் தள்ள அதன்வழி கலாசாரமும் தள்ளப்படுகிறது. இந்த அவல நிலையின் உச்சமாக ஒன்றை குறிப்பிடலாம். நாடு விட்டு நாடு கடந்து ஓடும் அவசர ஓட்டத்தில் இடையில் தங்குமிடமான ஏதாவது ஒரு நாட்டில் அவசர திருமணம், குட்டை பாவாடை சட்டையுடனே தாலி கட்டிக்கொள்ளும் அவலம் யாருக்கு நிகழும். ஒப்பீட்டளவில் தமிழ் பேசும் கிறிஸ்தவ, இஸ்லாம் மதத் திருமண கலாசாரங்களில் ஏற்படும் மாற்றங்களை விட பாரிய மாற்றங்கள் இந்து திருமண வைபவங்களில் நிகழ்ந்து வருவது சுட்டிக் காட்டப்படவே வேண்டும்.

எமது கலாசாரப் புதைவானது பெற்றோரையே மறக்கடிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது எனலாம். தம்பிள்ளையை பாதுகாப்பின் நிமித்தம் கடனைப்பட்டு பெற்றோர் வெளிநாட்டிற்கு அனுப்ப, அங்கு சென்று உல்லாச வாழ்வில் அப்பெற்றோரையே பிள்ளைகள் மறந்து விடுகின்றனர். வெறும் பணம் மட்டுமே சொத்தை வளர்க்குமா? மரணச்சடங்குகள் வீடியோக்களாலும், படப்பிடிப்புகளாலும் களை கட்டுகிறது. பிற நாட்டில் உள்ளோர் பார்த்து அழுவதற்காம். இவ்வாறே ஏனைய சம்பிரதாய நிகழ்வுகளிலும்கூட வீடியோ கருவிகளும், புகைப்பட கருவிகளும் முக்கியத்துவம் வகிக்கின்றது. அவற்றுகளுக்காகவே காரியம் அவற்றிற்காகவே ஆற்றப்படுகிறது. பிற நாட்டில் உள்ளோர் பார்த்து சிரிக்கலாம்.

தமிழர் பண்பாட்டின்படி தமிழ்ப்பெண் காலை எழுந்து குளித்து மஞ்சள் பூசி, வட்டத்திலகமிட்டு, சேலைகட்டி, கூந்தலில் மலர் சூடி, மன மகிழ்வோடு தனது கடமைகளை செய்பவள் ஆவாள். ஆனாலும் நவ நாகரீகம் கூடி எமது பெண்கள் அந்நிய கலாசாரங்களுக்கு அடிமையாகி அதன் வழி ஆடை அணிந்து ஒட்டுப்பொட்டு வைத்து தமது கலாசாரத்தை

மட்டுமல்ல, குடும்ப மகத்துவத்தைக்கூட உதறித்தள்ளுகின்றனர். பாவாடை, தாவணி, சேலை போய் பஞ்சாபியும். சட்டையும், நீளக்காற்சட்டையும் அவ்விடங்களை ஆக்கிரமித்துக் கொண்டது பெரும் கலாசார மோகம் தான்.

அத்துடன், இன்று மலர் சூடிச்செல்லும் மங்கையரை காண்பது அரிது. எங்கேயாவது நிகழும் வைபவங்களில் தான். மலர் சூடிச் செல்லும் மங்கையரை காணமுடிகிறது. அது மட்டுமா இன்று வேட்டியுடன் ஆண்களை காண்பதே அரிது. ஆலயங்களில் கூட நீளக்காட்சட்டை அணிந்து, மேற்சட்டையுடன் ஆலயங்களுக்குள் பிரவேசிக்கின்றனர். இவையெல்லாம் எமது கலாசாரத்தை குழிதோன்றி புதைக்கும் நிகழ்வுகளாகும்.

கலைகளை எடுத்துக்கொண்டாலும் அவற்றுக்கு மாபெரும் கொலை நடப்பதாகவே கூறவேண்டும். வடக்கோ, கிழக்கோ எங்கெங்கு தமிழர் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் அவர்களுக்கே உரித்தான மரபுக்கலைகள் எத்தனை எத்தனையோ! நாட்டுக்கூத்துகளும், நாட்டுப்பாடல்களும், கும்மி காவடி கரகங்களும், காமன் கூத்து போன்றவையும் மக்களின் கலைச்செழுமையை வெளிக்காட்டி நின்றன. இன்று அவை பின்தள்ளப்பட்டு டிஸ்கோ, பைலா, டுவிஸ் போன்ற துள்ளிசைக்கும் ஆட்டத்திற்கும் தமிழர்கள் தம்மை பலிகொடுத்து விட்டமை புதையும் எமது கலாசாரத்திற்கு இன்னுமொரு அழுத்தமாகும்.

மத அனுட்டானங்களும், கொண்டாட்டங்களும், உடைகளும், கலைகளும் மட்டுமன்றிச் சீரழிந்து கொண்டிருப்பது எங்களுடைய பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்கள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள் இப்படி எல்லாமேதான். எமக்கேயுரிய உணவிலும் பார்க்க அந்நிய உணவு முறைகள் நாகரீகத்தின் சின்னமாகவும் அந்நிய விளையாட்டுக்கள் கவர்ச்சிமிக்கவையாகவும், அந்நிய பொழுதுபோக்குகள் முன்னேற்றத்தின் முக்கிய படியாகவும், பரிணாமம் பெற்றிருப்பது வருத்தத்தை தருகின்றது. பெரியவர்கள், சிறியவர்கள். ஆண்கள், பெண்கள். மதத்தலைவர்கள், சாதாரண பிரஜைகள் என்ற பாகுபாடு இன்றி எல்லோருமே இந்த புதைப்புப் பணிக்கு பங்களிப்பு செய்து கொண்டிருப்பதை கண்கூடாக காணலாம்.

நன்கு பேணப்பட்டு வந்த தமிழ் கலாசாரமானது இன்று மங்கி மருகிச் செல்கின்றதே ஏன்? இவ் வினாவிற்கு விடை யாது? இதற்கு விடையாக அமைவது வெளிநாட்டுக் கலாசாரங்கள் இங்கு வந்து எமது தமிழ் கலாசாரத்தோடு கலந்து மக்கள் அவற்றை பின்பற்றுகிறார்கள். அவற்றை நாம் குழிதோன்றி புதைக்க வேண்டும். நாம் தமிழ்க்கலைகளை மதித்து அன்றாடம் அவற்றை எம்மோடு இணைத்து வளர்க்க வேண்டும். இல்லையேல் நாமே எமது கலாசாரத்தை அழிக்கின்ற குற்றவாளிகளாக நிற்க நேரும் என்பது உறுதி. ஆகவே தமிழ் மாணவர்கள் நாம் தான் எமது கலாசாரத்தை மீளக்கட்டியெழுப்ப புறப்பட வேண்டும்.

**சிவரூபி பஞ்சாட்சரம்,**
மூன்றாம் வருடம்,
புவியியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# சட்டமும் சமூகமும்

சட்டம் நம் அன்றாட வாழ்வோடு ஒன்றியிருக்கின்றது. நம் ஒவ்வொருவரின் வாழ்வும் அரசால் ஓரளவு முறைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறு முறைப்படுத்துவதற்கு காரணியாக அமைவது சட்டமேயாகும்.

இன்று அனைத்து துறைகளிலும் தனது செல்வாக்கை செலுத்தும் முக்கிய விடயமாகவும், அனைவரும் அறிய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் விடயமாகவும் சட்டம் அமைந்துள்ளது. பொதுவாக சில மக்கள் சட்டம் என்றால் அது கறுப்பு உடை அணிந்து நீதிமன்றில் வழக்குரைப்பவர்களுக்கே உரியது என்ற மனப்பான்மையினைக் கொண்டுள்ளனர். இது முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டிய கருத்தாகும்.

சட்டம் என்ன எம்மை சிறுவயதில் பெரியோர்கள் பயப்படுத்தி கட்டுப்படுத்தக்கூறும் பேய்களுக்காகவா அல்லது மனித இனம் தவிர்ந்த ஏனைய படைப்புக்களுக்காக மட்டுமா ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன? இல்லையே! மாறாக மனிதர்களோடு நேரடியான தொடர்பைக் கொண்டுள்ளதோடு, அதன் மூலம் ஏனைய விடயங்களை பாதுகாக்கவும் ஒழுங்கு படுத்தவும் அமையும் விடயமாகவே உள்ளது.

இதனாலேயே சட்டம் என்பது “குறித்த சமூகம் ஒன்று இணங்கி ஒழுகுவதற்கு தேர்ந்தெடுத்துக்கொண்ட நடத்தைக் கோவை” எனக் கூறப்படுகின்றது.

இத்தகைய சட்டம் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர். அவ்வகையில் சில கருத்துக்களை நோக்குவோம்.

பொதுமக்களாலும், நீதிமன்றங்களாலும் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தும் அடிப்படைகளின் தொகுதி என பௌண்ட் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

மக்களுக்காக அவர்களது வாழ்க்கை முறையில் பொதுக்கோட்பாடுகளை உள்ளடக்கிய அவர்களைக் கீழ்ப்படிய நிர்ப்பந்திப்பதுமான இறைமையாளனின் கட்டளை என ஜோன் எரிக்ஸ்சன் கூறுகின்றார்.

இவ்வாறு கூறப்படுகின்ற சட்டம் சமூகத்திற்கு யாது புரிகின்றது. அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை? என்பவற்றை ஆராயும் போது இதன் முக்கியத்துவத்தினை நாம் உணரலாம்.

- சட்டம் தனிமனித உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாக்கின்றது.
- சமூகத்தில் குற்றங்களைக் கட்டுப்படுத்துகின்றது. மீறி குற்றம் புரிபவர்களைத் தண்டிக்கின்றது. இதன் மூலம் ஏனைய குற்றம் புரிய உள்ளவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுப்பதன் மூலம் சமூகத்தைப் பாதுகாக்க முனைகின்றது.

- ஆட்சியாளர்களின் எதேச்சதிகார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதோடு சட்ட ஆட்சியின் மூலம் சட்ட ஆதிபத்தியத்தின் மூலம் நல்லாட்சியை ஏற்படுத்த முனைகின்றது.
- சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை சமூகத்திற்கு வழங்குகின்றது.
- சமூகத்தினரிடையே அன்றாடம் ஏற்படும் குடியியல் விடயங்களை ஆளுவதன் மூலம் பல்வேறுபட்ட பிணக்குகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மற்றும் விடயங்களுக்கும் தீர்வு காண முற்படுகின்றது.
- சமூகத்தை ஆளும் விதிகளை வழங்குகின்றது. சிக்கல்கள் நிறைந்த சமூக அமைப்பில் சமத்துவத்தினையும், பொது அமைதியினையும், பாதுகாப்பினையும் வழங்குகின்றது.

இத்தகைய பணிகளை ஆற்றுகின்ற சட்டத்திற்கு மக்கள் அடிபணிவினை வழங்குவதற்கு பல காரணங்கள் அடிப்படையாக உள்ளன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

- மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்களின்பிரதிநிதிகளே சட்டவாக்க சபையில் இருந்து சட்டமாக்குவதனால் அதற்கு கிடைக்கும் விசேட தன்மை.
- சட்டத்திற்கு கீழ்ப்படியாவிட்டால் தண்டனைகிடைக்கும் என்பதனால்.
- சட்டம் சிறந்ததும், தனித்துவமானதுமான ஒரு நன்மையான இலக்கிற்கு இட்டுச் சென்று சமூக பாதுகாப்பினை வழங்குவதனால் (சட்டத்தின் சிறந்த தன்மை)
- பழக்க தோஷம் காரணமாக (சட்டம் பற்றிய அறிவில்லாதபோதும் சமூகத்தின் தொடர்ச்சியான நடைமுறையில் இணைவதன் ஊடாக)

இவ்வாறான பல்வேறு பணிகளை ஆற்றுகின்ற எம்மை ஒழுங்கு படுத்துகின்ற சட்டம் பற்றி நாம் அறிய வேண்டியது அவசியமல்லவா! இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் நாம் அறிந்து கொள்வது எளிதன்று. அது அவசியமும் இல்லை. ஆனால் சட்டத்தின் அடிப்படைக்கருத்துக்கள் பற்றிய ஞானம் நம் பொது அறிவிற்கு இன்றியமையாதது. அவ்வாறு அறியும் போதுதான் நாம் எமது உரிமைகள் எவை கடமைகள் எவை என புரிந்து கொள்வோம். மட்டுமன்றி அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலே சட்டமானது தனது முழுமையான செயற்பாட்டினையும் சமூகத்திலே கொண்டுள்ளதா என்பதை ஒரு விமர்சன ரீதியாக நோக்க வேண்டியுள்ளது. அவ்வாறு நோக்கும் போது மக்களிடையே காணப்படும் சட்டம் பற்றிய போதிய அறிவின்மை, வறுமைநிலை, பட்டினி, பஞ்சம், அரசியல் தலையீடு, மூலவளப்பற்றாக்குறை, அமுல்படுத்துவதற்கான போதியதொழில்நுட்ப வசதியின்மை, சிறந்த முறையாக பயிற்றப்பட்ட ஆளணிப்பற்றாக்குறை என்பன சட்டத்தின் செயற்படுதன்மையினை கேள்விக்குட்படுத்தும் விடயங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

எனினும் இவ்வாறான நிலையில் இருந்து எமது நாடு விடுபட வேண்டும். இந்நிலைப்பாட்டினை அடைந்து கொள்வதற்காக மக்கள் மத்தியில் சட்டம் பற்றிய அறிவினை ஊட்ட வேண்டும். அதற்காக பின்வரும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம்.

- சட்ட அறிவுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் இதற்காக சமுதாயம் சார் சட்டக்கருத்தரங்குகளை பொதுமக்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.
- சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இலகுவான வழிமுறைகளை ஏற்படுத்தல்
- இடைநிலை மற்றும் உயர்நிலை மாணவர்களுக்கு சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பாடங்களை பாடபரப்புக்களாக கொண்டு வருதல்.

இன்று இலங்கையில் பல்வேறுபட்ட நிறுவனங்கள் சட்ட விழிப்புணர்ச்சி செயற்றிட்டங்களை மேற்கொள்வதோடு சட்ட உதவித்திட்டங்களையும் வழங்கி வருகின்றது. அவ்வகையில் பின்வரும் அமைப்புகளை நாம் சிறப்பாக அடையாளம் காணலாம்.

- சட்ட உதவி ஆணைக்குழு
- நீதி அமைச்சின் கீழ் இயங்கும் சமுதாய சட்ட உதவி சேவைத்திட்டம்
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கீழ் இயங்கும் சட்ட உதவிகள் மன்றம், மனித உரிமைகள் நிலையம் என்பன

மேற்கூறிய அமைப்புக்களில் சில மனித உரிமைகள் மீறப்படும் போது அல்லது மீறப்பட உள்ள போது மக்களுக்கு உதவுவதோடு அவை தொடர்பான வழக்குகளுக்கு சட்டத்தரணிகளை வழங்கியும் உதவி புரிகின்றது. (உதாரணமாக சட்டத்தரணிகள் சங்கத்தின் கீழ் இயங்கும் மனித உரிமைகள் நிலையம்) மேலும் பல அமைப்புகள் செலவு செய்து சட்ட நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு இலவசமாக அல்லது சாதாரண கட்டணத்தில் சட்ட சேவையை வழங்குகின்றன. இவ்வாறான அமைப்புகள் பற்றியும், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தொகுத்து நோக்கும்போது சட்டமும் சமூகமும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய இடைத்தொடர்பினைக் கொண்டுள்ளதனால் சட்டம் ஒரு சமூகவிடயமே என்பது புலனாகின்றது. இதனால் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் சட்டம் பற்றிய விழிப்புணர்வில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டியதும், அதன் அடிப்படையில் தமது உரிமைகள், கடமைகள் என்பவற்றை அனுபவிக்கவும் பாதுகாக்கவும் வேண்டும் என்பதும் வெளிப்படையாகின்றது.

**நவரத்தினம் சிவகுமார்,**
மூன்றாம் வருடம்,
அரசறிவியல் விஷேட துறை,
கலைப்பீடம்.

# நமது சமய கலாசார அம்சங்கள் எங்கே போகின்றன?

***குறிப்பு:***

இந்தியர்களுக்கும், பாக்கிஸ்தானியர்களுக்கும் எல்லை பிரச்சினை காரணமாக முரண்பாடு, அமெரிக்காவும், சில நாடுகளுக்கும் உலக பிரச்சினைகளை கையாளும் விதம் சம்பந்தமாக முரண்பாடு ஏன் எமது நாட்டினிலே தமிழ் தேசியத்துக்கும் சிங்கள் தேசியத்திற்கும் முரண்பாடு, மரபு வழி இலக்கியகாரருக்கும், சமூக புது சிந்தனை இலக்கியகாரருக்கும் முரண்பாடு, எனது இக்கருத்துக்கும், உங்கள் கருத்துக்கும் முரண்பாடு காணப்படலாம்.

சமயம் என்பது நமது ஆளுமைகளை, மெய்ஞானத்தை விருத்தி செய்கின்ற ஒரு வழி. இது நமக்கு நன்மை பயப்பது. ஆனால் இன்று நமது ஆளுமைகளை பிரித்து நம்மை வேறுபடுத்தவே பயன்படுத்துகின்றோம். இவ்வாறு தொடரின், இடமளிப்பின் ஆற்றலற்றுவிடும். இது மனிதனை கட்டுப்படுத்துகின்ற சக்தியாக இருக்கக்கூடாது. அதன்பால் மற்றவர்களை ஈர்க்கும் தன்மை கொண்டிருக்கவேண்டும்.

எமது சமயத்திலே பல நல்ல விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றை விடுத்து நாமோ நம்மை மேம்படுத்த வேண்டிய விடயங்களை நாம் இருக்கின்ற இடத்துக்கு தாழ்த்தி கொண்டுள்ளோம். புத்தர், இயேசு போன்றோர் தோன்றி மனித இனத்தை நல்வழிப்படுத்தினார்கள். ஆனால் நாம் சாரத்தை விடுத்து வடிவத்தை மட்டும் பற்றிக்கொண்டு பகைமை, வன்முறை வளர்க்கிறோம். நமக்கிடையே கொள்கை வேறுபாடுகள். தனிநபர் செல்வாக்குகள். போட்டி மனப்பான்மை போன்றவற்றால் நம்மை நாமே கூறுபோடுகின்றோம். இப்போட்டிகளால் ஆலயங்கள் தம்மை பெரிப்பிப்பதிலும், தம்மை அலங்கரிப்பதிலும் புதிய ஆலயங்களை அமைப்பதிலும் வீண் காலம் செலவிடப்படுகிறது. அந்தந்த ஆலயங்கள் நமது கிராம மக்களின் ஆன்மீக பொருளாதார மேம்பாட்டுக்கு எதையும் செய்ய முனைவதில்லை.

வசதிபடைத்தவர்கள் ஆலயத்திற்கு பணத்தை வாரி இறைத்து திருவிழாக்கள் செய்வதையே பெரும் தானதர்ம செயலாக கருதுகிறார்கள். அதனுடன் விட்டு விடுகின்றார்கள். ஏழைகளுக்கு உதவி செய்தல், கல்வி அற்றவர்களுக்கு கல்விகற்பித்தல், முதியவர்கள், இயலாதவர்களுக்கு உதவி செய்தல் போன்வற்றுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை. ஒரு சில ஆலய நிர்வாக சபைகளை தவிர பெரும்பாலானவை அந்த மக்களின் வாழ்க்கையை முன்னேற்றி சமய தத்துவங்களை போதிக்க முனைவதில்லை. இதனால் இவை மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிணைவதில் இருந்து விடுபடுகிறது. இதனாலேயே சமய தத்துவங்கள், வாழ்க்கை தத்துவங்கள் இரண்டிற்கும் நீண்ட இடைவெளி என்ற நிலை ஏற்படுகிறது. இதனால் பாமர மக்களுக்கு இடையே மத நம்பிக்கையீனமும், ஆண்டவன் மீது நம்பிக்கை அற்ற தன்மையும் தோன்றுகிறது. இந்நிலை மாற்றி அமைக்கப்பட்டு அனைத்து உயிர்களும் சந்தோஷமாக, சமாதானமாக வாழ வழிகாட்டப்பட வேண்டும்.

நாங்கள் எப்போதும் அபிலாஷைகளை நிறைவேற்றி வெற்றி பெற பிழையான வழிமுறைகளை பின்பற்றுகிறோம். இதனால் போலி வாழ்வு முன்னெடுக்கப்படுகிறது. சொந்த தேவைகள், சுயவிருப்புகள் நிறைவேற்றினால் போதும் என்ற மனக்கோட்பாடு, இதை நிறைவேற்ற

நாய் போல் அலைகின்றோம். நாம் நமது சமய உண்மைகளையும், கடமைகளையும் சிறந்த இலட்சியங்களையும் விட்டுவிட்டு குறுக்கு வழிகளை பின்பற்றுகின்றோம். ஆனால் பாரம்பரிய ஒழுங்கு முறைகளே நிலைத்து நின்று உயிர் காக்கும்.

இடம் பெயர்வு காரணமாகவும், தொழில் நிமிர்த்தமும் எமது மக்கள் உலகம் பூராகவும் பரந்து வாழ்கின்றார்கள். இவர்களில் இளம் தலைமுறையினருக்கு குறிப்பாக நமது உறவினர்களை தெரியாத நிலையிலே வாழ்கின்றார்கள். இவர்களுக்கு தாய் நாட்டுடன் பெரும் பாலும் காணப்படும் உறவு, தாய் சேய் உறவு மாத்திரமே இவையும் தாய் தந்தையர் உள்ளவரை மட்டும் நீடிக்கும். எண்பதுகளின் முற்பகுதியை நோக்கினால் கிராமங்கள் தோறும் ஒற்றுமை நிறைந்து காணப்பட்டது. ஒருவருடைய குடும்ப நிகழ்வை கிராமத்து மக்களே முன்னின்று நடத்தினார்கள். புலம்பெயர்ந்து வாழ்பவர்களின் பிள்ளைகள் பலர் தமிழ் மொழியை பேச கூட திறமை அற்று உள்ளார்கள். அவர்களின் கலாசாரங்கள் கூட முற்றாக மாற்றம் அடைந்து வருகிறது.

எமது சமூக மக்களுக்கு இடையே காணப்படும் மற்றைய பிரச்சினை சாதிப்பிரச்சினை. இது எமது மக்களுக்கு இடையே தொடர்புகளை மட்டுப்படுத்துகிறது. மேலும் பல்வேறு பிரச்சினைகளை தூண்டுகிறது. இது ஒரு தொழில்சார் மக்களை இன்னோர் தொழில்சார் மக்கள் மட்டுப்படுத்த முனைகிறது. இது நீண்ட கால போரினால் ஓரளவு மாற்றம் கண்டுள்ளது.

எமது சமூகம் நீண்ட கலாசார பின்னணியை கொண்டது. ஆனால் இன்றோ அவை அனைத்தும் இளைய தலையினரால் நவநாகரீகம் என்ற போர்வையில் முற்றாக சிதைக்கப்படுகிறது. காலத்துக்கு ஏற்ற மாற்றங்கள் தேவை. எமது கலாசாரங்கள் தொடருகின்ற போர் சூழலும், மேலைத்தேய செல்வாக்கும் வெகுவாக மாற்றி அமைக்கின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை கொண்டது எமது கலாசாரம். விருந்தோம்பல், வயோதிபர்களை பேணல், பெரியவர் சொல்கேட்டு நடத்தல் போன்ற பண்புகளை கொண்ட அமைதியான வாழ்க்கை முறையை கொண்டது. இன்று மது அருந்துதல், சிகரட் பழக்கம் மற்றும் சீதன கொடுமை போன்றவற்றால் குடும்ப அமைதி குலைகிறது.

இளைஞர்கள், யுவதிகள் சமய கலாசார சமூக விழுமியங்களை பேண முன்வர வேண்டும். மேலைத்தேய பண்பாடுகள் மொழிகள் இதனுடன் கலத்தலை தடுக்க வேண்டும். காலத்திற்கு ஏற்ற மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். தேவையான நல்ல விடயங்கள் பொருத்தமான முறையில் உள்வாங்கப்பட வேண்டும். இதன் மூலம் எமது தனித்துவத்தை பேணவேண்டும். எமது சமூக, சமய கலாசார விழுமியங்களை பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நகர்த்த வேண்டும்.

நாம் எமது தாய் மெலிந்து, முதிர்ந்து, அழகு குறைந்து விட்டாள் என்பதற்காக இன்னொருவரை தாயாக ஏற்றுக்கொள்ள முடியுமா? அந்த தாய்க்கு ஈடாக வேறு ஏதும் பொருந்துமா? அதேபோல் தான் நாம் பிறந்த சமூகத்தை, தாய்மொழியை நமது சமயத்தை போற்றி காக்க வேண்டும்.

"வாழ்க சைவநெறி வளர்க தமிழ்மொழி"

**ந. சங்கர்**
மூன்றாம் வருடம்,
பொறியியற் பீடம்.

# இந்து மதம் கூறும் அரசியல் சிந்தனைகள்

மதத்திற்கும், அரசியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவது வெளிப்படை. எண்ணக்கரு அடிப்படையிலும் செயற்பாட்டு அடிப்படையிலும் அரசியற்கல்வியும், செயற்பாடும் மதத்தால் பாதிக்கப்பட்டும் மாற்றம் பெற்றும் வந்திருக்கின்றது. பல்வேறு அரசியல் சிந்தனைகள் மத சிந்தனைகளில் இருந்து தோற்றம் பெற்றிருக்கின்றன. சில அரசியல் சிந்தனைகளின் மையம் மத சிந்தனைகளிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன. பல்வேறு காலத்து அரசியற் செயற்பாடுகளையும், சிந்தனைகளையும் மதம் பாதித்திருக்கின்றது. இன்றும் கூட சில நாடுகளில் அரசியற் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் வழிநடத்தும் கருவிகளாக மதம் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பின்னணியில் இந்து மதம் அரசியற் கல்விக்கு எத்தகைய பங்களிப்பைச் செய்திருக்கின்றது என்பதை மதிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## அரசியற் சிந்தனைகளின் வகைப்பாடுகள்

அரசியற் சிந்தனைகளை பிரதானமாக இரண்டு வகையாகப் பிரித்து நோக்கலாம். அவையாவன மேற்கத்தய அரசியல் சிந்தனைகள், கீழைத்தேச அரசியல் சிந்தனைகள் என்பனவாகும். கீழைத்தேச அரசியல் சிந்தனைகளை புராதன இந்திய அரசியல் சிந்தனைகள் எனவும் அழைப்பர். இவ் இருவகையான அரசியல் சிந்தனைகளையும் ஒப்பிட்டு நோக்கினால் மேற்கத்தய அரசியல் சிந்தனையானது உலகலாவிய ரீதியில் அரசியல் அறிஞர்களால் ஏற்கப்பட்டு பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் பலம் மிக்கதாகவும் இருப்பதைக் காணலாம். ஆனால் கீழைத்தேச அரசியற் சிந்தனைகள் அவ்வாறு உலகளாவிய ரீதியில் அரசியல் அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்படலாம். குறிப்பாக மேற்கத்தய அரசியற் சிந்தனைகள் அக்காலத்தில் காணப்பட்ட அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தோன்றியவையாகும். ஆனால் கீழைத்தேச அரசியற் சிந்தனைகள் நேரடியாக அரசியற் சிந்தனைகளாகவன்றி சமய சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் நூல்களிலேயே இடம் பெறுவதைக் காணலாம். இது கீழைத்தேச அரசியற் சிந்தனைகள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்ற பிரதானமான பலவீனமாகும். அத்தோடு கீழைத்தேச அரசியற் சிந்தனைகளின் வரலாறு தொடர்பாகவும் உறுதியான உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் மேற்கத்தய அரசியற் சிந்தனைகளின் வரலாறு அரசியல் அறிஞர்களால் உறுதிப்படுத்தப்பட்டு ஏற்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் ஓரளவுக்காவது கீழைத்தேச அரசியற் சிந்தனைகள் மேற்கத்தய அரசியற் சிந்தனையுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு இட்டுச் சென்றிருக்கின்ற பெருமை இந்து மதத்தைச் சாரும். கௌடில்யரால் முன் வைக்கப்பட்ட அர்த்த சாஸ்திரம் அரசியல் நோக்கத்திற்காக எழுதப்பட்ட நூலாக இருப்பதன் காரணமாகவும், வரலாற்று ஆதாரங்களைக் கொண்டிருப்பதன் காரணமாகவும், மேற்கத்தய அரசியல் சிந்தனைகளை பிரதிபலிப்பதாகவும் இருப்பதால் மேற்கத்தய அரசியற் சிந்ததனையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது கீழைத்தேச அரசியற் சிந்தனையை மேற்கத்தய அரசியற் சிந்தனையோடு ஒன்றாக வைத்து நோக்கும் அளவுக்கு இந்து மதம் மேற்கொண்ட மிகப் பிரதானமான பங்களிப்பாகும்.

## கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்

கௌடில்யர் கி. மு. 4 ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரது இயற்கைப் பெயர் விஷ்ணு குப்தர். இவரை சாணக்கியர் என்றும் அழைப்பர்.சந்திரகுப்த மௌரியனின் அரசியல் ஆலோசகராக இருந்தவர். இவரது நூல்களில் சிறந்தது அர்த்த சாஸ்திரமாகும். கௌடில்யர் வாழ்ந்த கி.மு. 4 ம் நூற்றாண்டு கால இந்திய சூழ்நிலையை நோக்கின் அரசமைப்பு முறை முடியரசாக இருந்தது. பல்வேறு முடியரசுகள் காணப்பட்டன. ஆனால் இம் முடியரசுகளுக்கிடையே ஒற்றுமை காணப்பட்டிருக்கவில்லை. இதனால் முரண்பாடும், உள்நாட்டு யுத்தமும், அமைதியின்மையையும் இப்பிராந்தியத்தின் இயல்பாக இருந்தது. இந்நிலையில் மகா அலெக்ஷாண்டர் கி.மு. 327 ல் சிந்துவெளியை நோக்கி படையெடுத்தார். ஒற்றுமையின்மையையும், யுத்த நிலையையும் இயல்பாகக் கொண்டிருந்த இச்சிந்து வெளி நாகரீகப் பிராந்தியத்திற்கு வெளிப்பிராந்தியம் ஒன்றில் இருந்து தோன்றும் எதிர்ப்பை சாமாளிக்க வேண்டியிருந்தது. அலெக்ஷாண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஒன்றுபட்ட இந்திய சாம்ராஜ்யத்தை நிறுவவேண்டிய தேவை இப்பிராந்தியத்துக்கு ஏற்பட்டது. இப்பெரிய பணிக்கு சந்திரகுப்த மௌரியனுக்கு துணை நின்றவரே கௌடில்யர்.இதற்காக அவர் எழுதிய நூலே அர்த்த சாஸ்திரம். இந்நிலை மட்டுமல்லாமல் இக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் இரு வேறுபட்ட தத்துவ நிலைகள் காணப்பட்டன. பௌத்ததத்துவ நிலையும், பகுத்தறிவுத் தத்துவ நிலையும் இப்பிராந்தியத்தில் ஆக்கிரமித்தன. பௌத்த தத்துவப் பிரச்சாரம் 'வாழ்வாமாயம், மண்ணாவது திண்ணம்" என்று இவ்வுலகில் இருந்து விடுபடும் வழியை மக்களுக்கு போதித்தது. இவ்வுலக யதார்த்த நிலை இப்பௌத்த தத்துவப் பிரச்சாரத்தில் மறைந்து போனது. அதேசமயம் பகுத்தறிவுத் தத்துவ நிலையானது இதற்கு எதிர் மாறாக 'உலகம் உண்மை' எனப் போதிக்கலாயிற்று. இதுவும் உலகை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டி உலக யதார்த்தத்தை மறைத்தது. ஆனால் இவ்விரு தத்துவ நிலைகளும் உண்மையான சூழ்நிலைக்கு பொருத்தமாகக் காணப்படவில்லை. அலெக்ஷாண்டரின் படையெடுப்பை முறியடிக்க இத்தத்துவ நிலைகள் பயனுடையவையாக இருக்கவில்லை. இதனால் புதிய தத்துவ நிலையை ஏற்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தை எழுதினார்.

அர்த்த சாஸ்திரம் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்திருக்கின்றது. அதிகாரம், அத்தியாயம், பிரகரணம் என இது பிரிக்கப்பட்டிருக்கின்றது. 15 அதிகாரங்களையும், 150 அத்தியாயங்களையும், 180 பிரகரணங்களையும் கொண்டு மொத்தம் 6000 சுலோகங்களைள் அர்த்த சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. அர்த்த சாஸ்திரம் என்பதன் பொருளை கொடுமுடி இராஜகோபாலன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "மனிதர்கள் நிறைந்த பூமியைப் பற்றியதும்,
> இராஜ்ஜியங்களை சம்பாதித்து அவற்றைக் காப்பது
> பற்றியதுமான விஞ்ஞானமே அர்த்த சாஸ்திரம்" என்கிறார்.

அர்த்த சாஸ்திரம் சமய நூலாக இருந்தபோதும் சமயத்தை விட்டு விலகி அரசியல் பிரச்சினைகளுக்கு பதில் சொல்வதை நோக்காகக் கொண்டிருக்கின்றது. முற்கால அரசியல் சிந்தனையாளர்கள் ஆட்சியமைப்பை பற்றிப் பேசும் போது இவர் ஆட்சியை எப்படிக்

கைப்பற்றலாம், கைப்பற்றிய ஆட்சியை எப்படி பராமரிக்கலாம், அதை எப்படிப் பலப்படுத்தலாம் என்பதைப் பற்றிப் பேசுகின்றார். சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தல், பராமரித்தல், பலப்படுத்தல் என்பவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தி பலப்படுத்துவதற்கு பக்தி, மூடநம்பிகை, அறம், இன்பம், வீடு என்பன தடையானவை என்று கூறி அவற்றை நிராகரிக்கின்றார். பொருளை மட்டுமே ஏற்கின்றார். பொருள் மட்டுமே சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்த உதவும் என்கிறார். சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தும் போது நீதி, அறநெறி, ஒழுக்கம் போன்ற வழிமுறைகளைக் கையாளுவதால் எவ்வித பயனுமில்லை என்று கூறி அதிகாரபலம், அதிகார செல்வாக்கு போன்ற வழிமுறைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனக் கூறி அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும் என்கிறார்.சாம்ராஜ்ஜியத்தை தோற்றுவிக்கின்ற வழிமுறைகளைத் தெளிவுபடுத்துகின்றார். முதலில் எதிரிக்கு வெறுப்பூட்டி, சண்டைக்கிழுத்து எதிரியின் உபாயங்களை உபயோகித்து ஒற்றரை அனுப்பி தகவல் சேகரித்து, கோட்டையை முற்றுகையிடுவதன் மூலம் எதிரியின் நடவடிக்கைகளை முடக்கி கோட்டையைத் தாக்கி சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்த வேண்டும் எனகின்றார். சாம்ராஜ்ஜியத்தை கைப்பற்றினால் மட்டும் போதாது, அதைப் பராமரிக்கவும் வேண்டும். அப்போதுதான் நீண்ட காலத்திற்கு உறுதியான ஆட்சியை நடாத்த முடியும் எனக் குறிப்பிட்டு கைப்பற்றிய இராஜ்ஜியத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைத் தெளிவுபடுத்துகின்றார். கைப்பற்றிய இராஜ்ஜியத்தில் ஆட்சி நடாத்துபவர்கள் தம்மை நற்பண்புடையவர்களாக காட்டிக்கொள்ள வேண்டும், கல்விமான்களுக்கு பட்டம் வழங்குதல் வேண்டும், மதத்திற்கு மதிப்பு கொடுத்தல் வேண்டும், நோயாளர்களைப் பராமரித்தல் வேண்டும் போன்ற வழிமுறைகளினூடாக இராஜ்ஜியத்தை பராமரிக்க வேண்டும் என்கின்றார். ஆயினும் பயம். பேராசை, வெறுப்பு, பொறாமை என்பன இராஜ்ஜியத்தில் இருக்கக்கூடாதவை என்கின்றார். இவை இருந்தால் இராஜ்ஜியத்தை பாதுகாக்க முடியாது எனக் குறிப்பிடுகின்றார்.

## அர்த்த சாஸ்திரம் கூறும் அரசியல் சிந்தனைகள்

கௌடில்யர் குறிப்பிடும் அரசியல் சிந்தனைகளை நோக்கும்போது அரசின் தோற்றம், அரசின் இயல்பு, அரசின் அதிகாரம் அரசுக்கும் - மக்களுக்கும் இடையிலான தொடர்பு, ஆட்சிமுறை, உள்நாட்டு நிர்வாகம், சாவதேச உறவுகள், அரசுக்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பு போன்ற பல்வேறு விதமான சிந்தனைகளைக் குறிப்பிட்டிருக்கின்றார். அரசின் தோற்றம் பற்றி விளக்க முற்படும்போது மனிதனின் இயற்கை நிலை பற்றிக் குறிப்பிடுகின்றார். இது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்ற இயற்கை நிலையை ஒத்ததாக இருக்கின்றது. மனிதர்கள் சுயநலம் மிக்கவர்கள். இதனால் ஒருவருக்கொருவர் போட்டியும், பொறாமையும் கொண்டு செயற்படுகின்றவர்களாக இருக்கின்றார்கள் எனக் குறிப்பிடுகின்றார். அத்துடன் மனிதனின் இயற்கை நிலையில் ‘மீன்விதி செயற்படுகின்றது எனவும் குறிப்பிடுகின்றார். ‘பலவான் பலவீனனை விழுங்குவான்’ என்பதை மீன்விதி தெளிவுபடுத்துகின்றது. இத்தகய இயற்கை நிலையில் மக்கள் தம்மைப் பாதுகாக்க தெய்வத்திடம் முறையிட்டார்கள் என்கிறார். இது தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை ஒத்ததாக இருக்கின்றது. மக்கள் தெய்வத்திடம் முறையிட்டதன் பயனாக தெய்வம் உலகைப் பாதுகாக்க ஒருவரை அனுப்பியது. இவரே ஆட்சியாளர் என்கிறார். இவ்வாறே அரசு தோற்றம் பெறுகின்றது எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் இவ் ஆட்சியாளர் பயிற்றுவிக்கப்பட வேண்டியவர் எனக் குறிப்பிடுகின்றார். குறிப்பாக குழந்தைப் பருவத்தில் இருந்து 10 வயது வரைக்கும் விஞ்ஞானம், பொருளாதார அறிவு, அரசியல் அறிவு என்பன புகட்டப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஆட்சியாளன் பயிற்றுவிக்கப்பட்டவனாக மட்டும்

இருந்தால் போதாது. அவன் அதிகாரமிக்கவனாகவும் இருக்க வேண்டும் என்கிறார். ஆட்சியாளனுக்கு அதிகாரத்தை வழங்கும் கருவியாக தண்டனைச் சட்டங்களை கௌடியர் குறிப்பிடுகின்றார். ஆட்சியாளர் பின்வரும் தண்டனைச் சட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தியே தண்டனை வழங்க வேண்டும். அவையாவன, அரச சட்டங்கள், மரபுகள், பிரயோகச் சட்டங்கள், தர்ம சாஸ்திரங்கள் என்பனவாகும். அரச சட்டங்கள் என்பது அரசனின் கட்டளைகளைக் குறிக்கும். மரபுகள் என்பது நீதியின் ஒரு பகுதியைக் குறிக்கும். பிரயோகச் சட்டங்கள் என்பது பரம்பரையாக வரும் கட்டுப்பாடுகளைக் கருதும். தர்மசாஸ்திரம் என்பது உலகப் பொதுவான தர்மத்தைக் குறிக்கும். இந்நான்கு தண்டனைச் சட்டங்களுக்கிடையிலும் மோதல் ஏற்பட்டால் அரச சட்டத்தை ஏற்க வேண்டும் என கௌடில்யர் குறிப்பிடுகின்றார். இங்கு அரசனின் இறைமையையும், அரசின் இறைமையையும் தெளிவுபடுத்துகின்றார். அத்தோடு அரசு எப்படி உருவாகின்றது என்பதையும் விளக்குகின்றார்.

சிறந்த இராஜ்ஜியம் ஒன்றுக்கு எவ்வகையான பண்புகள் இருக்க வேண்டும் என குறிப்பிடுவதன் ஊடாக அரசின் இயல்பை கௌடில்யர் தெளிவுபடுத்துகின்றார். குறிப்பாக தலைநகரங்கள் காணப்படவேண்டும், உற்பத்திப் பொருட்களைப் பெருக்க வேண்டும், எதிரிகளை எதிர்கொள்ளும் வல்லமை இருக்க வேண்டும், பலமுள்ளதாக இருக்க வேண்டும். தேர்ச்சி பெற்ற இராணுவம் இருக்க வேண்டும் என ஓர் அரசு எவ்வகையான இயல்புள்ளதாக இருக்க வேண்டும் என தெளிவுபடுத்துகின்றார்.

ஒரு நாட்டில் அரச அதிகாரம் பேணப்பட வேண்டும் எனவும் அரச அதிகாரத்தைப் பேணுகின்ற அம்சங்கள் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். மன்னன், அமைச்சர்கள், பிரதேசம், கோட்டை, பொக்கிஷம், இராணுவம், நேச நாடுகள், என்பன ஒரு நாட்டின் அரச அதிகாரத்தைப் பேணுகின்ற மூலங்கள் என தெளிவுபடுத்தி ஒரு நாடு இவற்றைப் பேண வேண்டும் என்கிறார். அத்துடன் ஒரு நாடு அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை சிறப்பாக பேண வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். மக்களின் உரிமைகளைச் சிறப்பாக பேணும் போதே மக்களுடனான உறவைச் சிறப்பாக பேண முடியும் என்கிறார். ஆயினும் ஆட்சியாளருக்கு வழங்கும் பயிற்சிதான் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் ஒரு வழி என்கிறார். ஆயினும் ஆட்சியாளருக்கு எதிராக பிரஜைகள் செயற்படலாமா, இல்லையா என்பது பற்றி எதுவித குறிப்பும் கௌடில்யரின் நூலில் இடம் பெறவில்லை. அத்துடன் ஆட்சி முறை பற்றிய கருத்துக்களையும் கௌடில்யர் தெளிவுபடுத்துகின்றார். குடியாட்சி, முடியாட்சி போன்ற ஆட்சி முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள போதும் முடியாட்சியே சிறந்தது என்பது இவர் கருத்து. முடியாட்சி பரம்பரையாக வர வேண்டும் என இவர் குறிப்பிடுகின்றார். அதனோடு இணைந்த வகையில் உள்நாட்டு நிர்வாகம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மத்திய பிரிவுகள், உள்நாட்டுப் பிரிவுகள் வெளிநாட்டுப் பிரிவுகள் எனப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் உப பிரிவுகளை ஏற்படுத்தி உள்நாட்டு நிர்வாகம் செயற்படுத்தப்பட வேண்டும் என இவர் குறிப்பிடுகின்றார்.

சர்வதேச உறவுகள் தொடர்பான கொள்கையை இவர் விளக்கியுள்ளார். வெளிநாட்டுக் கொள்ளையானது மீன்விதியான அடிப்படையிலேயே செயற்படுகின்றது என்பது இவரது கருத்து. பலமான நாடுகள் பலவீனமான நாடுகளை 'ஆக்கிரமிக்கும்' என்கிறார். உள்நாட்டு வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைப் பாதுகாக்க உதவுவதே வெளிநாட்டுக் கொள்கை என்பது இவரது கருத்து. கௌடில்யர் வெளிநாட்டு உறவுக் கொள்கையை 6 விதமாகப் பிரிக்கிறார். இவ் ஆறு வித கொள்கைகளிலும் தீவிர கவனம் செலுத்தாத எந்த தேசமும் தன்னைப்

பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பது இவர் கருத்து. *அவையாவன:*

| | | |
|---|---|---|
| (01) | ஸந்தி: | சமாதானக் கொள்கைக்கான பரஸ்பர உதவி ஒப்பந்தம் |
| (02) | விக்கிரக: | எதிரி நாடுகள் தமக்கிடையே ஏற்படுத்துகின்ற உறவை அழித்து யுத்தக் கொள்ளையை ஏற்படுத்தவது. |
| (03) | ஆஸன: | தேசப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி நின்று நடுநிலைக கொள்கையைக் கடைப்பிடிப்பது. |
| (04) | யான: | பலவீனமான அண்டை நாட்டின் மீது போர் தொடுத்து போர் புரிதல் கொள்கையைக் கடைப்பிடிப்பது. |
| (05) | சமாஸ்ரய: | தன்னுடன், சேரும் எல்லா நாடுகளையும் சேர்த்து கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்தல் |
| (06) | துவைதீபாவம்: | ஒழுங்கற்ற நாட்டை விடுத்து ஒழுங்குள்ள நாட்டுடன் சேர்ந்து நிற்றல். |

## கௌடில்யரின் சிந்தனைகளில் காணப்படும் சாதக பாதகங்கள்

கௌடில்யருடைய சிந்தனையின் பெருமை பற்றி பல்வேறு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தண்டி, காமந்தகன் போன்ற அறிஞர்கள் இவர் தம் கல்விப் பரப்பையும் அரசியல் அறிவையும் நூலின் பெருமையையும் போற்றியிருக்கின்றார்கள். அரச தந்திரம் வல்லோரை 'சாணக்கியர்' என்று கூறும் வழக்கு இன்றும் இருந்து வருவது இவரது பெருமைக்கு எடுத்துக்காட்டாகவிருக்கின்றது. வெளிநாட்டுத் தூதுவர்கள் தங்குவதற்காக புதுடில்லியில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு 'சாணக்கிய புரி' என்று இந்திய அரசு பெயர் சூட்டியுள்ளமை இவரது சிறப்பையே எடுத்துக்காட்டுகின்றது.

"பிளிட்" என்ற மேற்கத்தய அறிஞர்

*"அர்த்த சாஸ்திரம் இந்தியாவுக்கு மட்டுமல்ல*
*உலகம் முழுமைக்கும் நிர்வாகத்துறைக் கலையினையும்*
*அரசியல் சூழ்ச்சித் திறன்களையம் சுட்டிக்காட்டும்*
*மிக அழகான கையேடு"*

எனக் குறிப்பிட்டுள்ளமை இவர் கீழைத்தேச அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு எந்தளவு பங்காற்றியுள்ளார் என்பதை விளக்குவதாகவிருக்கின்றது. பௌத்த மதத்தை பின்பற்றிய தர்மபாலன் என்றஅரசன் ஹிமாலயப் பிரதேசங்களையும், தென்னாட்டையும் ஜெயிக்க சாணக்கிய சாஸ்த்திரங்களையே பின்பற்றினான் எனக் குறிப்பிடப்படுகின்றமை பிற்கால அரசியல் சிந்தனை விருத்திக்கும், செயற்பாட்டுக்கும் இவரது கருத்து எந்தளவு துணை புரிகின்றது என்பதையும் எடுத்துச் சொல்கின்றது.

ஆயினும் பல்வேறு குற்றச்சாட்டுகளும் கௌடில்யருடைய சிந்தனைகள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்றன. நீதி, அறம், ஒழுக்கம், மதம் என்பவற்றை மறுப்பது கண்டிக்கப்படுகின்றது. பொருளின் மூலமும், பகுத்தறிவின் மூலமும் அடையக்கூடியவற்றையும் அதே சமயம் அடைய முடியாதவற்றையும் ஒழுக்கம், மதப்பற்று என்பவற்றின் மூலம் அடையக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. உண்மையாக இராமல் சில விடயங்களில் உண்மையினைப் போல் நடிக்க வேண்டும் எனக் கூறுவது கண்டிக்கப்படுகின்றது. ஏனெனில் மக்கள் விழிப்படைகின்ற போது , உண்மை தெரியவரும்போது

மக்கள் அரசுக்கெதிராக கிளர்ந்தெழுவார்கள். இது ஆரோக்கியமான செயற்பாடல்ல. ஆகவே பொருத்தமற்றது என இவரது கருத்து குறைகூறப்படுகின்றது. குறுகிய நோக்கமுடைய தொன்றாக இருப்பது குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏனெனில் இவரது கருத்து அக்காலச் சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவிருக்கலாம். ஆனால் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியதல்ல எனக் கண்டிக்கப்படுகின்றது. அத்தோடு இவரது கருத்துக்கள் அரசியற் தந்திரமே தவிர அரசியற் கொள்கையல்ல எனவும் குற்றச்சாட்டப்படுகின்றது. "அர்த்த சாஸ்திரத்தை நான் ஒரு சாஸ்திரமாகவே ஒப்புக்கொள்ளத் தயாராகவில்லை" என கலாநிதி விண்டர் நிட்ஸ் என்ற மேற்கத்தய அறிஞர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல்வேறு அடிப்படையில் பல்வேறு குற்றச்சாட்டுகள் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் தொடர்பாக முன்வைக்கப்படுவதைக் காணலாம்.

## கௌடில்யரின் சிந்தனைகள் பற்றிய மதீப்பீடு

குறைபாடுகள் தவிர்க்க முடியாதவை. சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியடைகின்ற எந்தவொரு சிந்தனையும் தவிர்க்க முடியாதபடி குறைபாடுடையதாகவே இருக்கும். ஒரு காலத்து சிந்தனைகள் இன்னொரு காலத்திற்கு பொருத்தமற்றதாகவும் அமையலாம். ஆனால் குறைபாடுடையது என்பதற்காக அங்கு நன்மைகள் இல்லை என்று அர்த்தம் கொண்டுவிடக் கூடாது. இவ்அடிப்படையை வைத்துக்கொண்டு கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை நோக்கினால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் மேற்கத்தய சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அரசு, அதிகாரம், நிர்வாகம், வெளிநாட்டு உறவுகள் போன்ற பல்வேறு அரசியல் சிந்தனையின் கனதியையே எடுத்துக்காட்டுகின்றது. மேற்கத்தய மக்கியாவல்லி என்று அழைக்கக் கூடிய அளவுக்கு கௌடில்யரது சிந்தனைகள் அமைந்திருப்பதும், கீழைத்தேச அரசியல் சிந்தனைகளின் எழுச்சிக்கு வழிவகுத்தமையும் இவரது அரசியல் சிந்தனை எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய பெருமையை இந்து மதம் கொண்டிருக்கின்றது என்பதை நினைக்கும்போது வியக்காமலிருக்க முடியாது.

## உசாத்துணை நூல்கள்:


(01) Sabine G.H. (1946) "A History of Political theory" London.

(02) Krishna Rao.M. (1952) "Studies in Kautilya" New Delhi.

(03) அம்பலவாணர் சிவராஜா (2006) "உயாதர அரசியற் சிந்தனைகள்" குமரன் பதிப்பகம், கொழும்பு

(04) கொடுமுடி ராஜகோபாலன் (1972) "கௌடில்யர்" தமிழ் நாடு, இந்தியா.

(05) Harman. J. (1964) "Political thought", McGraw, U.S.A.



**ச. பாஸ்கரன்,**
உதவி விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# திருவாசகம், கிறிஸ்தவம், மேலைத்தேசம்
## ஒரு பண்பாட்டுக் கலப்புப் பார்வை

இலக்கிய உலகில் கொள்ளல் கொடுத்தல் என்பது சகயம். தமிழில் சங்க காலத்திலிருந்து இது நடந்து வருகின்றது. இது ஆரம்பத்தில் இந்திய உப கண்டத்தில் நடைபெற்றது. மேலைத் தேசப் பண்பாட்டு வருகையுடன் உலகளாவிய நிலைக்கு மாறுகிறது. அந்த வகையில் கொண்டு செல்லப்பட்டதே திருவாசகம்.

பொதுவாக இலக்கியக் கொள்ளல் - கொடுத்தல் மொழிபெயர்ப்பு மூலமே இடம் பெறுகிறது. அது பல்வேறு தேவைகளை ஒட்டி மேற்கொள்ளப்படுகிறது.

(அ) இலக்கியத்தின் சிறப்பு

(ஆ) புதுவகை இலயக்கியவகையை உள்வாங்கல்

(இ) ஒரு பண்பாட்டுத்தளத்தில் இருக்கும் அரசியல் தத்துவத்தை உள்வாங்கல்

(ஈ) இன்னொரு பண்பாட்டு விழுமியங்களை அறிய முயலுதல்

இந்தப் பின்னணியில் தான் திருவாசகத்தைப் பார்க்க வேண்டி இருக்கிறது. போப்பின் மொழிபெயர்ப்புடன் (1900) திருவாசகம் மேலைத்தேசப் பண்பாட்டில் நுழைந்தது மட்டுமல்லாமல், பல்வேறு ஆய்வுக்கும் உள்ளடக்கப்பட்டது. தற்போது சிம்போனியில் இறுவெட்டாகவும் வந்துவிட்டது.

திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டதைப்போல திருவாசக மொழிபெயர்ப்பையோ அது மேலைத்தேசத்துடன் கலந்ததையோ பார்க்க முடியாது. திருவாசகம் ஒரு பண்பாட்டின் பன்முக அடையாளம். தென்னாடுடைய சிவனைப்போற்றி, சித்தாந்தக்கருத்துக்களை, தனிமனித விடுதலையை சைவத்தினூடாக தமிழில் கொண்டு வரும் இலக்கியமே திருவாசகம்.

### தமிழரும் திருவாசகமும்

நாயன்மார்கள் வாழ்ந்து 'பக்திப் பாடல்' பாடிய சூழல் தமிழ், தமிழர் வரலாற்றில் முக்கியமான காலம். சமயத்தை முன்னிறுத்தி தம் சமயத்தின்பால் பற்றற்று அசிரத்தையாயிருந்த தமிழ் மக்களைத்தட்டி எழுப்பி மீண்டும் தம்மதத்திலும் தம் கடவுளிலும் தம் கலாசாரத்தினிடமும் பக்தியும் பற்றும் கொள்ளும்படி பாடல்கள் பாடிய காலம் அது.

அத்துடன், வடமொழியை மையப்படுத்தியதான மரபு வழி இறையியலை மாற்றி அவ்விறையியலை அந்தந்த மாநில மொழி ஊடு தென்னிந்திய - தமிழர் இறையியலாகப் போதிக்கும் ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட தன்மையும் அடி நாதமாக இருந்தது.

அதுமட்டுமல்லாமல் பிரபுக்கள், செல்வந்தர்கள், பிராமணர், கடைப்பட்டோர், பெண்கள் என்ற வேற்றுமையின்றி அனைவருடனும் இறையடியார் பழகியகாலம். ஆவுரித்துத் தின்றுழலும் புலையனும் சிவனடியானாயின் அவனை வணங்கத் தயாராகவும் இருந்து காட்டிய நாயன்மார் மக்களையும் அவ்வாறு நடக்கச் செய்த காலகட்டம்.

ஆனால், நாயன்மார் பாடல்கள் வடமொழி இறையியலில் இருந்து மாறுபட்ட அல்லது எதிரிடையானதொன்றைப் போதித்தன என்ற முடிவுக்கு வர முடியாது. இறைவனை அடைய உபநிடதம் முதலிய இறையியல் கொள்கைகள் என்ன வழியைக் காட்டினவோ அதே வழியைத்தான் பாடல்களும் காட்டின. ஆனால் யாவருக்கும் மீட்பு - முக்தி என்ற கொள்கை மக்கள் மயப்படுத்தப்பட்டதே சிறப்பம்சம்.

இத்தன்மையைப் பொதுவாக நாயன்மார் கடைப்பிடித்தாலும் தமிழர் மத்தியில் மாணிக்கவாசகரும் அவரது திருவாசகமும் பெறும் செல்வாக்கு பிரிதொரு வகைப்பட்டது. அல்லது முக்கியமானது.

தமிழ் இலக்கியப்பரப்பில் திருவாசகத்துக்கு இருந்த கணிப்பைப் பற்றி மதிப்பீட்டு வெண்பா ஒன்றில்

"வள்ளுவர் நூல் அன்பர் திருவாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரிமேலழகர் செய்தவுரை - ஒள்ளிய சீர்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந்தரம்"

என்று கூறப்படுவது திருவாசகம் தமிழில் மேலாந்தரத்தில் வைத்துப் போற்றப்படுவதை அறிவுறுத்துகிறது. அத்துடன் அதன் ஆசிரியர் "அன்பர்" எனக் கூறப்படுவதும் திருவாசக ஆசிரியர் மக்களுடன் மக்களாகக் கணிக்கப்பட்டமையின் உச்சத்தையும் புலப்படுத்துகிறது.

பின்வந்த ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் கூட மாணிக்கவாசகரது நெறியும் அவரது பாடல்களும் மீட்பு, முக்தி அடையக்கூடிய வழியைக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

"வருமொழிசெய் மாணிக்க வாசக நின் வாசகத்தில்
ஒரு மொழியே என்னையும் என் உடையானையும் ஏற்றுவித்தத்
தரு மொழியாம் என்னில் இனிச் சாதகமென் சஞ்சலமேன்
குரு மொழியை விரும்பி அயல் கூறுவதேன் கூறுதியே"

எனவரும் சித்தராகிய இராமலிங்க சுவாமிகளின் பாடல் (திருவாசகத்தைப் புகழ்ந்து ஒரு பதிகமே பாடியிருக்கிறார்) இதற்கோர் எடுத்துக்காட்டு,

திருவாசகம் 51 பதிகங்களையும், 656 பாடல்களையும் கொண்ட ஒரு தொகுப்பு. இப்பாடல்கள் அவர் வாழ்ந்த வெவ்வேறு காலப் பகுதியில் வெவ்வேறு இடங்களில் பாடப்பெற்றவை. அவை ஏதோ சந்தர்ப்பவயப்பட்ட பாடல்கள் அல்ல. மாறாக தனிமனித விடுதலை இறையியலைக்

கூறும் பாடல்கள். அவை சூத்திரங்களாக அல்லாமல் நெஞ்சம் நிம்மதி கொள்ள இசையுடன் பாடப்பட்ட பாடல்களாகவே அமைந்துள்ளன. இதன் உச்சக்கட்டத் தீர்மானமே "திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்ற பழமொழி பயிலவும் காரணமாயிற்று.

சுருங்கக்கூறின் தமிழ் உலகம் திருவாசகத்தினை இலக்கியம், மொழி, மற்றும் சமயம், ஞானம், அனுபவம், அருள் முதலான இறையியல் எனப் பல் துறைகளிலும் மிகப்பெரும் சிறப்பு வாய்ந்ததொன்றாகக் கொள்கிறது.

## ஆங்கிலத்தில் திருவாசகம்

'ஆங்கிலத்தில்' என்னும்போது மொழியை மட்டுமல்லாமல் பண்பாட்டையும் குறித்து நிற்கின்றது. மேலைத்தேசத்தில் பல இனங்களைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலத்தை பேசுகின்றனர். அம்மக்களின் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்கள். திருவாசகத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி. யு. போப் ஒரு கிறிஸ்தவர். அதுவும் ஒரு கிறிஸ்தவ மதகுரு.

ஜி. யு. போப் கிறிஸ்தவ மறைபரப்புகைக்காகத் தென்னிந்தியா 'அனுப்பப்பட்டவர்'. தனது பணிக்காகத் தமிழ்மொழியைக் கற்ற போப் பின்பு அதில் ஈடுபாடு கொண்டு மகாவித்வான் இராமானுஜக் கவிராயரிடம் தமிழ், இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்தவர். தமிழ் இலக்கியங்களின் சுவையை, சிறப்பை ஆங்கிலத்தில் கொடுக்க வேண்டும் என்று பிரயாசைப்பட்டவர். அவ்வாறு மேலைத்தேசத்துக்கு அவர் அறிமுகப்படுத்தியதில் திருவாசகமும் ஒன்று.

போப் என்ற மனிதனை மட்டும் வைத்துப் பார்த்தால் தனது ஆளுமை விருத்திக்காக மொழிகளைப் படிப்பதும், மொழி பெயர்ப்பு வேலைகளைச் செய்வதும் தனது கல்விக்காகவோ கௌரவத்திற்காகவோ பட்டங்களைக் கூட்டிக்கொள்வதற்காகவும் இருக்கலாம். ஆனால் திருவாசகம் மேலைத்தேசத்தில் நிலைகொள்கிறது. ஏன்?

கிறிஸ்தவ சமயப் பரப்புகைக்கும், போதனைக்கும் அனுப்பப்பட்ட "மதகுரு" இன்னொரு சமயத்தின் முக்கியமான இலக்கியத்தை எடுத்துக் கிறிஸ்தவ மதத்திற்கே அறிமுகப்படுத்துவது அவரை அனுப்பிய சபையினருக்கும் அச்சமயத்தவர்களுக்கும் பிரச்சினைக்குரிய ஒன்றாக இருந்திருக்காதா?

ஆங்கில மொழித் திருவாசகம் ஆங்கில - மேலைத்தேசக் கிறிஸ்தவப் பண்பாட்டில் ஏற்புடைமை பெறுவதற்கு திருவாசகத்தின் உள்ளடக்கம் எடுத்துக்கூறல் முறைமை என்பவை மிகவும் முக்கியமானவையாக இருந்திருக்க வேண்டும். திருவாசகப் பாடல்களின் உருவம் தமிழ் இலக்கிய 'யாப்புக்கு' உட்பட்டதே. அந்த 'யாப்பு' மேலைத்தேயத்தை ஈர்த்திருக்க நியாயமில்லை. எனவே, திருவாசகம் மேலைத்தேசத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான காரணங்கள் பற்றி சில கருத்துக்களை முன் வைக்கலாம்.

தனிநபர் விடுதலை என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படை. ஆன்ம விடுதலை பெறுவதே உண்மையான கிறிஸ்தவ வாழ்வு. "ஒருவன் இறைவனை அடைய வேண்டும் எனின், தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்பின்னே வரக்கடவன்" என கிறிஸ்து கூறுவது தன்னிலை உணர்ந்து பாடுகள் அனுபவித்து இறுதிநிலை - முக்தி நிலை பெறமுடியும் என்பதேயாகும்.

இத்தகைய ஒரு இறையியல் ஓட்டமே திருவாசகம். அது ஓரு ஆன்மாவின் முக்தி யாத்திரை. ஒவ்வொரு மனிதனும் தன்னை மாணிக்கவாசகர் இடத்தில் வைத்து, மாணிக்கவாசகராகத் தன்னைப் பாவனை செய்து அவரது பாடல்களை இறைவனை நோக்கி இறைஞ்சி அவனருளால் அவன் தாள் வணங்கி "யாவரும் பெறவுறும் ஈசனைக் கண்டு" ஆன்ம விடுதலை பெற முடியும்.

மேலைத்தேசத்தில் 17 ம் நூற்றாண்டில் ஜோன் பெனியின் (John Bunyan) எழுதிய மோட்சப் பிரயாணம் (Pilgrim's Progress) முக்கியத்துவம் பெற்றிருந்தது. போப் அதை அறிந்திருந்தார். போப்பினுடைய காலத்தில் தான் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை இந்நூலைத் தழுவி (1894) 'இரட்சண்ய யாத்திரிகத்தை" எழுதினார் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. அதேபோன்ற முக்தி யாத்திரை பற்றி கூறும் திருவாசகத்தைத் தமிழில் காணுகின்றபோது போப்பிற்கு அது ஆச்சரியத்தைக் கொடுத்ததில் வியப்பில்லை. தமிழ் மக்களைப்போல் போப்பிற்கும் திருவாசகம் ஓர் இறை நூலாகவே தென்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சமயம், பண்பாடு, மொழி, இட அமைவுகள், இறையியற் சொற்கள், பண்பாட்டுக் கலைச் சொற்கள் என எல்லாமே மாறுபட்ட ஒரு நூலைத் தழுவிப் புதிய இலக்கியத்தையோ அந்நூலின் சாரத்தை எடுத்துச் சுருக்கி மொழி பெயர்க்கவோ செய்யாமல் அப்படியே 656 பாடல்களையும் மொழிபெயர்த்திருக்கிறார் போப். கிருஷ்ணபிள்ளை ஒரே சமயக்கருவை பிறிதொரு மொழியில் செய்த வேலையை போப் சமயமும், மொழியும் வேறுப்பட்ட நிலையில் செய்கிறார். அதேவேலை மேலைத்தேசப் பண்பாட்டின் அடிநாதமாகிய கிறிஸ்தவத்துடன் ஒத்துப்போகிறது. ஏற்புடைமை பெறுகிறது.

## கிறிஸ்தவ, திருவாசக இறையியல்

பாவியை மீட்க இறைவன் அவர்களைத் தேடி உலகுக்கு வந்தார் என்பது கிறிஸ்தவம். இதேபோன்றே மாணிக்கவாசகர் அடிக்கடி திருவாசகத்தில் கூறுவதை அவதானிக்கலாம். சிவபுராணத்தில் இது அதிகம் இடம் பெற்றுள்ளது. ஆயினும் குயிற்பத்தில் வரும்,

"வான் பழித்திம் மண்புகுந்து மனிதரை ஆட்கொண்டவள்ளல்
ஊன் பழித்துள்ளம் புகுந்து என் உணர்வது ஆயவொருத்தன்"

எனும் வரிகளைத் தக்க எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இறைவனே நம்மைத் தேடிவந்தாலும் அவனை அறிந்து அன்பு வைத்து இரண்டறக்கலக்க வேண்டும் எனத் திருவாசகம் குறிப்பிடும். "இறைவன் நம்மைத் தேடிவந்தும் நாம் அவரை ஏற்கவில்லை" கிறிஸ்தவம் கூறும் என்று குறை இல்லாமல் அவர் மீது அன்பு வைக்க அருள்பாலிக்குமாறு இறைவனை இடையறாது வேண்டவும் வேண்டும் என திருவாசகம் குறிப்பிடும்.

இறைவனை முன்னிலைப்படுத்தி நேரடியாக அவருடன் பேசவேண்டும். தனிமையிலே கடவுளுடன் உறவாட வேண்டும் என இயேசு சீடர்களுக்குக் ஜெபம் செய்யக கற்றுக்கொடுத்தபோது கூறினார். திருவாசகப் பாடல்கள் பலவற்றை அந்தத் தன்மையுடன் செபமாகவும் பார்க்க முடிகிறது.

தனிமையில் உறவாடும்போது தன்னிலை உணர்ந்து "பாவ மன்னிப்பும்" பெறமுடியும். இதனை

"யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே"

**(திருச்சதகம் – 90)**

என்று தன்பிழை உணரும் மணிவாசகர் "நான் பாவி என்னைக் கைவிடாதேயும்" என 'நீத்தல் விண்ணப்பமே' செய்கின்றார்.

அத்துடன் இறைவனை அடைய வேண்டும் என்பதற்காக உபவாசமிருந்து உடலை வருத்துதல் முதலான வன்பத்தி முறையில் இறைவனை பிரார்த்திக்க வேண்டும் என்ற செய்தியே திருவாசகத்தில் காணமுடிவது கடினம். மாறாக

"புற்றுமாய் மரமாய் புனல்களிலே
உண்டியாய் அண்டவாணரும் பிறரும்
வற்றியாரும் நின் மலரடி காணா மன்ன..."

**(௨௩ ம் பதிகம்)**

என்றே பாடுகிறார். கிறிஸ்துகூட பகட்டு உபவாசத்தை எதிர்த்தவர் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

கடவுள் மீதான அன்பு தெய்வீகக் காதலாக மாறுவதை மாணிக்கவாசகர் வழி காணமுடிகிறது. அதற்காக மணப்பெண்ணாகப் பாத்திரம் ஏற்றார். இறைவன் ஒருவன் அவனே பதி. ஒரே ஒரு புருசோத்தமனே உள்ளான் என்பதால் ஏனைய ஆன்மாக்கள் அந்தப் புருஷனைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பது தென்னிந்திய இறையியல் மரபு. இத்தகைய நாயகன்-நாயகி பாவம் சிறப்பாக கீழைநாட்டுக்கு உரியதே. ஆயினும் மேலைத்தேசத்தவர் இதைப்பற்றி அறியாதவர்களல்லர் கிறிஸ்து கூட தான் "மணவாளனாக" வந்ததாகக் கூறுகிறார். அவ்வாறாயின் கிறிஸ்தவர்கள் மணப்பெண்களே!

தெய்வீக உறவின் உச்சக்கட்டம் இறைவனைக் கண்ணாரக் காண்பதேயாகும். அப்போது அவனுக்கு உருவம் கொடுக்கப்படும். அத்தகைய நிலை திருவாசகத்தில் நிறைய உண்டு. மேலும் "நான் கண்ட இறைவனை நீயும் காண" என்று ஆற்றுப்படுத்துவதுபோல் பின்வரும் பாடல் அமைகிறது.

"யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியென் காண்க
கண்ணால் யானுங் கண்டென் காண்க...."

(திருவண்டப்பதிகம்)

இதை கிறிஸ்து கூறிய "என்னைக் கண்டவன் என் பிதாவைக் காண்டான்" என்ற ஆற்றுப்படுத்தலுடன் தொடர்புபடுத்திப்பார்க்க.

இறைவனைக் காணும் பாக்கியம் கிடைக்கும் ஆன்மா முக்திப் பேறடைந்து விடுகிறது. அவ்வகையில் ஆன்மா தனது இலக்கை அடைந்து விடுகிறது. மணிவாசகர் தில்லையில் முக்தி அடைந்தார் என்பது சமய நம்பிக்கை. முக்திப்பேறடைந்தவர்கள் கடவுளின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பார் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. இயேசுவின் சீடன் ஒருவர் தான்கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கவேண்டும் என் விரும்பினார். இயேசு தான் கடவுளின் வலப்பக்கத்தில் இருப்பதாகக் கூறினார். இதேபோல் மாணிக்கவாசகர் கடவுளைக் கண்ணாரக்கண்டதுமல்லாமல்

"அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் அடியேன்
உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்"

என்று வேண்டுவதும் ஒப்புநோக்கத்தக்கது.

இறுதியில் இறைவன் தன்னில் குடிகொண்ட ஆனந்தக்களிப்பில் - ஒன்றித்துவிட்ட உறுதிப்பாட்டில் மணிவாசகர்,

"முக்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

என்று பாடுகிறார்.

மேற்கூறிய உள்ளடக்கம் கிறிஸ்வ - திருவாசக ஒருமைப்பாட்டோடு திருவாசக எடுத்தரைப்பு முறைமையில் உள்ள பொதுமைப்பாட்டையும் கவனித்துக்கொள்ளலாம். அவரது பாடல்கள் வாயிலாக

1. இறைவனைப் புகழ்ந்து
2. தன் பிழை உணர்ந்து
3. அருள் பெறும் நிலை அடைந்து
4. முக்தி பெற்று இன்புறுவதே

தனிமனித விடுதலைப் பயணம் என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறான பண்புகளால் மேலைத்தேசத்துடன் ஒன்றித்துவிட்ட திருவாசகத்தை மேலைத்தேசத்தவர் பலர் ஆய்வுக்குட்படுத்திருக்கிறார்கள். 19 ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இன்று வரை அவ்வாயவு நடைபெற்றே வருகிறது. திருவாசக இறையியல், அது காட்டும் சமயப் பண்பாடு, தமிழில் அதற்காக இடம் என்பன பற்றி ஜி. யு. போப், முதல் ஆர். டி. ராணடே (R.D.Ranede) கார்ப் பெண்டர், காமில் ஸ்வலபில் எனப் பலரும் ஆய்வு செய்துள்ளனர்; செய்துவருகின்றனர்.

## சிம்பொனியில் திருவாசகம்

அண்மையில் தென்னிந்திய இசைக்கலைஞர் இளையராஜா திருவாசகத்தில் தெரிந்தெடுத்த பாடல்களைச் சிம்பொனி இசையில் தந்திருக்கிறார். பாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்கு வைத்திருக்கும் பெயர் 'Thiruvasagam A Classical Cross - Over' (சாகித்திய, மேலைத்தேச இசைக்கலப்பில் திருவாசகம்)

திருவாசகத்தை இசைக்க ஒரு சிம்பொனி ஒகஸ்ட்ரா தேவையா? சாதாரண கீழைத்தேச இசையே போதுமல்லவா? திருவாசகத்துக்கு இசையமைக்க ஹரங்கேரி கிறிஸ்தவ சிம்பொனிக் குழு முன்வந்ததற்குக் காரணம் என்ன? அல்லது இளையராஜா அவர்களை அணுகியது ஏன்? என்பவை இங்கு எழுப்பப்படும் சில வினாக்கள்.

உண்மையில் இளையராஜவின் இலக்கு மக்கள் சைவத்தமிழர் அல்லர். ஏனெனில் கர்நாடக இசையில் பக்திப்பாடல் வரும் மரபு அவருக்கு நன்கு பரிச்சயமானது. திருவாசகத்தை கர்நாடகத்தில் அல்லது ஹிந்துஸ்தானியில் தந்திருக்கலாம். ஆனால் தர எத்தணிக்கவில்லை. சிம்பொனியில் தந்திருக்கிறார்.

சிம்பொனி (Symphony) இசை அடிப்படையில் ஒரு குழு இசையே (An orchestral Consert) இவ்விசை அசைவியக்கத்துடன் தொடர்புடையதாய் அமைந்திருக்கும்.

சிம்பொனியின் ஆரம்ப இடமாக இத்தாலியைக் குறிப்பிடுகின்றனர். 18 ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இது பயில் நிலையில் இருந்து வருகிறது. தேவாலயமே இதன் பிறப்பிடம். ஆராதனைகளில் பாடப்பட்ட பாடல்களில் பின்னணியில் இருந்தே இவ்விசை வளர்ந்து வருகிறது.

Giuseppe Torelli என்பவரே 4 அசைவுகள் (movement) கொண்ட சிம்பொனியை முதலில் இசைத்ததாகக் கூறப்படுகிறது. சிம்பொனி என்பதற்கு Sym (together), Phone (Sounding) இசையைக் காட்டுவது அல்லது ஆடலுடன் கூடிய இசை என்ற பொருள் கொள்வர். இத்தாலியில் ஆரம்பமான இச்சிம்பொனி பின்பு ரோம், ஜேர்மன், அமெரிக்கா, பிரான்ஸ் எனப்பரவி தனித்தன்மையுடன் திகழ்கின்றதைக் காணலாம்.

உண்மையில் சிம்பொனி இசைகூட கிறிஸ்தவப் பண்பாட்டின் அடிப்படையாக வரும் ஓர் இசை வகையே. தேவாலய ஞானப்பாடல்கள் (Hymns) வழியாக வரும் இவ்விசையில் போப் மொழிபெயர்த்த திருவாசகம் இன்னொரு வளர்ச்சி வடிவத்தையும், வளர்ச்சி நிலைமையும் பெறுகிறது.

திருவாசக இசையில் 120 கலைஞர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். இவர்களில் தமிழர் 20 பேரிலும் குறைவு. மேலும் இசைக் கலைஞரோ வழுங்கெரி நாட்டின் Lassls Kovacs உள்ளிட்ட அவரது குழுவினர். திருவாசகத்தின் உண்மையான உட்பொருளை விளங்காது இவர்களால் இசையமைக்க முடிந்திருக்குமா என்பது கேள்விக்குரியது.

மேலும், சிம்பொனிக்காக திருவாசகத்தில் இருந்து தெரிந்தெடுத்த பாடல்களும் அப்பாடல் தமிழிலும் இடையிடையே ஆங்கிலத்திலும் வரும் பகுதிகளும் இன்னொரு கவனத்திற்குரியவை.

திருவாசக இறுவெட்டில் 6 பாடல்கள் உள்ளன. அவை தனித்தனியே பின்வரும் கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றன.

1. யாத்திரைப்பத்தில் இடம்பெறும் பாடங்கள் சில சேர்ந்து பாடலாகின்றன.
   முக்தி, சிவலோகம் தேடிப்பொகும் படிநிலைகள் பற்றி இப்பாடல் கூறுகின்றது.
2. சிவபுராணத்தை ஒழுங்கு மாற்றித் தேவைக்கு எற்ப "தன்னிலை உணர்தல்" பாடல்கள் இதில் முக்கியம் பெறுகின்றன.
3. சிவனுடன் ஐக்கியமாவதைக் கூறும் 'திருக்கோத்தம்பி'ப் பாடல்கள் அடங்கியுள்ளன.
4. படித்தபத்தில் வரும் முக்திக்கலப்புப் பற்றி உரைக்கும் பாடல்கள்
5. ஆன்மா ஆனந்தக்களிப்பில் இருப்பதைப்பாடும் பாடல்கள் சில திருப்பொற் சுண்ணத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.
6. அச்சப்பத்துப்பாடல்கள் சில உள்ளன. மாணிக்கவாசகர் முத்திப்பேறு கண்ட தில்லையில் அருளிய பாடல்கள் இவை. இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலை இங்கு கூறப்படுகிறது.

மேற்கூறிய 6 பாடல்களிலும் முன்னர் கூறிய இறையியல் ஒழுங்கு (Order) இருக்கிறது. அந்தவகையில் தனி மனிதன் பாடி மீட்புப் பெறும் அடிப்படையில் திருவாசகப் பாடல்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ள எனலாம்.

அத்துடன் அப்பாடல்களில் இரண்டு பாடல்களில் மட்டும் சில வரிகள் ஆங்கிலத்தில் பாடப்படுகின்றன. அவைபற்றியும் சில கருத்துக்களை அலச வேண்டியிருக்கிறது. சிவபுராண வரிகளை இசைத்தேவைக்கும், பொருள் தொடர்ச்சிக்கும் ஏற்ப மாற்றி அமைத்துப்பாடினாலும் மேலைத்தேச ஒகஸ்ட்ரா குழுவினர் சில வரிகள் பாடுகின்றனர். அவ்வரிகள் தென்னாட்டுச் சமய வசப்படாத பொதுவான இறை வேண்டுதல் வரிகளாக இருப்பதை அவதானிக்க முடியும்.

"........I am just a man Imperfect lowly!
How can I reach for something holy!"

"So many forms I must wear! பொல்லாவினையேன்
So many lives I must bear!" எல்லாப்பிறப்பும்

"Hail Hail ! I sing hail
Hail Hail! Joyfull hail"

இவ்வாறு எவரும் எந்தச் சமயத்துக்கும் பாடக்கூடிய அதிலும் கிறிஸ்தவர்கள் அதிகம் பாடுகின்ற மெட்டுக்களையும் சொற்களையும் திருவாசகத்தில் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் பாடியிருக்கிறார். மேற்கூறிய வரிகளைப் பார்க்கும் போது Fanny J. Crosby எழுதிய கிறிஸ்தவப் பாடல் ஞாபகம் வருகிறது.

"Praise him! Praise him Jesus our blessed Redeemer!
Sing: Oh earth his wonderful love proclaim!
Hail! him Hail him! highest archangels in glory..."

இப்பாடல் தமிழிலும் வெளிவந்தது,

"போற்றும் போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்...."

என அப்பாடல் தொடர்கிறது.

கிறிஸ்தவ சமயம் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பரப்பப்பட்ட போது அவர்களது வழிபாட்டு முறை மேலைத்தேச சமயப்பட்டே இருந்தது. வழிபாட்டுப் பாடல்களும் மேலைத்தேச இசையிலேயே இருந்தன. (இன்னும் சில உள்ளன) காலப்போக்கில் கிறிஸ்தவப் பாடல்கள் தமிழில் இருந்த 'கீர்த்தனை' வடிவத்தை தனதாக்கிக்கொண்டு கீழைத்தேச மயமானது இங்கு மனங்கொள்ள வேண்டியது.

இப்போ கீழைத்தேச இசையில் பாடப்பட்ட, படிக்கப்பட்ட திருவாசகம் மேலைத்தேச இசையில் பாடப்பட்டுள்ளது. இது திருவாசகம் மேலைத்தேசத்தில் பெற்றிருக்கும் செல்வாக்கின் இன்னொரு படிநிலை வளர்ச்சியாகவும் தமிழ்ப்பண்பாடு புதிய முறையில் எடுத்துச் சொல்லப்படுவதற்கான ஊடகமாகவும் அமைந்திருப்பதை எடுத்தக்காட்டுகிறது.

**மா. ரூபவதனன்,**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# ஆய்வியல்

மயிலாட மலர்ச்சோலை மதுவீழ்ந்த நதிஓடக்
குயில்பாடக் கலைவாடும் குறைம மாந்துபேரா
தனைமேவும் புகழ்சேர எனையாளும் குமரேசன்
சுனைசூழும் மலைமீது அனைய ரிருவருடன்

- ந. வீரமணி ஐயர் -

# மகாகவி பாரதியும் ஆத்மீக அடித்தளமும்

பாரதி என்பது, இன்றைய நிலையில் ஒரு கவிஞனைச் சிறப்பிக்கும் பெயராக மாத்திரமன்றி, நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு குறியீடாகவும் விளங்குகிறது எனலாம். நவீன தமிழ் இலக்கியச் சிந்தனைகளின் பிதாமகனெனக் குறிப்பிடத்தகுந்த பாரதி, கொள்கையளவில் ஒரு முற்போக்குவாதியாகவும், அடிப்படையில் ஓர் ஆத்மீகவாதியாகவும் விளங்கியதை அவரது படைப்புகள் துலாம்பரமாக நிறுவுகின்றன. முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் பாரதி தனித்திறமை பெற்றிருந்தார். உலகலாவிய சர்வதேசிய நோக்குப் பாரதியிடத்தில் படர்ந்து விரிந்திருந்தது. அதேவேளை, தம்மையொரு ஆத்மீகவாதியாகக் கருதிக்கொள்வதில், உணர்ந்துகொள்வதில், வெளிக்காட்டிக்கொள்வதில் பாரதி தனியான்மையோடு விளங்கினார். ஆத்மீக அடிப்படையில் நின்று நாட்டு நலத்தையும், சமூதாய நலத்தையும் விரும்பியவராக அவர் திகழ்ந்தார். சமய அடிப்படையில் கொண்ட கிருதயுகம் என்ற சொல்லை நாட்டு நலன் சமுதாய நலன் நோக்கில் புதிய அர்த்தம் பாய்ச்சி அவர் பயன்படுத்தினார்.

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்ற நோக்குக் கொண்ட பாரதி, தமது, "எழுத்து" தெய்வீக அம்சம் நிறைந்ததாக இருக்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராக இருந்திருக்கிறார். தமது வசன கவிதையிலே மினன்ல் பற்றிக் கூறவந்த அவர், மின்னலின் தெய்வீக வீச்சு தமது எழுத்திலும் படியவேண்டும் என விரும்பியிருந்தார். மின்னல் பற்றிக் குறிப்பிடும் பாரதி வசன கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

"மின்னல் ஒளித்தெய்வத்தின் ஒரு லீலை
ஒளித்தெய்வத்தின் ஒரு தோற்றம்
நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக
நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப் பாய்க
நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக
நமது பாட்டு மின்னலுடைத்தாகுக
நமது வாக்கு மின்போல் அடித்திடுக"

மேற்கொண்ட பகுதியினின்றும் தமது படைப்பில் எவ்வாறு மின்னலின் தெய்வாம்சம் நிறைந்திருக்க வேண்டும் என அவர் விரும்பியிருந்தார் என்பது தெளிவாகிறது.

பாரதப் பழம்பெரும் நாடு ஆத்மீகத்துறையில் கீழைத்தேயங்களுக்கு ஆதர்சமாகவும் விளங்கியிருக்கிறது. இத்தகைய வியத்தகு இந்தியாவின் ஆத்மீகப் பெருவரலாற்றில் சித்தர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது. இவர்களை ஆத்மீகத்துறையில் ஒருவகையிற் புதுச்சிந்தனையாளர் எனலாம். இத்தகைய சித்தர் பரம்பரை, பாரதிக்கு ஆத்மீகத்துறையில் ஒரு முன்மாதிரியாக அமைந்தது எனலாம். அதனாலேயே பாரதி அறுபத்தாறு என்ற பகுதியில், "எனக்கு முன்னே

சித்தர் பலர் இருந்தாரப்பா யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டிலே" என்ற தன்னம்பிக்கையுடன் கூறியுள்ளார். தமிழகச் சித்தர் பரம்பரை மீது அவர் கொண்டிருந்த அவதானிப்பும், அக்கறையும், ஆர்வமுமே அவரை இவ்வாறு கூறச்செய்தன எனலாம். கவிஞரின் மேற்கொண்ட கருத்து, இந்திய ஆத்மீகப் பாரம்பரியத்தினூடே தம்மையும் இணையச் செய்யும் அவரது மனப்பூர்வமான முயற்சி எனல் வேண்டும்.

இவ்வாறு பாரதி ஆத்மீக நாட்டம் கொண்ட கவிஞராகத் துளிர்ப்பதற்கு அவரது வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட ஆத்மீகப் பெரியோர் குழாமும் காரணம் என்பதிற் சந்தேகம் எழுவதற்கில்லை. பாரதியோடு தொடர்புகொண்டோர் பெரும்பாலும் ஆத்மீகத்துறை சார்ந்தோராகவே விளங்கினர். கோவிந்தசாமி, அரவிந்தர், வ.வே.சு.ஐயர் ஆகியோரது ஆத்மீகத் தேடல் முயற்சிகளும், வழிகாட்டல்களும் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதாதேவியின் சந்திப்பும் பாரதியை ஆத்மீக அடிப்படையில் அமைந்த பெருங்கவிஞனாக உருவாக்குவதிற் பெரும் பங்களிப்பு நிகழ்த்தியுள்ளன. இந்த ஆத்மீகப் பார்வையிலேயே விசாலமான இதயத்தோடு அரசியல், சமுதாயம், தொழில்வளம் முதலான பல்வேறு அம்சங்களையும் பாரதி கவனித்துக் கணித்திருந்தார்.

ஆத்மீக நெறிப்போக்கைத் தமது நிலைக்களனாக வரித்துக்கொண்ட பாரதியின் ஆளுமையை மேம்படுத்தல் அதியுயர்ந்த ஆதர்சதெய்வமாக அன்னை பராசக்தி விளங்குகிறாள். இந்தப் பேரன்னையின் பிரதிபலிப்பாகவே பாரதத் தாயையும், பாஞ்சாலியையும் அவர் காண்கிறார். தமது சுயசரிதையிலே அன்னை பராசக்தியே தமக்குக் கவிதை தருவதாகக் கூறியுள்ளார்.

'மாகாளி பராசக்தி உமையாள் அன்னை
வைரவி கங்காளி மனோன்மணி மாமாயி
பாகார்ந்த தேமொழியாள் படருஞ் செந்தீ
பாய்ந்திடுமோர் விழியுடையாள் பரம சக்தி
ஆகார மளித்திடுவாள் அறிவு தந்தாள்
ஆதிபரா சக்தியென் அமிர்தப் பொய்கை
சோகாட விக்குளெனைப் புகவொட் டாமல்
துய்யசெழுந் தேன்போல கவிதை சொல்வாள்"

இவ்வாறு பல இடங்களிலும் அன்னையின் அருளை இழையோடச் செய்து கவிதைகள் படைத்துள்ளார் பாரதி. புரட்சியினாற் புதுப்பொலிவு பெற்ற புதிய ரஷ்யாவைப் பாடும்போது,

"மாகாளி பராசக்தி உருகிய நாட்
டினிட் கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப் புரட்சி"

என்றும்,

"அம்மை மனங் கனிந்திட்டாள் அடிபரவி
உண்மை சொலும் அடியார் தம்மை
மும்மை யிலும் காத்திடுதல் விழியாலே
நோக்கி னாள் முடிந்தான் காலன்"

எனவும் பராசக்தியின் நல்லருளினாலே ரஷ்யாவிற் புரட்சி வென்றது என்ற தமது கருத்தைத் தந்துள்ளார்.

சொந்த வாழ்க்கையிலும் பராசக்தியின் பெரும் அருள் தமக்கு என்றென்றும் தேவை என்னும் மனோநிலையிலேயே பாரதி வாழ்ந்துள்ளார். வறுமை அவரை வாட்டியபோதும் அன்னையையே வேண்டுகின்றார்.

"தாயே என்னைக்கடன்காரர் ஓயாமல் வேதனைப்படுத்திக்
கொண்டிருந்தால் நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து
கொண்டிருந்தால் உன்னை எப்படிப் பாடுவேன்"

என்பது அவரது வேண்டுதல்.

பாரதியின் இலக்கிய மேதாவிலாத்தினை என்றென்றும் பறைசாற்றிக்கொண்டிருக்கும் முப்பெரும் பாடல்களான பாஞ்சாலிசபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ஆகியவற்றை நோக்கினும், அவற்றின் உட்கிடக்கை ஆத்மீக கருவிலேயே அமைந்துள்ளது. "தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும் தருமம் மறுபடி வெல்லும்" என்பது பாஞ்சாலி சபதத்தின் பொருள். அருச்சுனனின் வாயிலாகப் பாரதி இதனை வெளிப்படுத்துகிறார். பாஞ்சாலியும், வீமனும் பராசக்தி மீது ஆணையிட்டே தமது சபதங்களைச் செய்கின்றனர். பாஞ்சாலியின் சபதம் பற்றிக் கூறுமிடத்து "தேவி திரௌபதி சொல்வாள் ஓம் தேவிபராசக்தி ஆணையுரைத்தேன்" என்றும், வீமனின் சபதத்தில் "இது நான் சொல்லிடும் வார்த்தையென் றெண்ணிட வேண்டா தடையற்ற தெய்வத்தின் வார்த்தை இது சாதனை செய்க பராசக்தி" எனவும் கூறுவது கருதத்தக்கது. பாஞ்சாலி சபதத்தின் முடிவில் தேவர் ஓமென்றும் உரைத்தலும் வானம் ஓமென்று உறுமுதலும், பூமியதிர்ச்சி உண்டாதலும், சுழற்காற்று ஏற்படுத்தலும், ஐம்பூதங்களும் தருமனைப் போற்றுதலுமான நிகழ்ச்சிகள், ஆத்மீகம் சார்ந்த இலக்கியத்துக்குரிய அசாதாரணப் புனைந் துரைகள் என்பதை நாம் நினைவிற் புகுத்துதல் வேண்டும். கண்ணன் பாட்டிலும் பல இடங்களில் குறிப்பாகக் கண்ணன் என் தோழன், கண்ணன் என் தாய், கண்ணன் என் தந்தை, கண்ணன் என் சேவகன் முதலியவற்றில் பாரதியின் உள்ளத்தின் அடித்தளத்தில் ஊறிக்கிடந்த ஆத்மீகநேயத்தின் சிதறுதலைக் காணமுடிகின்றது. கண்ணம்மா எனது குலதெய்வம் என்ற பாடலில், "நல்லது தீயது நாமறியோம் அன்னை நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக!" என்ற அடிகள், பாரதியின் ஆத்மார்த்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றன. பாரதி தமது குயில் பாட்டின் இறுதியிலே கூறுவதும் நமது கவனத்துக்குரியது. "ஆன்ற தமிழ்ப் புலவீர்! கற்பனையே யானாலும் வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க சற்றே இடமிருந்தாற் கூறிரோ?" என்ற பாரதியின் குரலில், பாரதியின் குறும்புத்தனத்தோடு அவரது ஆத்மீக உள்ளடக்கத்தொனி தொங்கி நிற்கிறதல்லவா?

பாரதியின் இத்தகைய ஆத்மார்த்த உணர்வு, அவரது படைப்புக்களில் இடம்பெறும் இயற்கை சார்ந்த வருணனைகளிலும் இழையோடிக் காணப்படுகின்றது. பாஞ்சாலி சபதத்தில் வரும் அந்திமாலை வருணனை இதற்குத் தகுந்ததோர் உதாரணமாகும்.

"கணந்தோறும் ஒருபுதிய வண்ணங் காட்டிக்
காளிபரா சக்தியவள் களிக்குங் கோலம்
கணந்தோறும் அவள் பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்கு காண்பாய்"

"இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றைஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே
மொய்முழலாய் சுற்றுவதன் மொய்ம்பு காணாய்!"

என்றும்,

"உமைக்கவிதை செய்கின்றாள் எழுந்து நின்றே
உரைத்திடுவோம் பல்லாண்டு வாழ்க என்றே"

எனவும் கூறுமிடத்து, பாரதியின் அடிமனத்து ஈடுபாட்டை நாம் இனங்காண முடிகிறது.

பாரதியின் வசன கவிதைகள் அனைத்திலுமே தெய்வீகப் பேரழகின் பெருஞ்சாயல் படிந்திருப்பதை நாம் உணரலாம். உலகத்தின் பலத்தை, சிறப்பை பேரழகைத் தெய்வீகப் பின்னணியிற் கண்டு காட்டும் பாரதியின் ஒருவகை முயற்சியே அவரது வசன கவிதைகள் எனலாம். சகலவற்றையும் தெய்வமாகவே கண்டு தெளிவதில் பாரதிக்கு ஒரு அபார ஆசை இருந்திருக்கிறது. அவரது வசன கவிதையின் ஒரு பகுதி இதனைத் தெளிவிக்கின்றது.

"மனம் தெய்வம், சித்தம் தெய்வம், உயிர் தெய்வம்,
காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம். நீர், காற்று,
தீ, வான்,
ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் - எல்லாம்
தெய்வங்கள்"

பாரதியின் சித்தத்தின் போக்கு இங்கே தெரிகின்றது.

பாரதியின் கவிதைகள் மாத்திரமின்றி, அவர் எழுதிய உரைநடைப் பகுதிகளும் அவர் பற்றிய ஆய்வுக்கு முக்கியமானவை. இவ்வகையில், அவரது சித்தத்தின் தெளிவும், நோக்கும் துலாம்பரமாகின்றன. பாரதியின் சித்தக்கடல் என்ற உரைநடைப்பகுதி ஒருவகையில் அவரது நாட்குறிப்பைப் போன்றது. அதில் அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

"பராசக்தியின் கட்டளைப்படி உலகம் நடக்கிறது
உனக்கு வேண்டிய இன்பங்களை அவளிடம்
வேண்டிக்கொள். அவள் கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு சுகமாக இரு"

ஞானரதம் என்ற உரை நடைப்பகுதியில் ஆத்மார்த்த விடயங்கள் குறித்துப் பாரதியின் சிந்தனைகளின் சிதறல்களைக் காணலாம். இந்தியாவின் அடிப்படைப் பெருமையே ஆத்மார்த்த அனுபவத்திலேயே அடங்கிக்கிடக்கிறது என்பது பாரதியின் உறுதியான கருதுகோள் எனல்

வேண்டும். ஞானரதத்தில் இடம்பெறும் ஒரு பகுதியை இதற்கு ஒரு சோற்றுப் பதமாகக் கொள்ளலாம்.

"எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவின்
நெஞ்சில் வேதாந்தக் கொள்கை ஊறிக்கிடக்கிறது.
இந்த வேதாந்தம் லௌகிகமான அனுஷ்டானத்தில் பரிபூரணமான ஷம்பூர்ணமான
ஸமத்துவம் ஏற்படுத்தம் இயல்புடையது"

இந்தியாவின் ஆத்மா ஆத்மீகத்துறையிலேயே தங்கியுள்ளது என்பதைப் பாரதி கருதிவந்துள்ளார் என்பதை அவரது மேற்கண்ட கருத்து தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது. அத்தோடு,

"தெய்வ விதிக்குப் பரிபூரணமாக உட்பட்டு,
சாஸ்திர விதிகளையும் நாட்டு விதிகளையும் மேன்மேலும் புத்திசாலித்தனமாகச்
சீர்த்திருத்திக்கொண்டு வந்தால், மனுஷ்ய ஜாதிக்கு சேஷமமுண்டாகும்"

என்ற தமது நோக்கத்தையும் பாரதி ஞானரதத்தில் வெளிப்பிடுத்தியுள்ளார்.

உலகியல் ரீதியாகப் பாரதி நம்பிக்கை உணர்வு நிரம்பப் பெற்ற பெருங்கவிஞர். உலகியல் வாழ்வின் துன்பங்கள் தொலைந்து, நன்மைகள் பெறவேண்டுமென்ற பாரதியின் உள்ளத்து நம்பிக்கையும் ஆத்மீக அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இதனைப் பின்வரும் அவரது கூற்று நிலைநிறுத்துகின்றது.

"துன்பமே இயற்கை யெனும்
சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம்
யாவும் அவள் தருவாள்"

கலாநிதி **துரை. மனோகரன,**
தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# பொலநறுவைக் கால வெண்கலப் படிமங்கள்
# அப்பர் படிமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறிப்பு

அநுராதபுர காலத்தை அடுத்து இலங்கையின் பிரதான இராசதானியாக விளங்கிய இடம் பொலநறுவையாகும். மூன்றாம் அக்போதி மன்னன் இப்பகுதியினை இராசதானி ஆக்கி கி.பி. 628 முதல் ஆண்டு வந்தான். பத்தாம் நூற்றாண்டில் சோழப்பெரு மன்னர்கள் ஈழநாட்டின் வட பகுதியையும், பொலநறுவையையும் கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அதற்கு ஜனநாத மங்கலம் எனப் பெயரிட்டனர். தமது மும்முடிச் சோழ மண்டல நிர்வாகப் பிரிவின் இப்பகுதியினைக் கொண்டு வந்தனர்.

சோழப் பெரு மன்னர்கள் தமது நிர்வாகத்தின் பொருட்டு பிரதானிகள், படைவீரர்கள், அந்தணர்கள் பல்வேறு தொழிலாளர்கள் முதலானோர்களை இங்கு குடியமர்த்தினர். இதனால் அவர்களின் வழிபாட்டின் பொருட்டு பல்வேறு ஆலயங்களை அமைத்தனர். அவற்றுள் ஏழு சிவன் கோயில்களும் ஐந்து விஷ்ணு கோயில்களும் இன்று இனங்காணப்பட்டுள்ளன. அக்கோயில்கள் சுற்றுப் பிரகாரங்களையும் அவற்றினிடையே பல பரிவாக தேவ கோட்டங்களையும் கொண்டனவாக அமைந்திருந்தன. அவை பல எழுந்தருளி விக்கிரங்களைக் கொண்டு மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களாகவும் அமைந்திருந்தன. சோழராட்சியின் பின் அவ்வாலயங்கள் அழிபாடடைந்த நிலையில் தொல்பொருள் சின்னங்களாக அமைந்தன. இங்கு கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களும், படிமங்களும் இதனை உறுதிபடுத்துவனவாக அமைந்துள்ளன. இத்தகை சிற்பங்களும் படிமங்களும் சிவன், உமை, விஷ்ணு, கணபதி குமரக்கடவுள், அடியார்கள் வடிவங்கள் சப்தமாதர்கள் என்னும் வகையில் காணப்படுகின்றன.

இங்கு ஏழு நடராசப் படிமங்களும், வடுகபைரவமூர்த்தம் ஒன்றும் (1) நாலு (4) சோமஸ்கந்தப் படிமங்களும் (09) உமையின் படிமங்களும் ஒரு (1) கணபதியின் படிமமும் சமயகுரவர் அப்பரது படிமங்கள் இரண்டும் (2) ஞானசம்மந்தரின் படிமம் ஒன்றும் (1) சுந்தரமூர்த்தி நாயனார் படிமங்கள் மூன்றும் (3) மாணிக்கவாசகர் படிமம் ஒன்றும் (1) காரைக்கால் அம்மையார் படிமம் ஒன்றும் (1) சண்டேஸ்வரர் படிமம் இரண்டும் (2) இலட்சுமி ஒன்றும் (1) கிடைக்கப்பெற்றுள்ளன.

எமக்குக் கிடைக்கும் நாயன்மார் படிமங்களும் அப்பரின் படிமத்தினை கலா விமர்சன நோக்கில் ஆராய்வோம்.

சைவமும், சைவசித்தாந்தமும் திருத்தொண்டு செய்து வழிபட்ட அடியார் பக்தியினை ஒரு சாதனையின் பாற்பட்டதென்றே கொள்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார், பத்தனை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்வதிலும் அதன் சாதனையையும் பயனையும் விளக்குவதிலும் பெரும் பங்கு வகித்தார். அவர் திருத்தொண்டர் தொகையைப்பாடி அறுபத்தி மூன்று நாயன்மார்களின் சிறப்புக்களை வெளிப்படுத்தி மக்களை ஆற்றுப்படுத்தினார். அதில் அப்பரை பாடும் பொழுது,

"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட
திருநாவுக் கரையன் தன் அடியார்க்கும் அடியேன்"

எனப்பாடுவதும் அப்பரின் சாதனை நிலையையும், அச்சாதனை நிலையில் சுந்தரர் கொண்டிருந்த பக்தியினையும் ஈடுபாட்டினையும் புலப்படுத்தி நிற்கும்.

பல்லவ காலத்தில் இறைவனின் இருப்பையும் அவனது தொழிற்பாட்டையும் உலகிற்கு உணர்த்தியவர் அப்பர். அவர் இறைவன் "இறைவன் சிவமாக்கித் தன்னை ஆள வேண்டும்" என்னும் இலட்சியத்துடன் "நாமார்க்கும் குடியெல்லாம்" என்னும் துறவு நோக்குடன் வாழ்ந்தவர். தமிழோடு இசைபாடுதலையும் உழவாரத்தொண்டினையும் தனது சாதனமாகக் கொண்டு ஒரு பக்தி இயக்கத்தை நடத்தினார். அதன் மூலம் மக்களை இறைவன் பால் ஆற்றுப்படுத்தினார். அவர் சாலோக முத்தியினைப் பெற்றார்.

வேதாகமங்களைக் காட்டிலும் இறைவனுக்கு மிகுந்த பிரிவுடைய தேவாரங்களைப் பாடி இறை இருப்பையே வெளிப்படுத்தியவர். இதன் மூலம் தேவாரங்களை இறைவனின் மொழி என நிருபித்தார். ஆலயங்களில் இறைவன் உறைந்திருந்து அருள்பாலிப்பவன் என்பதை செயலில் காட்டியவர். அற்புதங்களை நிகழ்த்தியவர். அற்புதங்கள் நிகழக் கருவியாக இருந்தவர். மன்னர்களதும் மக்களதும் மனதைக் கவர்ந்தவர். சைவம் வளரத் தன்னை அர்ப்பணித்தவர். இத்தகைய இறையாளனை பாடுவதும் பணிவதும் போற்றுவதும் சைவர் பணி என்பதை உணர்ந்து பல்லவர் காலத்திலே மடங்களும் பந்தல்களும் தோன்றின. சோழர் காலத்தில் அப்பர் திருவுருவம் படிமங்களாகவும் சிற்பங்களாகவும் செதுக்கப்பட்டன.

## படிமங்களும் - அடியார் படிமங்களும்

பக்தி நிலைப்பட்ட அடியவர்களின் உருவங்களை அமைப்பதற்கு சிற்ப சாஸ்த்திர நூல்களிலே விதி காணப்படவில்லை என்பர். கலை விமர்சகர்களாயினும் இவற்றைப் படைத்தவருக்குரிய சாதனை பின்வருமாறு புலப்படுத்துவர்.

(1) மனித சமுதாயத்திற்கு நல்வழி காட்டி அதனை மேம்பாடடையச் செய்த பெரியோர்கள், மற்றும் தத்துவ ஞானிகள், துறவிகள் சமயக்குரவர்கள், புலவர்கள், கலைஞாகள், பேரறிஞாகள், பேரரசர்கள், முதலியோர் வணக்கத்துக்குரியவர்கள். இத்தகைய பெரியோர்களின் உருவங்கள் தமது சிற்பக்கலை மரபில் தனித்தொரு முறையிலே இயற்றப்படுகின்றன. மனிதர் தம் உயர்வுக்கு உடலன்றி உள்ளமும் பெரும் காரணமாகையால் மனித வடிவத்தின் புறத்தோற்றத்தை விடுத்து குறிப்பிட்டதொரு மனிதனின் குணநலன்களையே செய்யப்படு வடிவத்தில் உணர்த்தியும் விளக்கியும் காட்டுவதே மரபு.

இன்னும் சிறிது விரிவாகக் கூறினால், குறிப்பிட்ட பெரியவரின் இனம், தொழில், நலன்கள், ஆற்றல் அவர் தம் வாழ்க்கை இலட்சியம், சேவை ஆகியவை வடிவத்தின் மூலமாக கலைநயத்தோடு சித்தரித்துக் காட்டப்பெறும். இதனையே அழகென்பர். இன்று நாம் காணும் புத்தர் படிமத்தின் வடிவழகு புத்தரின் இயற்கையான புற அழகல்ல. அஃது யாதெனின்

புத்தர் தம் அகவழகின் புறத்தோற்றமே. மேலும் மனிதனை மனிதராகவே காட்டுதல் வேண்டுமேயன்றி, கடவுட் படிமங்களில் காணப்படும் கலையுத்திகளை இத்தகைய உருவங்களில் புகுத்துவதில்லை.

இவ்வடிப்படையில் தான் சைவ, வைணவ சமய குரவர்களின் படிமங்களையும் புத்தர் போன்ற மதத் தலைவர்களின் படிமங்களையும், அகத்தியர், தொல்காப்பியர் போன்ற நூலாசிரியர் படிமங்களையும் சிறப்பு வாய்ந்த ஆண்,பெண் பாலோரின் படிமங்களையும் இயற்றுதல் வேண்டும்.

அத்தகைய கருத்தை ஆதாரமாகக் கொண்டே சிவனடியார்கள், திருமால் அடியார் ஆகியோரின் படிமங்களையும் செய்வதற்குரிய இலக்கணங்களையும் அளவு முறைகளையும் ஆகம நூல்களே வகுத்து நோக்குகின்றன. (சிற்பச் செந்நூல் பக்.203)

சிவனடியார் படிமங்கள் பின்வரும் அடிப்படையில் படைக்கப்படல் வேண்டும். இறைவனின் அடைந்த மெய்யடியார்களின் முத்தி நிலையை மனங்கொண்டு அப்படிமங்களை படைத்தல் வேண்டும். இம் முத்தி நிலைகள் நான்கு வகைப்படும்.

1. சாலோகியம்
2. சாமீபம்
3. சாரூபம்
4. சாயுஜ்யம்

மேற்கூறப்பட்ட நான்கு நிலைகளைக் கருத்தில் கொண்டு, அடியவர் வரலாற்றினை நன்கு மனங்கொண்டு, அவரவர்க்குரிய நிலையினை உணர்ந்து, தொழில் வகைக் கருவிகளையும் அவரவர்க்குரிய சின்னமாக அளித்து, இவர் தம் படிமங்களை இயற்றுதல் வேண்டும்.

மேற்கண்டவற்றை அடிப்படையாகக் கொண்டு அடியவர்களின் படிமங்களை பின்வரும் தாள அமைப்பிற்கு ஏற்றவாறு படைக்கப்பட வேண்டுமென்று சிற்ப நூல் குறிப்பிடும்.

1. சாலோக்கிய படிமமும் உத்தம நவதாளத்திலும்
2. சாமீயப்படிமமும் அதம தச தாளத்திலும்
3. சாரூபய படிமமும் மத்திம தச தாளத்திலும்
4. சாயுச்சிய படிமமும் உத்ததக தாளத்திலும்

படைக்கப்பட வேண்டும்.

## வார்ப்பு முறை

பொதுவாக படிமங்களைச் சிற்பியானவன் வடிக்கும் பொழுது அவன் தான் எடுத்துக் கொண்ட படிமத்துக்கு அமைவாக தியானத்தில் ஈடுபட வேண்டும் என்றும் அப்பொழுது தியானமந்திரங்களை உச்சரிக்க வேண்டும் என்றும் சிற்ப நூல்கள் குறிப்பிடும் மெய்யடியவர்கள் இறைவனைக் கண்டவர்கள். இறைவனோடு உறைபவர்கள், இறைவனைப் போன்றவர்கள்

எனவே மெய்யடியார்களை படைப்பது ஒரு சாதாரண மனிதர்களுமல்ல இறைவன் பற்றிய தியான மந்திரங்களும் போதுமானதாயில்லை. ஆயினும் இறைவனது திருவுருவங்களின் பெருமையை நினைத்து, அவர் வசமாகித் தமது மெய் மறந்து நின்ற நிலையை குறிக்கும் வகையில் குறிப்பாக வாக்கினாலும் எழுத்தினாலும் உணர்த்தற்குரிய அப் பேரின்ப நிலையினை பேரறிவுடையாரெவரும் உணர்ந்து இன்புறுமாறு இத்திருவுருவம் அமைக்கப்பட வேண்டும் என்பர் கலை மரபினர். அதற்கு எடுத்துக் காட்டாக பின்வரும் பாடல்களையும் அது போன்றவற்றையும் எடுத்துரைப்பர்.


"ஐந்துபேர் அறிவுங் கண்களே கொள்ள
அளப் பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்"

*(சேக்கிழார் பெரிய புராணம் தடுத்தார் கொண்ட புராணம் 106)*

## அளவைப்பிரமாணம்

அப்பர் உழவாரத் தொண்டினையும் யாத்திரையையும் மேற்கொண்டு சாலோக முத்தி அடைந்தார் என்பது சமய நூல் மரபு அவ்வகையில் அப்பரின் படிமம் உத்தம நவதளத்தில் படைக்கப்பட வேண்டும் என்பது சிற்ப நூல் மரபு உத்தமகலதாளம் பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| உச்சம் தலை | 1.0" |
| முடி இறுதிவரை | 3.0" |
| கண்மட்டம் | 4.0" |
| மூக்குப்புடைமட்டம் | 4 0" |
| மேவாய் மட்டம் | 4.0" |
| தாடை | 0.4" |
| கழுத்து மட்டம் | 3.4" |
| மார்பு மட்டம் | 12.0" |
| தொப்புழ் மட்டம் | 12.0" |
| குறிமட்டம் | 12.0" |
| தொடை நீளம் | 24.0" |
| முழங்கால் நீட்டு | 4.0" |
| முழங்கால் நீளம் | 24.0" |
| தாள் | 4.0" |
| | **112.0"** |



## பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட அப்பரின் படிமம் பற்றிய இலட்சணங்கள்,

இதன் உயரம் 1 அடி 7 அங்குலம் இப்படிமம் பத்திராசனமாகிய பீடத்திலுள்ள பத்மாசனத்தின் மேல் அதியங்க நிலையில் கால்கள் மெலிந்தவையாய் இவை சற்றே விரித்து கைகளில் உழவாரப்படையேந்தி அதனை இடத்தோழுடன் இணைத்துக் கொண்டும் நிற்கும் ஸ்தான கோலத்திலுள்ளார்.

உடல் மெலிந்து கைகள் சுருக்கி, இரு முழங்கைகளில் அம்ச மாலையையும் கழுத்தில் ஆரமும் இரு அட்ச மாலையும் தரிப்பவராய், தலையில் மாலையை அணிந்தவராய், தோல்கள் அற்ற நீண்ட காதுகளைக் கொண்டவராய், மரவுரி ஆடை தரித்தவராய், அரைப்படிகை போன்ற அணிகலன் தரித்தவராய், கூப்பியகரமும், அரைப் பட்டிகை இறைநாட்டமும் உடைய பதியாளராய், ஞானியாய் அவர் தோற்றம் காட்சி அளிக்கின்றது.

இப்படிமம் சோழர்காலத்தில் எழுந்த ஒப்பற்ற வெண்கலப் படிமங்களில் ஒன்றாகவும், ஈழநாட்டில் வெண்கல படிமங்களுள்ளொன்றாகவும் ஈழநாட்டின் வெண்கலப் படிம வரலாற்றில் தலைசிறந்த வெண்கலப் படிமமாகவும், கலாவிமர்சகர்களால் போற்றப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது..

இப்படிமம் சோழர் காலத்தில் சிற்பங்களின் கலை உணர்வையும், ஆற்றலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அத்துடன் சோழர் கால வெண்கலக் கலைப் படைப்புக்களுள் சிறந்ததொன்றாகவும், ஈழநாட்டில் காணப்படும் தலை சிறந்த வெண்கலப் படிமங்களில் ஒன்றாகவும் விளங்கி, தமிழர் பண்பாட்டினதும் சைவ, சைவசித்தாந்தத்தினது இருப்பையும், நிலைப்பேற்றையும் உறுதிப்படுத்தி நிற்கின்றது எனலாம்.

பேராசிரியர் **இரா. வை. கனகரத்தினம்,**
தமிழ்த்துறை, (இந்துப்பண்பாடு)
பேராதனைப்பல்கலைக்கழகம்,
பேராதனை.

# படைப்பியல்

அருணகிரி நாதர் உருகிப் புகழ்பாட
திருவடி தந்தனன் தீந்தமிழ் உண்டனன்
கருணைவ டிவழகன் கலியுக வரதனாம்
குருவடி வானவன் கொஞ்சு தமிழ்ப்பருகக்

- ந. வீரமணி ஐயர் -

# குன்றத்து வேலனே குறிஞ்சிக் குமரா!

வண்ணமலர்ப் பாதங்கள் வணங்கிடும் அடியார்க்குத்
திண்ணமாய் அருள்தந்து திகழ்ந்திடும் வேலவனே!
எண்ணத்தில் நித்தமும் உருகிடும் பக்தர்களை
கண்ணுக்குள் இமைபோலக் காத்திடும் நாயகனே!

குறிஞ்சியின் எழில் மலையில் கொலுவிருக்கும் குமரனே
நிரந்தரமான இன்பம் உரைத்திடும் காவலனே
வரந்தரும் இறைவனாய் மயில்மிசை முருகனே
வழிதரும் கடவுளே வழிகாட்டு வாழ்விலே...!

மகாவலியின் சலசலப்பில் மகிழ்ந்திடும் பேராதனையில்
மலையினில் உறைந்திருந்து நீ செய்யும் அற்புதங்கள்
உலாவரும் கோலத்தில் கண்குளிர அருள்புரியும்
உனது திருவுருவம் உரைத்திடும் சொற்பொருள்கள்..!

வள்ளியோடு தெய்வானை வடிவழகு முருகனுடன்
துள்ளிவரும் அடியாரின் துயர் துடைத்து அருள்கொடுக்க
அள்ளியே பொருள் வழங்கும் அன்பர்களின் கருணையினால்
வெள்ளிமயில் வேலனாய் வீற்றிருக்கும் குறிஞ்சிக்குமரனே...!

அளவை கலைக்கரன்
**எஸ். சுதாகரன்,**
மூன்றாம் வருடம்,
பொறியியற் பீடம்.

# குறிஞ்சிக் கோலங்கள்

## விநாயகர்

ஓங்கு மலைக் கந்தானை பதியுறை
தாங்கரிதான மிறை மிடற்றிடும் தம்பி - கந்தனையே
மாங்கனி நீயென பகன்ற - மாவையம்
தாங்கும் வயிற்றினனே ஏற்பாய் இக்கவி

## நடேசர்

ஆத்தாள் இடம் சேர்த்து - கமலனய இடம்
பூத்தாளை தூக்கி நற்றொனி சேர் உடுக்கை
சேர்த்தாட்டி வருமொலி செவிசாய்த்து கூத்தாடும்
பார்போற்றும் மாத்தானே சரண் புகுந்தேன்

## உமையாள்

கள்வண்டுறை கார்குழலாள் அடிபணிந்தோர்
எள்மனம் கறையிற்சிக்குண்டு தவிதவித்து
தள்ளாடா வண்ணம் அள்ளி அருள் சொரியும்
கொள்ளப் பூவைத்தாள்சரண் உனக்கே

## திருமால்

மாலவனே கரியநிற தோல் சேர் காவலனே
நீலமாகடலுறையும் பாம்பணை பள்ளிகொண்ட
மாயவனே ஆயர் குல கொழுந்தாயுதித்த
சேயவனே உன்னையே என்னாவி சிந்திக்கவே

## குறிஞ்சியான்

முருகப்பா தருமப்பா உன் அருளை என் அருகப்பா
திருமால் மருகப்பா நீ கறுப்பா சிவப்பா - என்மேல்
அருவருப்பா தயையுடன் அருளப்பா உன் உருவப்பா - சற்றே
பருகப்பா நெருப்பாலுருகியானளிக்கும் இச்சருகுப்பா

வானினம் மலர்தூவ மாவினம் மங்களம் முழுங்க - மூன்றாம்
கீழினம் மருங்கு சேர்க்க ஆவினமும் துதிபோற்ற
பூவினம் பெருமைகொள்ளும் கார்குழலாள்
தேவகுஞ்சரி கரம் சேர்த்தாள் சுந்தரன் பால்

நினைப்புறத்தே காவல் செய்த மலைக்குறத்தி
வனப்புறத்தே மானினமிலை குறை தீர் - பூவை வள்ளி
முனை வேல் முருகன் மனம் பறித்தாள் காலத்தால்
மனைப்புறத்தே அணிசேர்த்தாள் முருகன் பதியே

**வேறு**

மஞ்சுதவழ் வெற்புமுனை உறைந்து
நெஞ்சு நிறை கொஞ்சி விளையாடும்

கெஞ்சுமடியவர் குறைக்கெல்லாம்
அஞ்சேல் என அபயமளிக்கும்

குறிஞ்சிச் சுந்தரனே சுபமிகயீவாய்
நெறிசெய்வாய் குவலயத்தை - உனை

அறிந்து சரண் புகுந்தோர் தமது
வறிதீர்ப்பாய் என்றென்றும் காலத்தே

சந்திரன் இந்திரன் வந்தனம் செய்ய
துந்துபி மேள மந்திரம் முழங்க
தஞ்சமென்றடியவர் நெஞ்சு விம்மி
குஞ்சர கணபதி வெந்துயர் கடிய
உமை நடராஜன் மங்கலம் செய்திட
மாலவன் கூடவே முருகு செய்திட
நவகோள் பைரவன் கூட இருந்து
சுந்தர முருகன் சுயாட்சி நடாத்தும்
நேராம் கலைப்பதியெம் - கண்டி
பேராதனை பள்ளி நீடு பெறவே

**வே. சனாதனன்,**
மூன்றாம் வருடம்,
பொறியிற்பீடம்.

# அருள் புரிவாய் கதிர்வேலா

இந்துமா சமுத்திரத்தின் நித்திலத்து இலங்கையிலே
மத்திமா நகரதனின் பேராதனை மண்ணில்
வந்துதித்த வேலவனே குறிஞ்சிவாழ் குமரேசா
தந்திடுவாய் உனதருளை சமாதானம் நிலைத்திடவே

வண்ணமயில் மீதினிலே வேல்முருகா நீயமர்ந்து
வள்ளியோடு தெய்வயானை அருகிருக்க நடுவமர்ந்து
கண்ணிமைக்கும் பொழுதினிலும் உன்னுருவம் நீ காட்டி
மண்ணுதித்த மாந்தர்களைக் காத்தருள்வாய் குகனேசா

அன்னை பராசக்தியவள் பெற்றெடுத்த உத்தமனே
அண்ணலுடன் மாங்கனிக்காய் போட்டியிட்ட வித்தகனே
குன்றின் மேலேறிக் குடியமர்ந்தாய் குமரா - நீ
என்றும் உன்சுடர் ஏற்றி அருள் புரிவாய் சிவபாலா

ஆறுமுகம் கொண்டே நீ அவதரித்தாய் வேல்முருகா
மாறுமுகம் கொண்டு வந்தே மணம்புரிந்தாய் வள்ளியை - நீ
ஏறுமயில் வாகனமாய் முருகா நீ வேல்தாங்கி
கூறுமடியார்கள் வினை தீர்த்திடுவாய் மால் மருகா

போர் என்ற சொல்கூட இனிவேண்டாம் நம்செவிக்கு
ஊர்விட்டு ஊர் சென்றே பட்டவினை போதுமப்பா
ஈரெட்டுத் திசையாவும் உன்னருளை நீ பரப்பி
பார் எங்கும் நலம்வாழ அருள் புரிவாய் கதிர்வேலா

**மாதங்கி பாலசுப்பிரமணியம்**
மூன்றாம் வருடம்,
விலங்கு மருத்துவ பீடம்.

# நாம் ஏன் விளக்கு ஏற்றுகின்றோம்?

பெரும்பாலான இந்து இல்லங்களில் தினமும் கடவுள் முன்னால் விளக்கு ஏற்றி வைக்கப்படுகின்றது. சில வீடுகளில் சந்தியா நேரங்களிலும் சில வீடுகளில் சூரிய உதயம் மற்றும் அஸ்தமன நேரங்களிலும் சில வீடுகளில் எந்தநேரமும் எரிந்து கொண்டிருக்கும். சில வீடுகளில் அகண்ட தீபமாகவும் ஏற்றப்படுகின்றது. எல்லா சுப நிகழ்ச்சிகளும் விளக்கேற்றிய பின்பே ஆரம்பிக்கப்படுகின்றன. அந்நிகழ்ச்சி முடியும்வரை அது எரிந்து கொண்டிருக்கும்.

ஒளி என்பது ஞானத்தையும், இருள் என்பது அஞ்ஞானத்தையும் குறிக்கின்றது. பகவான்என்பவர் "பரமஞானம்" அதன் மூலாதாரம் மற்றும் எல்லா விதமான ஞானத்தின் ஒளியும் ஆவார். ஆகையால் தீபத்தை இறைவனாக நினைத்து வணங்கப்படுகின்றது. ஒளி இருளை அகற்றுவதைப்போலவே ஞானம் அஞ்ஞானத்தை விலக்குகிறது. நம்முள் இருக்கும் பெரும் செல்வம் ஞானம். வெளியுலக வாழ்க்கையில் சாதனைகள் புரிய வைப்பதும் இதுவே. மிகச்சிறந்த செல்வமாகக் கருதி விளக்கேற்றுவதன் மூலம் ஞானத்திற்கு தலை வணங்குகிறோம்.

நாம் ஏன் மின்சார விளக்கை ஏற்றக்கூடாது? அதுவும் இருளை அகற்றுகின்றதே? ஏனெனில் நம்முடைய சம்பிரதாயமான எண்ணெய் ஊற்றி ஏற்றும் விளக்கிற்கு ஆன்மீகமாகவும் மேலும் சில சிறப்பு அம்சங்கள் உள்ளன. எண்ணெய் அல்லது நெய் நம்முடைய "வாசனாக்கள்" அல்லது எதிர்மறையான செயல்களைக் குறிக்கிறது. திரி என்பது அகங்காரத்தைக் குறிக்கிறது. ஆன்மீக ஞானத்தினால் விளக்கை ஏற்றும்போது "வாசனாக்கள்" மெதுவாகக் கரைந்து, இறுதியில் அகங்காரமும் எரிந்து விடுகிறது. தீபத்தின் ஒளியானது எப்போதும் மேல் நோக்கியே எரியும்.அதே போல் நாம் கற்கும் ஞானமும் நம்மை மேன்மேலும் உயரிய நோக்கத்திற்கு அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும்.

விளக்கை ஏற்றும்போது நாம் இவ்வாறு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

தீப ஜ்யோதி பரம்ரம்மா
தீப சர்வ தமோபஹ்ஹாஹ்ஹா
தீபேன சாத்தியதே சாரம் சந்த்யா
தீப நமோஸ்துதே

"சந்தியா வேளையில் ஒளியை நமஸ்கரிக்கின்றேன்"
"இந்த ஒளியே பரம ஞானம்"
"அஞ்ஞானம் என்னும் இருளை வாழ்வில் முன்னேற்றத்தை அளிப்பதும் இதுவே"

**ந. ஜசீவன்,**
முதலாம் வருடம்,
விலங்கு மருத்துவ பீடம்.

# மன்னிக்க வேண்டுகிறோம்

அனாதைகளுக்காக, அப்பாவிகளுக்காக, ஏழைகளுக்காக
உலகத்திலே வாழுகின்ற ஒரே ஒரு உயிரிக்கு,
நானாகிய உன் அடியாள் எழுதிக் கொள்வது;
எம் பாரம் சுமந்தாலும், நீ நலமாய் வாழ்கிறாய் என நம்புகிறோம்.
இங்கு மழை பெய்யாவிடினும், பூமியின் ஒவ்வொரு மூலைகளும்
நனைந்தபடியே தானிருக்கின்றது - இரத்தம், கண்ணீர், இரத்தக் கண்ணீர்த் துளிகளால்!
நீ எதிர்ப்பார்ப்பதெல்லாம்,
சிலை செதுக்கிப் பூமாலை சாத்தும் கரங்களையும்,
பாமாலை பாடும் உதடுகளையும் அல்ல;
பிறருக்கு உதவும் கரங்களையும்,
பிறர் சுமை சுமக்கும் தோள்களையுமே - என்பதை
மறந்தோர் இன்னும் இங்கு வாழத்தான் செய்கிறார்கள்!

மேலும்,
உலகத்தோர் சார்பாக ஒரு விண்ணப்பம் எழுதுகிறேன் - நீ
மன்னிப்பாய் என்ற நம்பிக்கையோடு!
நீ ஊன்றுகோல் தந்தபோதெல்லாம் இதுபோதாதென்று
சக்கர நாற்காலி கேட்டோம்!
சக்கர நாற்காலி தந்ததற்கு நன்றி சொல்ல மறந்துவிட்டு,
ஒற்றைப் பாதத்தையேனும் தரும்படிக் கோரினோம்.
ஒற்றைப் பாதம் கிடைத்தபோது இரட்டைப் பாதங்களும்
கொடுக்குமாறு வேண்டினோம்!
இரண்டு பாதங்களும் கிடைத்தபோது, காலில் மாட்டிக்கொள்ள பாதணி இல்லையே
எனப் பரிதவித்தோம்!
இன்று நடந்து போகத்தந்த பாதங்கள் போதாதென,
பறந்து போக இரு சிறகும் கேட்கின்றோம்;
ஒரு நாளில் கூட உன்படைப்பிலே நிறைவு காணவில்லைத் - தவிர,
குறைகளையே கண்டதற்கு ஒரு தடவை மன்னித்துவிடு இறைவா!
எப்படி வாழ்ந்தாலென்ன “இப்படியாவது வாழ்கிறோமே”

என்பதற்காக நன்றி சொல்ல மறந்துவிட்டோம்.
மனமிரங்கி மன்னித்துவிடு இறைவா!
எம்மைப் பற்றிச் சிந்திக்கும் உம்மைப் பற்றிச் சிந்திக்காது,
எம்மின் பாரங்கள் முழுவதையும் உம்மைச் சுமக்கச் செய்து
நாம் நிம்மதிப் பெருமூச்சு வாங்கியதற்கு ஒரு முறை
மன்னித்துவிடு இறைவா!
இப்போது மரணம் தந்தால் கூட மனப்பூர்வமாய்
ஏற்றுக்கொள்கிறோம்;

ஏனெனில், எம்மில் எவருக்கு, எதை, எப்போது. எங்கு தரவேண்டுமென்பதைத் திர்மானிக்கும் உரித்துடையவன் நீ மட்டுமன்றோ!

இப்படிக்கு உன் படைப்பில் வெளியாகி,
உலக மேடையில் அரங்கேறிக் கொண்டிருக்கும்,
'வாழ்க்கை' நாடகத்தின் கதாபாத்திரங்கள்.

**பெ. தேவப்பிரியானி**
விவசாய பீடம் (2003 / 2004),
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# அன்பின் நிலையது உயர்நிலை

குணம்குறி கடந்த என்றும் உள்ள சொல், எண்ணம், செயல் இவற்றைக்கடந்த பிரேம தத்துவமே அன்பு எனப்படும். அன்பானது அறிவு பூர்வமான பயிற்சியல்ல. மனோதத்துவமல்ல, கனவு நினைவில் பிரதிபலிப்பல்ல. இது எல்லா ஜீவராசிகளினுடைய உயிர்த்தத்துவம் ஆகும். அன்பை சொல்லாலும், பொருளாலும் வர்ணிக்க இயலாது. அன்பை விபரித்துரைக்கவோ இயலாது. அன்பிற்கு உருவமில்லை. அது செயற்படும் பொழுதுதான் அதை காணமுடியும்.

அன்பே கடவுள் தெய்வீக அன்பு முழுமையாக சுயநலமற்றது. அனைவருமே தெய்வீகப் பொறிகள் இறைவன் எல்லா உயிர்களையும் நேசிப்பதைப்போல் நாமும் எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும். அன்பிருக்கும் இடத்தில் அமைதி நிலவும். அமைதி உள்ள இடத்தில் சத்தியம் இருக்கிறது. சத்தியம் இருக்கும் இடத்தில் ஆனந்தம் இருக்கிறது. ஆனந்தம் இருக்கும் இடத்தில் இறைவன் இருக்கின்றான்.

இறைவன் எம்மீது பொழியும் அன்பு திருவருள் எனப்படும். நாம் இறைவன் மீது காட்டும் அன்பு பக்தி எனப்படும். உயிர்கள் மீது செலுத்தும் அன்பு இரக்கம் எனப்படும். எம்மிடத்தில் பக்தியும், இரக்கமும் இருந்தால் இறைவனின் திருவருளை பெற்று சிறப்புடன் வாழலாம். தூய உணர்ச்சியின்திறன் பக்தி எனப்படும். கடவுளுடைய மகிமை விளங்கும் அளவிற்கு அன்பு அல்லது பக்தி ஊற்றெடுக்கிறது. அன்புடைய உயிர் இறைவனிடம் கவரப்படும். அன்பு ஆனந்தமாக பரிணமிக்கின்றது. ஆனந்தமே பரமாத்மாவின் உருவம். ஆனந்தத்தை நாடியே உயிர்கள் வாழ்க்கையில் பற்று வைக்கின்றனர். அன்பு இல்லாவிட்டால் உயிர்கள் கணப்பொழுதும் வாழ்ந்திருக்கமாட்டாது.

அவதார புருஷர்களும், இறைதூதர்களும், ஞானிகளும், புலவர்களும் எல்லா உயிர்கள் மீதும் மிகுந்த அன்பு காட்டினார்கள். ஞாலத்தின் மீது அன்பு கொண்டவர்களே இன்று எல்லா உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். சூரியன் இருப்பதை சூரிய பிரகாசம் காட்டுகின்றது. அதுபோல் ஜீவன் உயிரோடு இருக்கின்றான் என்பதற்கு அவனுடைய அறிவே பிரமானம். கடவுள் பால் அன்பு கொள்ளும் அளவு நாம் கடவுளை அறிகின்றோம். அவரை அறியும் அளவிற்கு எமக்கு அன்பு அதிகரிக்கிறது. அத்தகைய அன்பே இன்ப ஊற்றாகும். உலகமோ கனதியானதாகும். இத்தகைய அன்பை எல்லா உயிர்கள் மீதும் பொழிந்து இவ்வையகத்தில் வாழ்வாங்குவாழ்வோமாக.

ஓம் இறைவா நீ எல்லையற்ற ஆற்றல் எனக்கு ஆற்றலைக்கொடு
நீ எல்லையற்ற வீர்யம் எனக்கு வீர்யத்தைக்கொடு
நீ எல்லையற்ற வலிமை எனக்கு வலிமையைக்கொடு
நீ எல்லையற்ற ஊக்கம் எனக்கு ஊக்கத்தைக் கொடு
நீ எல்லையற்ற வீரம் எனக்கு வீரத்தைக்கொடு
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆக்கம் : **சி. சிவசீலன்,**
விஞ்ஞான பீடம்.

# பதிவியல்

புகழைப்பாட புனிதன் வருவான்
புகழிலிடம் தந்து இகமதில் ஆள்வான்
திகழும் பேரா தனைப்பல் கலையில்
மலையி லமர்ந்து தமிழை மாந்தும்

- ந. வீரமணி ஐயர் -

# "குறிஞ்சிச்சாரல் 2005"

தொகுப்பு: **வி. மன்மதராஜன்**

குறிஞ்சிச்சாரல், பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினரால் 2005ம் ஆண்டு புதிய கதிரேசன் மண்டபத்தில் தீபாவளி (01.11.2005) தினத்தன்று மாலை 4.00 மணிக்கு வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது யாவரும் அறிந்ததே.

பல ஆசிரியர்களினதும், பல்கலைக்கழக மாணவர்களினதும் இடைவிடாத, ஒரு மாதத்திற்கு மேற்பட்ட முயற்சியால் குறிஞ்சிச்சாரல் கலாசாரக்கதம்ப நிகழ்ச்சி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலுகின்ற வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குமுகமாக சங்கீத நாட்டிய சங்கம், தமிழ்ச் சங்கம், இந்து மாணவர் சங்கங்களினால் ஒவ்வொரு வருடமும் மாறி மாறி நடாத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த வருடம் அந்தப்பொறுப்பு எமக்கு கிடைத்தது, குறிஞ்சிக்குமரன் அருள் என்றால் மிகையாகாது.

நிகழ்வுகள் மறைக்கப்படக்கூடாது என்பதற்காக அந்நிகழ்ச்சிகளின் நிழல்களை, கலாநிதி. மகேஸ்வரன் அவர்களின் விமர்சனத்துடன் "இந்து தருமம் 2005" வருடாந்த சஞ்சிகையில் பதிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உள்ளே வாருங்கள்.....

# கலைத்திட்டங்களுக்கு வெளியே... பட்டதாரி மாணவர்களின் ஆக்கத்திறன்

(பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் கொழும்பில் நடாத்திய குறிஞ்சிசாரல் பற்றிய சில அவதானிப்புகள்)

பொதுவாகப் பல்கலைக்கழக மாணவர் என்றால் பொதுவாக பாடத்திட்டங்களுடன் மட்டும் மடங்கிக் கிடப்பவர்கள்; சமூக ஊடாட்டம் குறைந்தவர்கள்; கலாசார விழுமியங்களை கணக்கெடுக்காதவர்கள் என்று கற்பிதமான கருத்து நிலை அண்மைக்காலங்களில் பொது மக்களிடத்திலே நிலவி வருகிறது. இவ்வாறான கற்பிதங்களை வெற்றுக்கோசங்கள் என மறுதலிக்கும் வகையில் அமைந்தது.பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் குறிஞ்சிச்சாரல்,

அன்று தீபாவளித்திருநாள் எனினும், கொழும்பு புதிய கதிரேசன் மண்டபம் பெரும்பாலும் நிறைந்திருந்தது. குறித்த நேரத்தில் விழா செல்வி. வை. யோகதர்சினியின் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. இதனைத்தொடர்ந்து "இராக வசந்தம்' என்ற பல்லிய நிகழ்ச்சி பார்வையாளர்களை அந்தச் சூழலுக்குள் ஆஹரர்சித்தது. தேர்ந்த வாத்தியக்கலைஞர்களுக்குரிய ஆளுமை அவர்களுடைய இராக வசந்தத்தில் வெளிப்பட்டது.

'விநாயகர் ஸ்துதி' என்ற பெயரில் இடம் பெற்ற வரவேற்பு நடனம் கண்ணிற்கும் செவிக்கும் விருந்தளித்தது. உண்மையில் நடனமாடிய நான்கு மாணவிகளும் பரதத்தை முறையாகப் பயின்று அரங்கேறியவர்கள். அதனால் பிசிறுதட்டாது அவர்களது நடனத்தில் இராக தாளம், பாவங்கள் சுத்தமாக அமைந்திருந்தன. தொடர்ந்த தமிழிசை என்ற மகுடத்தில் பாரதியார் பாடல்கள் இசைக்கப்பட்டன. பல்வேறு ராகமெட்டுக்களில் அமைந்த பாடல்களை உணர்வு பூர்வமாக நான்கு மாணவர்கள் இசைத்தனர்.

இதனையடுத்து நடந்த 'கணேஷ ஸ்தோத்திரம்' என்ற நடன நிகழ்ச்சி புத்தாக்க முயற்சிகளுக்கு உதாரணமாக விளங்கியது. ஆடலும், பாடலும் நட்டுவாங்கமும் நிகழ்ச்சிதன்மையுடையனவாக அமைந்தமை அவதானத்துக்குரியது. இதை நெறிப்படுத்திய உதவி விரிவுரையாளர் நா. மல்லிகா பாராட்டுக்குரியவர்.

'கழுகரசன் காதை' என்ற தலைப்பில் சடாயுவதம் என்ற மன்னார்ப்பாங்கு நாட்டுக்கூத்து நிக்ஷன் சொய்சாவின் நெறிப்படுத்தலில் ஆடப்பட்டது. பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் ஆடலிலும், பாடலிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சினர். குறிப்பாகச் சீதையாக ஆடிய கிருஷ்ணப்பிரியா சடாயுவாக ஆடிய எஸ். குககுமரன் இராமனான எஸ்.சுதாகரன், இராவணனாக ஆடிய இ.சதீஸ்கரன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். உண்மையில் இவர்கள் பல்கலைக்கழக மாணவர்களாக அன்றி தேர்ந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்களாகவே தம்மை இனங்காட்டினர். பிற்பாட்டுப்பாடியவர்களுக்கும், பக்கவாத்தியம் இசைத்தவர்களுக்கும் ஒரு சபாஷ்!

தாளக்கட்டுக்கேற்றவகையிலும், உணர்வுகளுக்கேற்ற வகையிலும் அவர்கள் கூத்துடன் இணைந்து போனதும் பார்வையாளரைப் பரவசமடையச் செய்தன.

குறிஞ்சிச்சாரலில் உச்ச நிகழ்ச்சியாக மேடையேறியது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் மா. ரூபவதனனின், 'மெல்லித்தமிழ் இனி.....' என்ற சமூக, அரசியல் விமர்சன நாடகம்.

இந்நாடகம் கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமிடையே நடத்திய நாடகப்போட்டியில் முதற்பரிசினைத் தட்டிக்கொண்டது. சிறந்த நெறியாளருக்கான விருதினையும் மா. ரூபவதனனுக்குப் பெற்றுக்கொடுத்தது.

இன்றைய தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கின்ற அரசியல் அவலங்களையும், இளைஞர்களின் சமூகப் பொறுப்புகளையும், ஆதிக்ககாரர்களின் அடாவடித்தனங்களையும் அனுதாபத்துடன் பார்த்து குறியீட்டுப்பாங்கில் முன்வைக்கின்றது. மெல்லத்தமிழ் இனி...' நாடகம். 'கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை கருகத்திருவுளமோ'' என்ற பாரதி பாடலை பார்வையாளர் ஒவ்வொருவர் மனதிலும் மீட்டவைத்தது இந்நாடகம்.

இதில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருமே தமக்கு வழங்கப்பட்ட பாத்திரங்களின் கனதியை உணர்ந்து நடித்தனர். குறிப்பாக முதியவராக நடித்த க.காண்டீபன் தாயாக வந்த சந்திரகுமாரி, தாதியாக கலக்கிய த.ஜெரினா, மகளாக வந்த த. அனுஷா ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். பின்னணி இசை பொருந்தமான இடங்களில் சோகத்தை மனதுள் அப்பியது. நெறியாளர் மா.ரூபவதனன் கவனத்துக்குள்ளாகும் நெறியாளராக மேற்கிளம்புகிறார்.

வெறுமனே சாஸ்திரீய சம்பிரதாயங்களில் மாத்திரம் நாங்கள் ஆளுமையுடையவர்கள் அல்ல, நவீனத்துவமும் நாங்கள் அறிவோம் என்ற வகையிலும் கொழும்பு இரசிகர்களைச் சோரவிடாததாயும் அமைந்தது, மேலைத்தேச இசைநிகழ்ச்சி. இன்றைய தமிழ்ச் சினிமா உலகில் கோலோச்சுகின்ற இசையமைப்பாளர்களது ஜனரஞ்சகமான பாடல்கள் ஒரு தெரிவுமுறையில் நிதானமாகப் பாடப்பட்டமை பாராட்டுக்குரியது.

இவ்விடத்தில் இந்நிகழ்ச்சிக்கான பின்னணி இசை வழங்கியோரின் பங்களிப்பையும் திறனையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்நிகழ்ச்சியை நெறிப்படுத்திய காண்டீபன், சந்தீப் குருஸ் உள்ளிட்ட பின்னணி இசைக்கலைஞர்களுக்கும், பாடகர்களுக்கும் இசைத்துறையிலும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு.

மேற்குறித்த நிகழ்ச்சிகளுக்கும் புறம்பாக இந்து மாணவர் சங்கத் தலைவர் நந்தகுமார் தலைமையிலும், பிரதம அதிதி (மாவட்ட நீதிபதி - வவுனியா) திரு. இளஞ்செழியனின் முன்னணியில் கலாநிதி. வ. மகேஸ்வரனின் குறிப்புரையுடன் பேராதனைப் பல்கலைக்கழகக்

குறிஞ்சிக்குமரன் கோவிலில் கடந்த இரண்டு தசாப்தங்களாகப் பிரதமகுருவாகக் கடமையாற்றிவரும் சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்களின் இறைபணியைப் பாராட்டி 'குறிஞ்சிக்குமர சேவா சிரோன்மணி' என்ற பட்டம் அளித்தும் இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர் கலாநிதி செ.திருச்செல்வம் அவர்களால் பொற்கிளி வழங்கியும், பெரும் பொருளாளர் திரு. சிவராஜசிங்கம் பொன்னாடைபோர்த்தியும் கௌரவிக்கப்பட்டார். உண்மையில் பட்டதாரி மாணவர்களுடைய மனோவியல்பு, விழுமியங்களைப் பேணுதல், பெரியோரை மதித்தல் முதலான பண்புகளில் சிகரமாக இந் நிகழ்ச்சி அமைந்தது.

ஒன்றைக் கூற மறந்துவிட்டேன். பல இளம் அறிவிப்பாளர்களை இந்நிகழ்ச்சி எமக்கு அறிமுகப்படுத்தியது. தமது குரல் வளத்தாலும், விடய ஞானத்தாலும் சந்தர்ப்பத்துக்கேற்பச் செயற்பட்டு ஆண்களும், பெண்களுமாய் மேடையேறி இந்நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தினர். இதுகூட ஒருவகையில் அவர்களுக்குப் பயிற்சிக்களமே.


விரிவுரை மண்டபங்கள், பாடக்குறிப்புக்கள், பரிசோதனைக் கூடங்கள், பயிற்சிப்பட்டறைகள், பரீட்சைகள், ஒப்படைகள் என்ற முழு நேர கல்விசார் நிகழ்ச்சிகளைத் தம்முள் உள்வாங்கிக் கொண்டு எங்களாலும் ஆடுதல், பாடுதல், சித்திரம், கவி ஆயகலைகளில் ஈடுபட்டு என்றும் உழைக்கமுடியும் என்ற மாணவ உத்வேகத்தின் வெளிப்படை இந்நிகழ்ச்சியில் காணமுடிந்தது.

பேராதனை என்ற பல பீடங்கள், மாணவ விடுதிகள் கொண்ட பல்கலைக்கழகம் தமிழ் சமூகத்தைக் கல்விகள் செயற்பாடுகளிலும் புறம்பாக ஒன்றிணைக்கும் சக்தி கொண்டது, என்ற தத்துவத்தை மாணவர்களின் கூட்டு முயற்சியாக நடந்த விழா பார்வையாளருக்கு மேலதிக செய்தியைச் சொல்லாமல் சொல்லிற்று. உண்மையில் 'குறிஞ்சிச்சாரல்' பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் ஆத்மபலம், ஆளுமைப்பலம் கூட்டுப்பண்பு.

கலாநிதி. **வ. மகேஸ்வரன்.**



அழகாக அலங்கரிக்கப்பட்ட கோலம்




பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட நீதிபதி மா.இளஞ்செழியன் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.




குறிஞ்சிக் குமரன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா.நித்தியானந்தக் குருக்கள் அவர்களுக்கு வைத்திய கலாநிதி சிவஞானம் அவர்கள் பொன்னாடை போர்த்துதல்.



ஆலயப்பிரதம குரு கௌரவித்து வழங்கப்பட்ட சின்னத்துடன்



"மெல்லத் தமிழ் இனி......." நாடகத்திலிருந்து சில காட்சிகள்





“கழுகரசன் காதை” கூத்து நிகழ்ச்சியிலிருந்து சில காட்சிகள்





சந்தீப் குருஸ், பா.காண்டீபன் அவர்களின் நெறியாள்கையின் கீழ் இசைக்கப்பட்ட மேலைத்தேய இசை நிகழ்ச்சியிலிருந்து சில காட்சிகள்



# இந்து மாணவர் சங்க செயற்குழு
# 2004 / 2005

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | கலாநிதி செ. திருச்செல்வம் |
| பெரும் பொருளாளர் | : | திரு. செ. சிவராஜசிங்கம் |
| தலைவர் | : | செல்வன். ப. தயாபரன் |
| உபதலைவர் | : | செல்வன் சி. சிவசீலன் |
| இணைச்செயலாளர்கள் | : | செல்வன் மு. பிரதீபன்<br>செல்வி த. கேமா |
| இளம் பொருளாளர் | : | செல்வன் இ. சதீஸ்வரன் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன் சி. சுதர்சன்<br>செல்வன் சி. சிவகாந்தன் |
| பண்டகமுகாமையாளர் | : | செல்வன் ம. ஐங்கரன் |
| நூலகர் | : | செல்வன் ந. நந்தகுமார் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் எஸ். சுதாகரன்<br>செல்வன் சி. சிவரூபன்<br>செல்வன் மு. ரட்ணகுமார்<br>செல்வன் வி. சந்திரமோகன்<br>செல்வன் ச. பாலகுமார்<br>செல்வி து. சர்மிளா<br>செல்வி பா. பிரேமினி<br>செல்வி த. தர்ஷினி |

# இந்து மாணவர் சங்க செயற்குழு
# 2005 / 2006

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | கலாநிதி செ. திருச்செல்வம் |
| பெரும் பொருளாளர் | : | திரு. செ. சிவராஜசிங்கம் |
| தலைவர் | : | செல்வன். தெ. நந்தகுமார் |
| உபதலைவர் | : | செல்வன் பி. கஜமுகன் |
| இணைச்செயலாளர்கள் | : | செல்வன் வே. சனாதனன்<br>செல்வி ஆ. மல்லிகா |
| இளம் பொருளாளர் | : | செல்வன் பா. தயான் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன் வி. மன்மதராஜன்<br>செல்வன் கு. சாந்தகுமாரன் |
| பண்டகமுகாமையாளர் | : | செல்வன் ந. சங்கர் |
| நூலகர் | : | செல்வன் ப. சசிகரன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் தி. ஜெயந்தன்<br>செல்வன் சி. சிவகுமார்<br>செல்வன் யோ. தனஞ்செயன்<br>செல்வன் அ. செந்தில்குமரன்<br>செல்வன் ந. சிவதீபன்<br>செல்வி ந. ஸ்ரீதேவி<br>செல்வி க. கவிதா<br>செல்வி பா. மாதங்கி |

# UNIVERSITY OF PERDENIYA

## HINDU STUNDENTS' UNION COMMITTEE - 2005



Row 1 (L/R) :- Ms.A.Mallika, Mr.P.Kajamugan, Mr.S.Sivarajasinkam(Snr/Treasurer), Prof.Kapila.J.A.Goonasekara(Vice Chancellor), Dr.S.Thiruchchelvam(Snr/President), Mr.T.Nanthakumar, Mr.V.Sanathanan.

Row 2 (L/R) :- Mr.K.SanathaKumaran, Ms.N.Sridevi, Mr.P.Sasikaran,Mr.Y.Thanancheyan, Mr S. Sivakumar, Mr N. Sivatheepan, Mr B. Thayan, Mr.Mokanajeeve,Mr B. Manmatharajan, Mr G. Jeyanathan, Mr N. Sangar

Non Present Members :-Dr. V. Sivakumar (Honorary Auditor), Mr S. Senthilaumaran, Ms K. Kavitha, Ms B. Mathangi

# பொறுப்பாண்மைக் குழு

# 2005 / 2006

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பேராசிரியர் சிவயோகநாதன் |
| பொதுச் செயலாளர் | : | திரு. த. இராஜேஸ்வரன் |
| நிருவாகச் செயலாளர்: | | திரு. இரா. மகேஸ்வரன் |
| பொருளாளர் | : | திரு. வ. தர்மதாசன் |
| செயற்குழு | | |
| உறுப்பினர்கள் | : | திரு. ஏ. அரியரட்ணம் |
| | | திரு. கே. நீலகண்டன் |
| | | திரு. ரி. சிவசுப்பிரமணியம் |
| | | திரு. எஸ். சிவராஜசிங்கம் |
| | | கலாநிதி. எஸ். திருச்செல்வம் |
| | | திரு. வீ. சிவயோகலிங்கம் |
| | | கலாநிதி ரி. சிவானந்தவேள் |
| | | திரு. ரி. நந்தகுமார் |
| | | திரு. பி. தயான் |
| | | திரு. வீ. சனாதனன் |
| | | திரு. எஸ். மோகனஜீவ் |
| | | திரு. ரி. ஜெயராஜ் |

## 1952 ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள், தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1952/57 | பேராசிரியர் ரி.ஆர்.வீ.மூர்த்தி | |
| 1957/58 | பேராசிரியர் த. நடராஜா | திரு. ஏ. முத்துகிருஷ்ணன் |
| 1959/62 | | |
| 1962/63 | பேராசிரியர் த.நடராஜா | திரு க. சிவஜோதி |
| 1963/64 | பேராசிரியர் த.நடராஜா | |
| 1964/65 | பேராசிரியர் த.நடராஜா | திரு.எஸ்.நவரட்ணராஜா |
| 1965/66 | பேராசிரியர் த.நடராஜா | திரு.மு.கனகரட்ணம் |
| 1966/67 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.து.அப்புலிங்கம் |
| 1967/68 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.கு.சண்முகநாதன் |
| 1968/69 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.கிருஷ்ணானந்தசிவம் |
| 1969/70 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.ந.சுகுமாரன் |
| 1970/71 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.ஜெயபாலன் |
| 1971/72 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.என்.சந்திரகாந்தன் |
| 1972/73 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.என்.சந்திரகாந்தன் |
| 1973/74 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.பா.பத்மநாதன் |
| 1974/75 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.குமரேசன் |
| 1975/76 | பேராசிரியர் சி.தில்லைநாதன | திரு.கு.கந்தசாமி |
| 1976/77 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு.கு.கந்தசாமி |
| 1977/78 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு.இ.கைலாசநாதன் |
| 1978/79 | பேராசிரியர் சிபாலசுப்பிரமணியம் | திரு.எஸ்.சிவானந்தன் |
| 1979/80 | பேராசிரியர் சிபாலசுப்பிரமணியம் | திரு.கு.சிவகணேசன் |
| 1980/81 | பேராசிரியர் சிபாலசுப்பிரமணியம் | திரு.பொ.யுசீலாநந்தன் |

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1981/82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.ச.தயாபரன் |
| 1982/83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.சி.பாலகிருஷ்ணன் |
| 1983/84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.சி.பாலகிருஷ்ணன் |
| 1984/85 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.ஏ.விஜயரஞ்சன் |
| 1985/86 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.ஏ.விஜயரஞ்சன் |
| 1986/87 | கலாநிதி.சி.சிவயோகநாதன் | திரு.பீ.தயாபரன் |
| 1987/88 | கலாநிதி.சி.சிவயோகநாதன் | திரு.பீ.தயாபரன் |
| 1988/89 | கலாநிதி.சி.சிவயோகநாதன் | திரு.எஸ்.குகநேசன் |
| 1989/90 | கலாநிதி. து. விநாயகலிங்கம் | திரு.இ.சந்திரகுமார் |
| 1990/91 | திரு. து. விநாயகலிங்கம் | திரு.செ.இரவீந்திரநாதன் |
| 1991/92 | திரு. து. விநாயகலிங்கம் | திரு.க.வல்லபவானாந்தன் |
| 1992/93 | திரு.இ.சிவகணேசன் | திரு.தி.நவநீதன் |
| 1993/94 | | திரு.ச.கணேசநாதன் |
| 1994/95 | | திரு.க.நந்தகுமார் |
| 1995/96 | | திரு.பா.சஞ்சயன் |
| 1996/97 | | |
| 1997/98 | | திரு.உ.தயசீலன் |
| 1998/99 | | திரு.க.இராகவன் |
| 1999/00 | கலாநிதி.செ.திருசசெல்வம் | திரு.நே.ராஜரூபன் |
| 2000/01 | | திரு.க.கருணாநிதி |
| 2001/02 | | திரு.இ.மயூரன் |
| 2002/03 | | திரு.ச.சிவஜோதி |
| 2003/04 | | திரு.து.அரவிந்தன் |
| 2004/05 | | திரு.ப.தயாபரன் |
| 2005/06 | | திரு.தெ.நந்தகுமார் |
| 2006 | | திரு.சா.மோகனஜீவ் |

## 2005 / 2006ம் ஆண்டிற்கான இந்து மாணவர் சங்க 49 வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

| | |
|---|---|
| 2005.03.08 | எமது செயற்குழு பொறுப்பேற்கப்பட்டது |
| 2005.04.14 | பார்த்திப வருடப் பிறப்பு - விஷேட அபிஷேகப் பூஜை |
| 2005.04.24 | சித்திரா பூரணை விஷேட அபிஷேகப் பூஜை |
| 2005.05.01 | நடேசர் அபிஷேகம், நடேசர் தரிசனம் |
| 2005.07.13 | நடேசர் அபிஷேகம், நடேசர் தரிசனம், மணவாளக் கோல தின நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம், திருவூஞ்சல் |
| 2005.08.04 | ஆடி அமாவாசை விஷேட அபிஷேகப் பூஜை |
| 2005.08.08 | ஆடிப்பூரம் |
| 2005.08.26 | கிருஷ்ண ஜெயந்தி விஷேட பூஜை, விநாயகர் சதுர்த்தி பூஜை |
| 2005.10.04 | நவராத்திரி விரதாரம்பம் |
| 2005.10.07 | இலக்குமி பூஜை (முதலாம் நாள்) |
| 2005.10.10 | சரஸ்வதி பூஜை (முதலாம், இரண்டாம் நாள் பூஜை) |
| 2005.10.12 | விஜயதசமி உற்சவம் (மானம்பூ) |
| 2005.11.01 | தீபாவளி |
| 2005.11.02 | ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் |
| 2005.11.07 | ஸ்கந்த ஷஷ்டி பூர்த்தி (சூரஸம்காரம்) |
| 2005.11.08 | திருக்கல்யாணம் |
| 2005.12.13 | திருக்கார்த்திகை உற்சவம் |
| 2005.12.14 | விஷ்ணுவாலய தீபம் |
| 2006.01.04 | திருவெம்பாவை ஆரம்பம், விநாயகர் சதுர்த்தி உற்சவம் |
| 2006.01.13 | நடேசர் ஆருத்ரா அபிஷேகமும், தரிசனமும் |
| 2006.01.14 | தைப்பொங்கல் விழா (7 பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஆலயத்தில் பொங்கி சிறப்பாகக் கொண்டாடினார்கள்) |

***இணைச் செயலாளர்கள்***
***வே.சனாதனன்***
***ஆ.மல்லிகா***



சூரன் போரின்போது பிடிக்கப்பட்ட சில காட்சிகள்



*With best compliments from*

2005ம் ஆண்டு இந்து தருமம் மலருக்கு எமது வாழ்த்துக்கள்

# ஜயந்தீல்



## Dealers in Textiles

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான
இறக்குமதி செய்யப்பட்ட
ஆடை வகைகளை பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய இடம்

இல. 106, கொழும்பு வீதி, கண்டி.
தொ.பே.: 081-2222464

*With best compliments from*

# PALAYAKATS MEGA STORE





# 76, Colombo Street,
Kandy.
T. P: 081-2232554 / 2223654

*With best compliments from*

# மெற்றோ
## ரேடர்ஸ்



**Vavuniya**

*With best compliments from*

"பசுவதை மகா கொடிய பாவம்"

# வேணி
## களஞ்சியம்

தாயானவர் தன்
குழந்தைகளுக்கு மட்டும்
தன் பாலைக் கொடுக்கிறார்கள்.
ஆனால் நாங்களோ
உலகில் உள்ள
மானிடம் யாவருக்கும்
தருகிறோம்.
என்னை இன்று புசிகலாமா?
மானிடமே சிந்தித்திடு.




இல.165, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 021-2222046, 021-2222661

*With best compliments from*

**Gifts Selected From**

# FASHION
## HOUSE




# 65, K.K.S. Road,
Jaffna
T.P: 021-2223034,2222197

*With best compliments from*

**சாமி பல்பொருள்**
**களஞ்சியம்**



# SAMI
## STORES




# 313, K.K.S. Road,
Jaffna
T.P: 021-2229294

*With best compliments from*

இந்து தருமத்திற்கு எமது
வாழ்த்துக்கள்

## GEETHA JEWELL HOUSE

## கீதா ஆபரண மாளிகை



சகல விதமான
நகைகளும்
குறித்த
தவணையில்
செய்து
கொடுக்கப்படும்

*No.: 12, New Market,*
*Kandy Road,*
*Chavakachcheri.*
*T.P: 0777-737336*

*With best compliments from*


## வதனி

ஜுவலறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

நவீன அழகிய
தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த
ஸ்தாபனம்



கண்டி வீதி,
சாவகச்சேரி.

*With best compliments from*

# BAVANI STORES

## பவானி களஞ்சியம்



சி.ஐ.சி.தயாரிப்புகளான உரம்,
மருந்து வகைகள், தண்ணீர்
தாங்கிகள், அஸ்கத்தின் பைப், கோழித்தீன்
மற்றும் தரமான
கட்டிடப்பொருட்கள்,
ஓடுகள், கூரைத்தகடுகள்,
பலசரக்கு பொருட்கள் என்பவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

Distributors for
CIC




Raja Veethy, Neervely North, Neervely.
T.P.: 070-212363, 2222371, 2222372

*With best compliments from*

# THE INTERNATIONAL HARDWARE

*Authorized Dealers for Robbialac,*
*Factory Requirement,*
*Hardwares*
*&*
*Estate Suppliers*



**# 60, D.S.Senanayake Veediya, Kandy.**
**T.P: 081-2223432, 081-2222220**

*With best compliments from*

இந்து தருமம் 2005 வெளியீட்டை
வாழ்த்துகின்றோம்

# HOTEL SAUMIYA

சுத்தமான சுவையான
சகல விதமான சைவ,
அசைவ உணவு வகைகளை
பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய
இடம்



**# 9, D.S.Senanayake Veediya, Kandy.**

*With best compliments from*

# SRI MURUGAN'S



**Wholesale**
**&**
**Retail Dealers in**
**Textiles**




**# 94, Colombo Street, Kandy.**
**T.P: 081-2223399**

*With best compliments from*

இந்து தருமத்திற்கு எமது
வாழ்த்துக்கள்

# சித்ரா ஜுவலர்ஸ்




இல. 41, டி.எஸ்.சேனாநாயக்க வீதி,
கண்டி.

*With best compliments from*

# ROCK FURNITURE





கண்டி வீதி, (சுற்றுவளைவு முன்பாக)
சாவகச்சேரி. T.P :0776-362445, 0773-545231

இல. 316, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை முன்பாக, யாழ்ப்பாணம்.
T.P :077-3126896

*With best compliments from*



இந்து தருமத்திற்கு
எமது வாழ்த்துக்கள்

# NAGALINGAMS JEWELLERS

**# 101, Colombo Street,**
**Kandy.**
**T.P: 081-2232545**

*With best compliments from*

# V.M.K. JEWELLERS



Genuine
22 Kt Jewellery
Manufacturing
Jewellers


**Kandy Road, Chavakachcheri.**
**T.P: 070-212989, 0777-723021**

*With best compliments from*

# உதய கதிரவன்
## நகை மாடம்

தங்க பவுண் நகை வியாபாரம்

22 கரட்
தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்



* நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
* பழைய பவுண், பொன், வெள்ளி ஆகியற்றை கூடிய விலையில் விற்கவும் நீங்கள் நாட வேண்டிய இடம்



**இல. 172, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*With best compliments from*

## ALDI ELECTRONICS



Dealers in Watches,
Radios, Clock, TV, Deck,
Computer, Accessories,
Audio, Video,
DVD, CD & Players



# 15, Stanley Road, Jaffna.
Tel: 021-2222676
E-Mail aldielec@sltnet.lk

*With best compliments from*

## NEW BAMA Hardware



# 11/3, Stanley Road,
Jaffna.

*With best compliments from*


## SHIVASAKTHI JEWELLERY



# 222, Kasthuriar Road,
Jaffna.
T.P: 0777-149396

*With best compliments from*

## A.S.Arumugam & Sons



# 81, Stanley Road,
Jaffna.

*With best compliments from*

# Sivakanesan Textiles




**Wholesale**

**&**

**Retail Dealers in Textiles**


**Specialist in Wedding Sarees**




# 41, Grand Bazaar,
Jaffna.
Tel: 021-2222063


*With best compliments from*

# ஹரிணி



# ஹாட்வெயார்





# **164**, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


**T.P: 021-2222850**

*With best compliments from*

குறிஞ்சிக்குமரன் அருளால்

வெளிவரும் இந்து தருமம் இதழுக்கு எமது வாழ்த்துக்கள்





# ஸ்ரீ கணேசானந்தா பிராமணாள் சைவ உணவகம்

சுத்தமான சுவையான சைவ உணவுகளுக்கு

கண்டி மாநகரிலே

நாட வேண்டிய இடம்


இல. 42, பேராதனை வீதி, கண்டி.

**T.P: 081-2223489, 081-2233281**

*With best compliments from*

இந்து தருமத்திற்கு எமது வாழ்த்துக்கள்


# வசந்தாஸ்



நகையகம்

மற்றும்

நகை அடகு பிடிப்போர்



இல. 56, டி.எஸ்.சேனாநாயக்க வீதி, கண்டி.

T.P: 0094-812233151, 0094-812224300

Fax : 0094-812223627

*With best compliments from*

# Kajamugan
## Hardware



\# 147,149, Stanley Road,
Jaffna.
Tel: 021-2222833

*With best compliments from*

**K. P. K. Centre**


Vavuniya



**வியாபாரம்**
**பெருக**
**விளம்பரம்**
**செய்க**

*With best compliments from*

## Ramachchandra's



\# 20 A, Bus Stand Complex,
Vavuniya.

*With best compliments from*

## MAYOORA Gift Centre

மயூரா
அன்பளிப்பு
அகம்



\# 14, New Market, (Outside),
Power House Road, Jaffna.
T.P.: 021-2222084

*With best compliments from*

*With best compliments from*

## லாவண்யா குகன்



ஸ்
டோ
ர்
ஸ்



*With best compliments from*

# RUBA VERSATILE TRADERS

# 104-A, Stanley Road, Jaffna.

*With best compliments from*

# *Arul Vinayagar Traders*

# 106, Stanley Road, Jaffna.

*With best compliments from*

குறிஞ்சிக்குமரன் அருளால் இந்து தருமம் மலர்
வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி
அடைகின்றோம்

# சுமங்கலி
# புடவையகம்

SUMANGALI





ஆண்கள்,
பெண்கள், சிறுவர்களுக்கான
இறக்குமதி செய்யப்பட்ட
நவநாகரீக ஆடையணிகளைப்
பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய
இடம்



**16, A 9 வீதி,**
**சாவகச்சேரி.**

*With best compliments from*

# GOKULAN STORES

General Merchant




# 19, Bus Stand,
Vavuniya.

*With best compliments from*

# GAGEN CENTRE

Book & Stationery



# 25, Bus Stand,
Vavuniya.
T.P.:024-2222476

*With best compliments from*

# கருணைக்கடல்



கந்தா குமரா என வந்தான் பவன் வேலன்

மந்தாரை மலர்மலி மலையகம் வாழ்பவன்


துந்தாளப் பல்கலை வந்துவன் செந்தமிழ்ச்

சிந்தா மணிகுகன் சிவசுப்பிரமணியன்

அ. அரியரத்தினம்,
இல.215, கொழும்பு வீதி, கண்டி.

*With best compliments from*

## THIRUMURUGAN COM NET



Communication
&
Computer
Systems

WESTERN UNION
Money Transfer

# 259, K.K.S Road, Jaffna.
Hot Line: 0777-554528
Tel: 021-2227835, Fax:021-2227836
E-Mail: thirumuruglan@lycosmail.com

*With best compliments from*

## ஏகாம்பரம் புடவை மாளிகை

**Wholesale & Retail Dealers in Textiles**



இல.72(9), பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2222151

*With best compliments from*

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை



மாணவர்களுக்கான பாடசாலை
நூல்கள், பயிற்சி நூல்கள்,
பொது அறிவு, விஞ்ஞான அறிவு,
கம்பியூட்டர், இந்து சமய, தமிழ்
இலக்கிய நூல்களும்,
தமிழக, ஈழத்து நாவல்கள்
மற்றும் அனைத்து வகையான
நூல்களையும் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

# 234, கே.கே.எஸ்.வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2222573

*With best compliments from*

## யாழ் காலணியகம்

**Agent for Bata**



சிறுவர்
முதல்
பெரியோர்
வரை
பாட்டா
காலணிகளுக்கு
நாட வேண்டிய
இடம்

# 11, Modern Market,
Hospital Road, Jaffna.
T.P: 021-2223152

தழுக்கு உதவிய,
ணையற்ற இதயங்களுக்கும்,
தூய பூர்வமான நன்றிகள்...

- இவ்விதழை நல்லபடியாக வெளியிடுவதற்கு இன்னருளை வழங்கிய குன்றினில் ஆடும் குறிஞ்சிக்குமரனுக்கு பலகோடி நன்றிகளை பணிவாக நவின்று மனதாலே மாலின் மருமகனை வணங்குகின்றோம்.

- ஆசியுரைகள், அருளிச்செய்த ஆலயப்பிரதம குரு சிவஸ்ரீ பா. நித்தியானந்தக்குருக்கள், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செற்சொற செல்வன் ஆறு.திருமுருகன் ஆகியோருக்கும்,

- வாழ்த்துச் செய்திகளை வரைந்து தந்த பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஏ. கபில குணசேகர, இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர், பெரும் பொருளாளர், கௌரவ கணக்காளர் பொறுப்பாண்மைக் குழுத்தலைவர், இந்துப்பட்டதாரிகள் சங்கத்தலைவர் ஆகியோருக்கும்,

- அறிவுலகுக்கு ஆக்கங்களை தந்த பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும்,

- குறிஞ்சிச்சாரல் பற்றிய விமர்சனம் தந்த கலாநிதி மகேஸ்வரன் அவர்களுக்கும்,

- ஆக்கங்களை தந்துதவிய அன்பான மாணவர்களுக்கும்,

- மலர் மலர மனமுவந்து விளம்பரங்களை தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்,

- விளம்பரம் சேர்ப்பதற்கு உதவிய கனிஷ்ட மாணவர்களுக்கும்,

- ஆலோசனைகள் வழங்கிய செல்வன் அ. சனந்தனன், செல்வன் எஸ். சுதாகரன் ஆகியோருக்கும்,

- இம் மலரை அழகுற அச்சிட்டு அழகு செய்த வினோ பிரின்டெல் அச்சகத்தைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும்

- இந்து தருமம் மலர் மலருவதற்கு உதவிய அனைத்து உதவும் உள்ளங்களுக்கும்,

நன்றிகள் பலகோடி
நவில்கின்றேன்.

வி. மன்மதராஜன்,
இதழாசிரியர்.

*With Best Compliments from*



# SEAGULL PROPERTY DEVELOPERS (PVT) LTD.

(A BOI Approved Company)

**12, Melbourne Avenue,**
**Colombo - 04, Sri Lanka.**

---

**Mobile: +94(0777)317075 Phone: +94(0112)503266**
**Fax: +94(0112)360481**

**mail to : vakeesan@lanka.ccom.lk or visit us at : www.seagullonline.com**